

ஐ.தே.கட்சியும் பக். 14



வாக்கிய நட்ராஜ் பக். 15



அரையிறுதிக்கு தகுதி பக். 30



பக். 31


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 60

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 089 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 11, ஞாயிறு 23.02.2014


கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


உதயன் அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே...


## தமிழர் கொலைக்குப் பழிவாங்கும் வகையில் ஜனாதிபதியின் நிகழ்வில் குண்டு வெடிக்கும்

### பொலிஸாருக்கு வந்த கடிதத்தால் பரபரப்பு

கொழும்பு.பெப்.23
போரின்போது தமிழ்மக்கள் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்தவின் நிகழ்வு ஒன்றில் குண்டுவெடிக்கும் என்றுபொலிஸாருக்குக் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.
தமக்குக் கிடைத்த கடிதம் போலியானது என்றும் அதனை அனுப்பியவர்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
ஜனாதிபதியின் தலைமையில் இன்று முழுவதும் புத்தளத்தின் பல பாகங்களிலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதன் போது. புத்தளம் சாஹிரா முஸ்

29 ஆம் பக்கம் பார்க்க

## சிங்களக் குடியேற்றம் குறித்தும் ஜெனிவாவில் அமெ. அறிக்கை

### நாவற்குழியில் சிங்களவருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்.பெப்.23
நாவற்குழியில் குடியமர்ந்துள்ள சிங்களக் குடும்பங்களிடம் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிங்களக் குடியேற்றம் தொடர்பிலான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமெரிக்கா செயற்பட்டு எதிர்வரும் ஜெனிவா அமர்வில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக அரச தரப்பை மேற்கோள்

29 ஆம் பக்கம் பார்க்க



பொலிஸ் விசாரணையின் போது

## தினப்புயல் அலுவலகம் மீது தாக்குதல்

வவுனியா.பெப்.23
வவுனியாவிலிருந்து வெளிவரும் வாராந்தப் பத்திரிகை ஒன்றின் அலுவலகத்தின் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தினப்புயல் என்ற வாராந்தப் பத்திரிகையின் அலுவலகத்

29 ஆம் பக்கம் பார்க்க

# ஜெனிவாவில் ஆதரவு திரட்ட நியமனமானது சிறப்புக் குழு

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிரடி நடவடிக்கை
### மேல்மாகாணத்தில் மனோவை ஆதரிக்கவும் முடிவு

கொழும்பு, பெப்ரவரி 23
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது எதிர்வரும் மார்ச் மாதம் அமெரிக்காவால் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்துக்கு மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான பரப்புரைகளில் ஈடுபடுவதற்கென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறப்புக் குழு ஒன்றை நியமித்துள்ளது.
"இந்தக் குழுவினர் மனித உரிமைகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் இந்தியா உள்ளிட்ட 47 நாடுகளின் பிரதிநிதிகளையும் நேரடியாகச் சந்தித்து ஆதரவு திரட்டும் முயற்சியில் ஈடுபடுவர்" என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் கொழும்பில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இதில் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் செயலாளர் மாவை.சேனாதிராசா உள்ளிட்ட வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

29 ஆம் பக்கம் பார்க்க

## மோதல் தவிர்ப்பு வலயத்துக்கு இந்தியாவில் தடை

சென்னை.பெப்.23
இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான கெலும் மக்ரேயின் 'மோதல் தவிர்ப்பு வலயம்' என்ற ஆவணப்படத்தை இந்தியாவில் திரையிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில், 'ஒன்லைன்' ஊடாக அதனை இன்று முதல் ஒளிபரப்பவுள்ளதாக ஆவணப் படத்தின் இயக்குனர் கெலும்

29 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண அமைச்சரவை முடிவுகளில் இரகசியம்

யாழ்ப்பாணம்,பெப்.23
வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பில் தங்களுக்குத் தெரியப்படுத்தப் படுவதில்லை என்று ஆளுங் கட்சி உறுப்பினர்களே குற்றம் சாட்டியுள்ளனர்.
வடக்கு மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பெடுத்து ஐந்து மாதங்கள் கடக்கின்றன. முதலமைச்

29 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாவில் வெல்வதற்கு கொட்டகலையில் யாகம்

### கேரளாவிலிருந்து வந்தனர் நம்பூதிமார்

கொழும்பு.பெப்.23
ஜெனிவா பிரேரணையில் வெற்றி பெறுவதற்காக ஜனாதிபதி தலைமையில் கொட்டகலையில் இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்து அழைத்து வரப்பட்ட நம்பூதிமார் பெரும் யாகம் நடத்தியுள்ளனர்.

29 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா அமர்வை நேரில் காண வசதி

சென்னை,பெப்.23
ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் கடைசி வாரத்தில் நடைபெறஉள்ளஐ.நா. மனிதஉரிமைகள் சபைக் கூட்டத்தை நேரில் காண்பதற்கான வாய்ப்பை சர்வதேச மன்னிப்புச் சபை பொதுமக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.
சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியக் கிளையினால் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட உள்ள தீர்மான நிகழ்வுகளை நீங்கள் நேரடியாகக்

29 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக செய்தியாளர் கச்சதீவு வரத் தடை

யாழ்ப்பாணம்.பெப்.23
கச்சதீவு உற்சவத்துக்குத் தமிழ்நாட்டு ஊடகவியலாளர்கள் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அறிவித்தல் இராமநாதபுரம் மாவட்டச் செயலர் மற்றும் கியூ பிரிவுப் பொலிஸாரால் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
இந்திய-இலங்கைக் கடல் எல்

29 ஆம் பக்கம் பார்க்க

## கெஹலியவுக்கு சிவஞானம் பதில்

யாழ்ப்பாணம்.பெப்.23
வடக்கு மாகாண சபையின் தீர்மானங்களில் சொல்லப்பட்டுள்ள விடயங்களைத் தெரிந்து கொள்ளாமல் கருத்துக்களை வெளியிடுவதானது,நல்லிணக்கச் செயற்பாடுகளைப் பாதிக்கும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞா

29 ஆம் பக்கம் பார்க்க

## புதைகுழி விசாரணைகளில் தலையிடவேண்டும் ஐ.நா.

### ஆசிய மனித உரிமை ஆணையம் வலியுறுத்து

கொழும்பு.பெப்.23
மாத்தளை மற்றும் மன்னார் புதைகுழிகள் தொடர்பிலான விசாரணைகளில் ஐ.நா சபை தலையிடவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஆசிய மனித உரிமைகள் ஆணையம், இது தொடர்பில் ஐ.நா. மனித உரி

29 ஆம் பக்கம் பார்க்க

## சாந்தன், முருகன், அறிவின் விடுதலைக்கு 75% ஆதரவு

### இந்தியா முழுவதும் காங்கிரஸுக்கு எதிர் நிலை

கொழும்பு, பெப்.23
ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டவர்களான சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவரையும் விடுவிக்க வேண்டும் என்று ஆதரவு பெருகி வருகின்றது.
இந்தியாவில் இருந்து வெளிவரும் 'தி ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை இது தொடர்பில் இணையம் மூலம் கருத்துக் கணிப்பு நடத்துகிறது. அதில் தூக்குத் தண்டனையில் இருந்து தப்பிய மூவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்ற கருத்துக்கு நேற்று வரையில் 75 வீதமானவர்கள்

29 ஆம் பக்கம் பார்க்க



நேற்றைய மீட்பின் போது

# 79

மன்னார், பெப் 23
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 79 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.
நேற்றுச் சனிக்கிழமை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் 29 ஆவது தடவையாகப் புதைகுழி தோண்டும் பணிகள் இடம்பெற்றன. இதன்போது மேலும் 2 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
நேற்றைய புதைகுழி தோண்டும் பணியின் போது அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ண தலைமையிலான

29 ஆம் பக்கம் பார்க்க

## வேலையற்ற இளைஞர்களின் விவரம் திரட்டும் இராணுவம்

முல்லைத்தீவு.பெப் 23
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வேலையற்ற இளைஞர்,யுவதிகளின் விவரங்களைக் கிராம சேவையாளர்களிடமிருந்து இராணுவத்தினர் கோரி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் ஒவ்வொரு கிராம

29 ஆம் பக்கம் பார்க்க


softlogic இன் அதிரடி விற்பனை!
Fantastic February


யாழ்ப்பாணக் காட்சியறையில் மாத்திரம்
(கன்னாதிட்டி சந்தி)
5600 /= வுடன்
TV ஒன்றைப் பெற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு
தொடர்புக்கு: மேலதிக விவரம் உள்ளே
இல.63, கன்னாதிட்டி சந்தி. 0777 399 929

## சிறுமி துஷ்பிரயோகம் சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்,23

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 வயதுக்குட்பட்ட சிறுமி ஒருத்தியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அந்த பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஜ-4)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை விடுவித்தால் வடக்கு ஆயுதக் குழுக்களுக்கு தலைமையேற்பர்

*சிங்கள ஊடகமான மௌபிம கூறுகிறது*



மௌபிம வெளியிட்டுள்ள முகப்புப்படம்

கொழும்பு, பெப்.23

ராஜுவ்காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகளை விடுவித்தால் அவர்கள் இலங்கைக்கு வந்து வடபகுதியில் இயங்கும் ஆய்புதக் குழுக்களுக்குத் தலைமை தாங்குவர் என்றும் இதனால் இலங்கைக்குப் பாதிப்பு ஏற்படும் எனவும் சிங்கள ஊடகமான மௌபிம தெரிவித்துள்ளது.

குறித்த ஊடகத்தின் வாராந்தப் பதிப்பின் தலைப்புச் செய்தியாக இதனை வெளியிட்டுள்ளதுடன், நளினி உள்ளிட்ட 7 பேரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சீருடையுடன் இருப்பது போன்று படமும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில், இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கொலைக் குற்றம் நிரூபிக்கப் பட்ட 4 பேரையும், தமிழக அரசின் தீர்மானத்துக்கு அமைவாக விடுவித்தால் அது இலங்கை - இந்திய உறவில் விரிசலை ஏற்படுத்தும்.

சாந்தன், முருகன், பேரறிவாளன், றொபேர்ட் ஆகிய நால்வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள். இவர்களை தமிழக அரசின் தீர்மானத்தின் பிரகாரம் விடுதலை செய்தால், இந்திய அரசின் குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் பிரகாரம் இந்தியாவில் வைத்திருக்க முடியாது. இலங்கைக்கு நாடு கடத்தப் படும் அவர்களை இலங்கை ஏற்காமலும் விடமுடியாது.

தற்போது வடக்கில் 6 ஆயுதக் குழுக்கள் இயங்கி வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களான 4 பேரும் வடபகுதிக்குச் செல்வார்களாக இருந்தால் மேற்படி ஆயுதக் குழுக்களுக்கு தலைமை தாங்குவார்கள். இதனால் மீண்டும் பிரச்சினை தோன்றும் என்று குறித்த சிங்கள ஊடகம் 'அரசியல் அவதானிகளை' மேற்கோள்காட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது. (த-5)

# கூட்டமைப்புடன் பேசுவதில் அரசுக்குச் சிக்கல் இல்லை

*அமைச்சர் ராஜித கூறுகிறார்*

கொழும்பு, பெப்.23

அரசியல் தீர்வு தொடர்பில் இணக்கப்பாட்டை எட்டிக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வருமுன்னர் கூட்டமைப்புடன் அரசு இரு தரப்பு பேச்சுக்களை நடத்தலாம். தமிழ்க் கூட்டமைப்பும் இந்த நாட்டின் ஒரு அரசியல் கட்சி என்ற அடிப்படையில் அவர்களுடன் நேரடி பேச்சுக்களை நடத்துவதில் பெரும் சிக்கல்கள் இருப்பதாக தெரியவில்லை என்று மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மேலும் தென்னாபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்ற உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை இலங்கையில் விரைவில் நிறுவி அதன் செயற்பாடுகளை முன்னெடுத்தால் சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபட முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசுடன் தீர்வுக்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பில் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னரே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரமுடியும் என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை மற்றும் தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஆராய அரச தூதுக் குழு அந்நாட்டுக்கு சென்றுள்ளமை போன்ற விடயங்கள் குறித்து விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தென்னாபிரிக்காவின் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் செயற்பாடுகளை ஆராய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் அமைச்சர்கள் மட்ட தூதுக் குழு தென்னாபிரிக்கா சென்றுள்ளது. மேலும் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமோ விசேட பிரதிநிதி ஒருவரையும் கடந்த வாரம் நியமித்திருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் குறிப்பிடுகையில்,

தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்டதைப் போன்றதொரு உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை இலங்கையில் உருவாக்குவது சிறப்பான விடயமாக அமையும். அதனை விரைவில் ஆராய்ந்து இலங்கையில் அது போன்றதொரு குழுவை நியமிப்பதன்மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும்.

அதாவது தென்னாபிரிக்காவில்நிறுவப்பட்ட உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை. எனவே அது பொருத்தமான செயற்பாடாக இருக்கும். தற்போதைய நிலைமையில் இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை நியமித்து செயற்படுத்துவதன் மூலம் அழுத்தங்களை குறைக்க முடியும். எதிர்வரும்மார்ச்மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வந்தாலும் கொண்டுவராவிட்டாலும் அரசு உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவை நியமித்து செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம். எதிர் காலத்தில் அது சர்வதேச அழுத்தங்களை நிச்சயம் குறைக்கும்.

மேலும் தென்னாபிரிக்காவைப் போன்றதொரு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்க நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோருகின்றோம்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வரவழைத்து அரசியல் தீர்வுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதும் மிகவும் அவசியமாகும். இந்தநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசுடன் பேச்சு நடத்தி நிகழ்ச்சி நிரல் குறித்த இணக் கப்பாட்டுக்கு வந்த பின்னரே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதாக அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைத்துள்ளமையினால் அரசு கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்தலாம் என்றே நான் கருதுகின்றேன் - என்றார். (த)

## வட மாகாண சபை அதிகாரிகளின் பதவிப் பெயர்ப் பலகைகள் தமிழில்

*பிரதம செயலாளருக்கு அவைத் தலைவர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம்,பெப்.23

வடக்கு மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ளடங்கும் அமைச்சுக்கள், திணைக்களங்களின் அதிகாரிகளின் பதவிப் பெயர்ப் பலகைகளைத் தமிழ் மொழியில் காட்சிப் படுத்த நடவடிக்கை எடுக்கு மாறும், இதற்குரிய பணிப்புரையினை உடனடியாக வழங்குமாறும் பிரதம செயலாளருக்கு, அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் வாகனங்களில் மும்மொழிக் கொள்கை கடைப் பிடிக்கப்படாதமை தொடர்பில் ஊடகங்களால் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் கட் டுப்பாட்டுக்குள் உள்ளடங்கும் அமைச்சுக்கள் மற்றும் திணைக் கள அதிகாரிகளின் வாகனங்களில் அவர்களின் பதவிப் பெயர்ப்பலகையைத் தமிழ் மொழியில் காட்சிப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சகலருக்கும் பணிப் புரை வழங்கவேண்டும் என வடக்கு மாகாண அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கடிதம் மூலம் வட மாகாண பிரதம செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பின் பிரதிகள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் அரச அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த-5)

## துப்பாக்கி ரவை வெடித்ததில் முல்லைத்தீவில் பெண் காயம்

முல்லைத்தீவு,பெப்,23

முல்லைத்தீவு குமாரபுரம் பகுதியில் வீட்டு வளவை துப்புரவு செய்து, குப்பைக்கு தீ மூட்டிய சமயம் அதிலிருந்து துப்பாக்கி ரவை வெடித்ததில் குடும்ப பெண் ஒருவர் காயமடைந்தார்.

இந்த சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

இதில் விக்னேஸ்வரன் கரிச்சந்திராதேவி (வயது-50) என்பவர் கையில் காயமடைந்து மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஜ-ரி)

என்றும் எமது கிராம மக்களே
இனியும் இவரை நம்பி ஏமாற வேண்டாம்
உங்கள் தனி முடிவில் சிந்தித்துச்
செயல் படுங்கள்
இவர் தமிழினத்தை ஏமாத்தும் ஒரு
பம்மாத்துப் பொம்மை டெனிஸ்
இவர் சத்தும் அற்ற அமைச்சர் டெனிஸ்

மீண்டும் றிசாட் வருவார்
அச்சமில்லை எதிர் பாருங்கள்



மன்னார் இரணை இலுப்பைக்குளத்தில் அமைந் திருந்த வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் கட்டவுட் மீது இனந் தெரியாதோரால் ஓயில் வீசப்பட்டுள் ளது. அத்துடன் அதற்கு அருகில் துண்டுப் பிரசுரம் ஒன்றும் ஒட்டப்பட்டிருந்தது. அதில் அமைச்சர் டெனீஸ்வரன் ஏமாற்றுக்காரன் என்றும் மீண்டும் ரிசாத் வருவார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-402)

FRENCH LANGUAGE CENTRE
FALC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 774 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி...
Note: எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ் ஆரியகுளத்தடி, நெல்லியடியில் மட்டுமே..
எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறார்கள்.......
ஆரம்பம் 08.03.14 8.30am No. 40, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்தடி)
ஆரம்பம் 11.03.14 at 11am No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456

எமது ஆலோசனையின் மூலம் வெற்றி பெற்ற விசாக்களை ஆய்வு செய்தபின் எம்முடன் நீங்கள் இணைந்து கொள்ளலாம்

* இலங்கைத் தீவில் எமது ஆலோசனையில் மட்டும் கனடாவில் படிக்க, உழைக்க 5 வருட விசா
* இத்தாலி உடன் பறக்க சட்ட ஆலோசனை
* செங்கென் நாடுகளுக்கு (பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெயின்) உடன் பறக்க அரிய வாய்ப்பு
* IELTS இல்லாமலே சைப்பிரஸ், நியூசிலாந்து படிக்க, உழைக்கும் வாய்ப்பு

(அனைத்தும் நிபந்தனைகளுக்கமைவாக)

7 நாள்களும் (சனி, ஞாயிறு உட்பட)
காலை 8 மணி - மாலை 6 மணிவரை திறந்திருக்கும்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com
(45011)(2.8)

## வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகளை பொருத்துக

**சாவகச்சேரி நகரப் பகுதியில்**

தென்மராட்சி, பெப்.19

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஏ-9 வீதியில் வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகளைப் பொருத்துமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர்.

வாகனங்கள் வேகமாகச் செல்வதால் விபத்துக்கள் அதிகமாக இடம்பெற்று வருவதைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் வரையான ஏ-9 வீதியில் வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகளைப் பொருத்துமாறு கேட்டுள்ளனர்.

குறித்த இரு பாடசாலைகளுக்கும் இடையில் மருத்துவமனை, பிரதேச செயலகம், மூன்று பாடசாலைகள், வங்கிகள், கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகம், வர்த்தக நிலையங்கள் போன்றவை அமைத்துள்ளன. இதனால் மக்களின் பயன்பாடு அதிகமாக உள்ளன. எனவே, வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகளை அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் கோரியுள்ளனர். (வ-9)

# வடக்கு மாகாண சபைத் தீர்மானத்தை தவறாகப் புரிந்து கொண்டுள்ளது அரசு

## மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் சாடல்

யாழ்ப்பாணம், பெப்.23

13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்புக்குள்ளேயே மாகாண சபை தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கு அப்பால் பேசக் கூடாதென்றும் மத்திய அரசு எதிர்பார்ப்பது ஜனநாயகத்தின் மீதான அவர்களின் புரிந்துணர்வு எத்தகையது என்பதையே காட்டுவதாக அமைந்துள்ளதாகச் சாடியுள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன், மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரி நிறைவேற்றப்பட்ட பிரேரணை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் ஆறாவது அமர்வில் மக்களின் போக்குவரத்து வசதிகள் கருதியும் வர்த்தக மற்றும் வாழ்வாதார வசதிகள் கருதியும் பலாலி விமானத் தளத்தை 80 ஆம் ஆண்டுக்கு முன்னரைப் போன்று சர்வதேச விமானப் போக்குவரத்துக்கான தளமாக செயற்படுத்த மத்திய அரசைக் கோரி மாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் தீர்மானம் முன்மொழிந்திருந்தார்.

இதே பொருளாதார காரணங்களுக்காகக் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள ஒரு வர்த்தகத் துறைமுகமாக மத்திய அரசால் செயற்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் என்னால் முன்மொழியப்பட்டிருந்தது.

ஏகமனதாக நிறைவேற்றம்

இவ்விரண்டு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது. 38 உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேறிய இந்தத் தீர்மானங்களை, மக்கள் ஆணையை மதிக்கின்ற ஜனநாயக அரசு என்று தன்னைக் கூறிக்கொள்கின்ற மத்திய அரசு ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டியது அதன் கடமை.

ஜனநாயக உரிமை

மேலும் இந்த மூன்று விடயங்களுமே நடைமுறையில் இருந்து போர் காரணமாக நிறுத்தப்பட்டவையாகும். ஜனநாயகச் செயன்முறையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எந்தப் பிரதிநிதிகள் சபையும் அந்த நாட்டின் அரசின் செயற்பாடுகள் தொடர்பாக தனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும் உரிமையுண்டு. இது அடிப்படை ஜனநாயக உரிமை மட்டுமன்றி ஜனநாயகக் கடமையுமாகும்.

ஆனால் இந்தத் தீர்மானங்கள் தொடர்பில் மத்திய அரசின் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விடம் பத்திரிகையாளர்கள் கேள்வியெழுப்பிய போது, வடக்கு மாகாண சபைக்கு விமானசேவை மற்றும் கப்பல் சேவை தொடர்பாக எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளும் அதிகாரம் கிடையாதெனவும், இது அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு உட்பட்டதல்ல என்றும் எனவே வடமாகாண சபைக்கு இந்த விடயம் தொடர்பாக எதனையும் கோரும் உரிமை கிடையாதெனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் 13 ஆவது திருத்தத்தின் படி விமான சேவை மற்றும் துறைமுகங்கள் முழுமையாக மத்திய அரசுக்கே உரியன என்றும் பதிலளித்துள்ளார்.

புரிந்துகொள்ளாமை

13 ஆவது திருத்தத்தில் மாகாண அரசுக்குரிய விடயங்கள் எனக் கூறப்பட்டுள்ளவைதவிர வேறெந்த விடயங்களையும் மாகாணசபையில் பேச முடியாது அல்லது பேசக் கூடாது என்ற சாரப்பட அமைச்சர் பதிலளித்திருப்பது ஜனநாயகத்தின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ளாமையை வெளிப்படுத்துகின்றது.

இவை முழுமையாக மத்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்டதென்றும் எனவே வடக்கு மாகாண சபை எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளும் அதிகாரம் இல்லை என்றும் அமைச்சர் பதிலளித்திருப்பதானது, மத்திய அரசை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானங்களை அவர் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதை வெளிப்படுத்துகின்றது. அனைத்துக்கும் மேலாக இவை ஏற்கனவே நடைமுறையில் இருந்து மீள ஆரம்பிக்கக் கோரும் தீர்மானங்கள் என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை என்றே தோன்றுகின்றது.

விடயஞானம் உள்ள பொறுப்புள்ள அமைச்சராக இருந்தால் வடக்கு மாகாண சபையின் தீர்மானங்களை மத்திய அரசு கவனத்திலெடுக்குமென்றோ அல்லது செயற்படுத்துமென்றோ பதிலளித்திருப்பார். மாறாக இலங்கையின் அண்மைக்கால வரலாறோ அல்லது ஜனநாயகம் பற்றிய அடிப்படைகளோ மாகாணசபைகளின் உரிமைகள், கடமைகளையோ புரிந்து கொள்ளாமல் அமைச்சர் பதிலளித்திருக்கிறார். இத்தகையவர்கள் மத்திய ஆட்சியில் அமைச்சர்களாக இருப்பது துரதிர்ஷ்டமானதே, என்று சர்வேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (து-5)

## கரவெட்டி பிரதேச சபைக்கு ஐந்து உப குழுக்கள் தெரிவு

வடமராட்சி, பெப்.23

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கென 5 உப குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் அபிவிருத்திக் குழு, சுகாதாரக் குழு, நிதிக்குழு, தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு, கேள்விச் சபைக் குழு ஆகிய 5 குழுக்களும் தெரிவாகின.

...பத் தலைவர் பொ.வியாகேசு தலைமையிலான இந்தக் குழுக்களில் அபிவிருத்திக் குழுவுக்கு சபைத் தலைவர் தலைமையில் உறுப் பினர்க்ளான பொ.குகதாஸ், க.பரஞ்சோதி, பொ.தம்பி முத்து, ந.கந்தசாமி, த.இராசையா, மு.ஜெகநாதன், க.பாலசுப் பிரமணியம், சே.பாலிராஜ் , சி.கணபதிப்பிள்ளை ஆகியோர் தெரிவானார்கள். ஆகக் கூடுதலாக 10 உறுப்பினர்கள் அபிவிருத்திக் குழுவிலும், ஆகக் குறைந்ததாக 05 உறுப்பினர்கள் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு, கேள்விச் சபைக் குழுக்களிலும் அங்கம் வகிக்கின்றனர். (கு-173)




யாழ்.பிரதேச செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நடமாடும் சேவையில் பிறப்புச் சான்றிதழ்கள், அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் விண்ணப்பங்களை வழங்குகின்றனர். (த-7)

## கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு பிறந்த நாள் பரிசாக தொலைக்காட்சி

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள படுக்கை நோயாளர்களின் பொழுது போக்கு நலன் கருதி யாழ். றோட்டறிக் கழகம் தொலைக் காட்சி ஒன்றை வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் விக்னேஸ்வரன் என்பவர் தனது சகோதரரின் பிறந்த நாளையொட்டிக் கடந்த சனிக்கிழமை யாழ்.மைய றோட்டறிக் கழகத்தினூடாக அளவில் கூடிய தொலைக்காட்சிப் பெட்டியை வழங்கியுள்ளார். படுக்கையில் உள்ள நீண்ட கால நோயாளிகளான முதியோர்களுக்கு தனியாக அமைக்கப்பட்ட விடுதியில் இந்தத் தொலைக்காட்சி பொருத்தப்படவுள்ளதாக முதியோர் இல்லப் பொறுப்பதிகாரி த.கிருபாகரன் தெரிவித்தார். (ஒ-9)

## சாவகச்சேரிக்கு கற்களை ஏற்றிவந்தது ரயில்



சாவகச்சேரியில் ரயில்

தென்மராட்சி, பெப்.23

சாவகச்சேரி வரை அமைக்கப்பட்டுள்ள தண்டவாளத்துக்கு கற்கள் பறிக்கும் பணி ரயில் மூலம் இடம்பெறுகிறது. ரயில் வரும் வேளையில் முதியோர், சிறுவர் என்ற வேறுபாடில்லாமல் பலர் வீதியோரங்களில் நின்று ரயில் வருவதைப் பார்வையிடுகின்றனர். (ரு-9)

## வலி.வடக்கு மீள்குடியமர்வுக்காக பதிவு செய்யாதோர் உடன் வருக

யாழ்ப்பாணம்,பெப்.23

வலி.வடக்கு மீள்குடியமர்வுக்காக இதுவரை பதிவு செய்யாத, யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் வசிப்பவர்களை எதிர்வரும் வியாழக்கிழமைக்குமுன்னராக நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் இந்த மாத ஆரம்பத்தில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியுடனான சந்திப்பின் பின்னர், மீள்குடியமர்வு தொடர்பிலான விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. குறித்த சந்திப்பின் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும் இராணுவத்தினருடன் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மீள்குடியமர்வு தொடர்பில் மக்களின் சரியான விபரங்களை விரைவில் திரட்டித் தருமாறு இராணுவத்தினர் குறித்த சந்திப்பில் கோரியுள்ளதாகவும், நலன்புரி நிலையங்களில் மீள்குடியமர்வு தொடர்பிலான விவரங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் எஞ்சியோர் தொடர்பில் விவரங்கள் திரட்டப்பட வேண்டியுள்ளதாகவும் குறித்த சந்திப்பில் மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் வாழ்பவர்களது விபரங்களை விரைவாகத் திரட்டும் முகமாகப் பதிவு நடவடிக்கைகள் வலி. வடக்கு மீள்குடியேற்ற குழுவினால் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே இதுவரையில் பதிவு செய்யாத, யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்கள், வெளி மாவட்டங்களில் வசிப்பவர்கள் உடனடியாக நேரில் வந்து பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழு கோரியுள்ளது.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையம், மருதனார்மடம் பாரதி சனசமூக நிலையம், பருத்தித்துறை எரிஞ்ச அம்மன் கோயிலடியிலுள்ள மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கம், உப்புக்குளம் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த செல்வராஜா, அச்சுவேலி வைத்தியசாலைக்கு அண் மையில் நவரட்ணராஜா ஆகி யோரிடம் பதிவுகளை மேற் கொள்ளுமாறு வலி.வடக்கு மீள்குடியேற்றக்குழு கோரியுள்ளது. (த-5)

## மின் கம்பியை முட்டும் மரக்கிளைகள் அகற்றல்

வடமராட்சி, பெப்.23

வடமராட்சிப் பிரதேசத்தில் மின்சார விநியோகத்துக்குத் தடையாக உள்ள மரக்கிளைகள் பலவும் பகுதி பகுதியாக மின்சார சபை ஊழியர்களால் வெட்டப்பட்டு வருகின்றன.

மரக்கிளைகள் வெட்டப்படும் பகுதிகளில் மின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டே பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மின் பாவனையாளர்கள் தத்தம் வீடுகளுடன் அமைந்துள்ள வேலிகளில் நிற்கும் மரங்களில் உள்ள கிளைகளை வெட்டி மின்சார விநியோகத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டும் அவற்றை மின் பாவனையாளர்கள் வெட்டாமையினாலேயே மின்சார சபை ஊழியர்களால் மின் விநியோகத்துக்குத் தடையாக உள்ள மரக்கிளைகள் வேகமாக வெட்டப்பட்டு வருகின்றன. (த-173)

## வடக்கு மீன்பிடி அமைச்சருடன் கலந்துரையாடல்

வவுனியா, பெப்.23

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர்களுக்கும் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்குமிடையில் நேற்றுமுன்தினம் காலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விலங்கியல் விஞ்ஞான விவசாய கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் உதேனி எதிரிசிங்கவுக்கும் அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்குமிடையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், நன்னீர் மீன்பிடி, கடல்நீர் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வடமாகாண மீன்பிடித் துறையை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்ல எடுக்க வேண்டிய முயற்சிகள் தொடர்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-402)

# 20 கிராம சேவகர் பிரிவுகளை இணைத்து நெல்லியடி நகர சபை

## *கரவெட்டி பிரதேச சபையில் தீர்மானம்*

வடமராட்சி, பெப். 23

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளை ஒன்றிணைத்து நெல்லியடி நகரசபை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதென சபையின் மாதாந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆளும்தரப்பு உறுப்பினர் கே.பரஞ்சோதி முன் மொழிந்த இப் பிரேரணையை மற்றொரு உறுப்பினரான பொ. குகதாஸ் வழி மொழிந்தார்.

இத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- இந்தச் சபை எல்லைக்குட்பட்ட 35 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பகுதியினுள் நெல்லியடி நகரமும் அதனை அண்மித்த பகுதிகளையும் உள்ளடக்கிய 20 கிராம சேவையாளர் பிரிவுகளையும் கொண்ட பகுதிகள் தற்போது துரிதகதியில் நகரமயப்படுத்தப்பட்டு அபிவிருத்தி யடைந்துவருகின்றன.

இப் பிரதேசத்தில் காணிகளின் பெறுமதியும் அதிகரித்து வருகின்றது. இந்த வளர்ச்சியால் சபையின் வருமானங்களான ஆதனவரி, வியாபார உரிமம், விளம்பரக் கட்டணங்கள், வாகனத் தரிப்பிடக் கட்டணங்கள், சந்தைக்கான, வாடகைகள், குத்தகைகள், உணவகங்கள், திண்மக் கழிவகற்றலுக்கான கட்டணங்கள் போன்ற வருமானங்கள் 70 வீதத்தால் அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேலும் வர்த்தக நிலையங்கள், தனியார் வங்கிகள், நெல்லியடிப் பொதுச் சந்தையின் புதிய கட்டத்தின் வளர்ச்சி போக்குவரத்துக்கான மையம், இதனால் மக்களின் கூடுதலான பயன்பாடு, வடமராட்சிக்கான நுழைவாயில் என்பவற்றைக்கருத்திற் கொண்டு நெல்லியடிப் பிரதேசம் நகரமயப்படுத்தப்படுகின்றது.

இதனடிப்படையில் கூடிய அளவு வருமானம், மக்கள் பயன்பாடு அதிகரித்தல், சனத்தொகை, பிரதேச பரப்பளவு ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு நெல்லியடிப் பிரதேசத்தை நகரசபையாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்றுள்ளது.

நகரசபையாக மாற்றப்படும் போது அதற்குள் உள்ளடக்கும் கிராம சேவையாளர் பிரிவுகள் வருமாறு:

கரணவாய் கிழக்கு, கரவெட்டி தெற்கு, கரவெட்டி வடக்கு, கரவெட்டி மேற்கு, கரவெட்டி மத்தி, மத்தொனி, கட்டைவேலி, துன்னாலை மத்தி, துன்னாலை மேற்கு, நெல்லியடி, நெல்லியடி வடக்கு, நெல்லியடி கிழக்கு, அல்வாய் தெற்கு, அல்வாய் கிழக்கு, அல்வாய், துன்னாலை, துன்னாலை கிழக்கு, துன்னாலை தெற்கு, கரவெட்டி கிழக்கு, அத்தாய். (த-173)



மாணவர்களுடன் கெலும் மக்ரே உரையாடல்

## தடையையும் மீறி சென்னையில் "மோதல் தவிர்ப்பு வலயம்"

சென்னை,பெப்.23

இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையையும் மீறி மோதல் தவிர்ப்பு வலய ஆவணப் படம் சென்னையில் நேற்று ஒளி பரப்பப்பட்டுள்ளது.

சென்னையில் தமிழ் மாணவர்கள் கூட்டமைப்பினால் இந்த நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. அந்த ஆவணப்படத்தில் சனல் - 4 வெளியிட்டுள்ள ஆவணப் படமான 'மோதல் தவிர்ப்பு வலயம்' ஒளிபரப்பப் பட்டது. இதில் ஆறு நிமிடங்கள் புதிய காட்சிகள் இணைக்கப்பட்டிருந்தன.

அதை தொடர்ந்து இந்தப் படத்தை இயக்கிய கெலும் மக்ரே லண்டனில் இருந்து நேரடியாக மாணவர்களிடம் உரையாடினார். அவர்கள் கேட்ட பல கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தமிழக மாணவர்கள் இந்தியாவிற்கு தொடர் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், இலங்கையில் சர்வதேச விசாரணை நடை பெற அமெரிக்க மற்றும் இந்தியாவின் பங்குமிகமுக்கியமானதுஎன்றும் மக்ரே தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது நடவடிக்கை எடுக்க முடியாதவாறு இந்தியா முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது என்றும், இந்தியாவும் அமெரிக்காவும் இந்த முறை ஒரு உறுதியான நடவடிக்கை எடுக்க நாம் ஆவன செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ஜ-5)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், பெப், 23

தனது உயிரை மாய்த்துக் கொள்ளமுற்பட்ட ஒருவரை தடுத்து வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற சமயம் அவர் இடைவழியில் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை வேலணை மண்கும்பான் ஐந்தாம் வட்டாரத்தில் இடம் பெற்றுள்ளது.

மனைவி மற்றும் பிள்ளைகளுடன் கிளிநொச்சியில் வசித்து வந்த இவர்.கடந்த வெள்ளிக்கிழமை மண்கும்பானிலுள்ள தனது தாயாரின் வீட்டிற்கு வந்துள்ளார். இதன் போதே அவர் தன்னை மாய்த்துக்கொள்ள முற்பட்டு உறவினர்களால் காப்பாற்றப் பட்டுள்ளார்.எனினும் ஆபத்தான நிலையில் அவரை வைத்தியசாலைக்கு எடுத்து சென்றபோது இடைவழியில் அவரின் உயிர் பிரிந்து விட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ஜ-4-10)


# கிளிநொச்சியில் குறுந் திரைப்பட வெளியீட்டு விழா

கிளிநொச்சி, பெப்.23

கிளிநொச்சியில் குறுந் திரைப்பட வெளியீட்டு விழா இடம் பெற்றுள்ளது.

அமலமரித் தியாகிகளின் சமூகப் பணிமனையின் ஏற்பாட்டில் "சாம்பலிலிருந்து" என்ற தலைப்பிலான குறுந்திரைப்பட வெளியீட்டு விழா கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது.

கிளிநொச்சி அன்னை இல்லத்தில் அன்னை இல்ல இயக்குநர் அருட்தந்தை அன்ரனி சில்வெஸ்ரர் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண குரு முதல்வர் அருட் தந்தை போல்நட்சத்திரம் (அமதி) கலந்து கொண்டார்.



*விருந்தினர்கள் மாலையிட்டு வரவேற்கப்படுகின்றனர்.*

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர் அசதீஸ்,கிளிநொச்சி சிங்கர் கம்பனி முகாமையாளர் க.விஜய ரூபன், கிளிநொச்சி அஸ்லாம் ஜும்ஆ பள்ளிவாசல் முகம்மது அமீன், கிளிநொச்சி கொமர்சல் வங்கி உதவி முகாமையாளர் சி.சிவரூபன், கனகாம்பிகைக் குளம் கிராமஅலுவலர் செல்வி ப.கனகசபை, சிவபாத கலையகம் பாடசாலை முதல்வர் திருமதி இ.விஜயகாந்தன் உட்படப்பலர்கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் வெளியீட்டு உரையைஅருட்தந்தைடேவின்சன் நிகழ்த்தினார். குறும்பட மதிப்பீட்டு உரையை யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெ.ஞானசீலன் நிகழ்த்தினார். ஏற்புரையை குறும்பட இயக்குநர் அ.நிசாந்தன் நிகழ்த்தினார். (க-18)

# திருநெல்வேலி சந்தையில் அடித்து மிரட்டிக் கொள்வனவு

யாழ்ப்பாணம், பெப். 23

தனது தோட்டத்தில் பிடுங்கிய பச்சமிளகாயை விற்கச் சென்ற ஒருவர் திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள் சிலரால் தாக்கப்பட்டார்.இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

உரும்பிராயில் தனது தோட்டத்தில் இருந்து பச்சமிளகாயை பிடுங்கிய இவர் அதைசந் தைப் படுத்தும்பொருட்டு, திருநெல்வேலி சந்தைக்கு கொண்டு சென்றுள்ளார்.

அங்கு பச்சமிளகாய்க்கு 90 ரூபா விலை குறிக்கப்பட்டுள்ளது.எனினும் வியா பாரிகள் இருவர் குறித்த நபரிடம் பச்சமிளகாயை 60 ரூபாவுக்கு தரும்படி மிரட்டியுள்ளனர்.

எனினும் அவர்அதற்கு உடன்படவில்லை.இதனால் தோட்டக்காரனை அவர்கள் தாக்கியுள்ளனர்.போதாக்குறைக்கு அருகில் நின்ற காய்கறி சுமப்போரும் சேர்ந்து தாக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர் சம்பவம் குறித்து நல்லூர் பிரதேச சபையிடம் முறைப்பாடுசெய்துள்ளார். இது குறித்து விசாரணைகளை மேற்கொண்ட பிரதேச சபையினர் வியாபாரிகள் இருவரையும், பொதி சுமப் போரையும் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபட கூடாது என தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. (ஜ-7)

## இந்து, கிறிஸ்தவ ஆலயங்களை புனரமைக்க நாளை கொடுப்பனவு

### *முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக நிகழ்வில் பாதிப்புற்றோருக்கும் காசோலைகள்*

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் புனர்வாழ்வு அதிகார சபை முல்லைத்தீவு மாவட்டத்தில் புனரமைக்கப்பட வேண்டிய இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்கான காசோலைகளை நாளை திங்கட் கிழமை வழங்கவுள்ளது.

நாளை காலை 8.30 மணிக்கு முள்ளியவளை மேற்கு கல்யாண வேலவர் ஆலயத்தில் இந்து ஆலயங்களுக்கான காசோலை வழங்கலும், முற்பகல் 10.30 மணிக்கு புனித யூதாதேயு ஆலயத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கான காசோலை வழங்கலும் நடைபெறும்.

அன்றைய தினம் பிற்பகல் 1 மணிக்கு முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான காசோலைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் புனர்வாழ்வு.பிரதி அமைச்சரும் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவித்தல் கிடைக்கப் பெற்றவர்கள் தேசிய அடையாள அட்டை, கிடைக்கப்பெற்ற கடிதம் என்பவற்றுடன் சமுகம் தருமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (ஒ-ந)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

கார் விற்பனைக்கு
யாழ்ப்பாணத்தில் டாக்டரின் பாவனையில் உள்ள TOYOTA COROLLA 64-52XX Original Diesel கார் விற்பனைக்குண்டு.
A/C FULL OPTION
எதிர்பார்க்கும் விலை 13, 50 000/- பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 0777 90 65 36

## துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி சாவகச்சேரி கடலில் நிறுத்தம்

யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும் யாழ். மாவட்டப் பிரஜைகள் குழுவும் சேர்ந்து எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையைத் தொடர்ந்து, மீனவர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வந்த சாவகச்சேரி கடற்பரப்பில் இடம்பெற்ற பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரிக் கடற் பரப்பில் கடந்த சில வாரங்களாக இடம் பெற்று வந்த பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியினால் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் நூற்றுக் கணக்கான மீனவர்கள் பீதியுடன் தொழில் செய்து வந்தார்கள்.

இதையடுத்து, சம்மேளத் தலைவர், யாழ்.மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர், செயலாளர் ஆகியோர் இணைந்து கட்டளைத் தளபதி டிக்கிரி திஸநாயக்கவை நேரில் சந்தித்து மீனவர்களின் பிரச்சினை குறித்து விரிவாக எடுத்து விளக்கினர்.

இதையடுத்து சாவகச்சேரி கடற் பரப்பில் இடம்பெற்றுவந்த படையினரின் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி உடனடியாக நிறுத்தப்பட்டது.

(த-115)

பூநகரியில் வேலை வாய்ப்பு
பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
நாச்சிக்குடாச் சந்தியில் அமைந்துள்ள பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மேற்பார்வையிலுள்ள வெளியிணைப்பு இயந்திர திருத்த நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு இரு வேலையாள்கள் தேவை.
தகைமை : வெளியிணைப்பு இயந்திர திருத்தம் தொடர்பான அடிப்படை அறிவு/அடிப்படைப் பயிற்சி
வயதெல்லை : 21 தொடக்கம் 40 வரை. சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.
முடிவு திகதி : 03 பங்குனி 2014.
சான்றிதழ்கள் மற்றும் சுயவிவரக்கோவையுடன் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
பொதுமுகாமையாளர், பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், ஜெயபுரம்.
(பொலிஸ் நிலையம் முன்பாக) தொ.பே : 077 465 9877 (43529)(7.8.3)

## மோசமான வீதி; கவனிப்பது யார்?

வடமராட்சி, பெப்.23

அல்வாய் கிழக்கு மடத்தடி தம்ப சிட்டி வீதி மிகப் படுமோசமாகப் பழுதடைந்து ஒரே குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதி ஊடாக நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளிலிருந்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்குச் சென்று வரும் மாணவர்களும், இந்த வீதியைச் சுற்றி வாழும் விவசாயிகள் மற்றும் பொதுமக்களும் பழுதடைந்த வீதியால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த வீதி கடந்த 15 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படவில்லை இதனைதிருத்திஅமைக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுப்பார்களா? எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது. (ஒ-173)

## சிகரெட் பாவனை தொடர்பில் விழிப்புணர்வுச் சுவரொட்டிகள்




யாழ்ப்பாணம்.பெப்.23
மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியால் சிகரெட் பாவனை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் நகரின் பிரதான வீதிகள் உட்பட கிராமப் புறங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மதுசாரம் மற்றும் புகைத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் வீடு வீடாக பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக தற்போதைய இளைஞர்கள் மத்தியில் புகைத்தல் பாவனையைத் தவிர்ப்பது தொடர்பாக 'எவ்வளவு தான் குளித்தா லும் சிகரெட் நாற்றம் போகாது' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் வீதிகள் தோறும் ஒட்டப்பட்டுள்ளன. (வ-14-21)

# இலத்திரனியல் தராசுகளில் மோசடி; தென்மராட்சியில் 15 பேர் சிக்கினர்

### அநேகமானவை பலசரக்கு வர்த்தக நிலையங்களே

தென்மராட்சி,பெப்.23
மோசடி செய்யப்பட்ட இலத்திரனியல் தராசுகளைப் பயன்படுத்திய தென்மராட்சி கிழக்கு வர்த்தகர்கள் 15 பேர் யாழ்.மாவட்ட அளவை நிலுவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

பாவனையாளர்களின் நம்பிக்கைக்குரிய இலத்திரனியல் தராசுகளில் மோசடி செய்து மக்களை ஏமாற்றிய வர்த்தகர்களே திடீர் பரிசோதனையின் போது பிடிபட்டனர். இலத்திரனியல் தராசுகள் மூலம் மோசடி செய்வதாக அளவை நிலுவைகள் திணைக்களத்துக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து திணைக்கள உத்தியோகத்தர்கள் தென்மராட்சியில். கொடிகாமம், மிருசுவில், உசன், வரணி பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

அவ்வேளையில் வர்த்தக நிலையங்களில் மோசடி செய்யப்பட்ட இலத்திரனியல் தராசுகளை வைத்துப் பயன்படுத்தியதைக் கண்டுபிடித்து 15 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கடந்த வருட முற்பகுதியில் அளவை நிலுவை திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டுக்குரிய முத்திரையிடப் பட்ட தராசுகளிலேயே இவ்வித மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)





### தாய்மொழித் தின நிகழ்வு டிறிபேக்கில்

உலகத் தாய்மொழித் தின நிகழ்வுகள் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் முதன் முறையாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை நடத்தப்பட்டது. கல்லூரி தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி பே.நாகராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், ஆசிரியர் அ.வாசுதேவா ஆகியோர் உரையாற்றினர். மாணவர்களால் பேச்சு, கவி யரங்கு, 'பாவலனுக்கு பட்டொளி வீசிய காவலன்' என்ற நாடகமும் நடத்தப்பட்டன. (ஒ-9)

## மாடுகளின் கால்களைக் கட்டி கடத்திய மூவருக்கும் பிணை

தென்மராட்சி, பெப்.23
மாடுகளின் கால்களைக் கட்டி வாகனத்தில் கடத்திய மூவருக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டது.

தென்மராட்சி தெற்கு அறுகுவெளிப் பகுதியில் மாடுகளின் கால்களைக் கட்டி சித்திரவதை செய்யும் வகையில் வாகனத்தில் ஏற்றிச் சென்ற வேளையில் வாகனச் சாரதி பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார். வாகனத்துக்கு பின்னும் முன்னும் பாதுகாப்புக்காக மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் உட்பட அம் மூவருக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-9)

## ஒருவார காலத்தில் 6 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் சூறை

### மோ.சைக்கிள் இளைஞர் குழுக்களால்

வலி.வடக்கு, பெப்.23
கடந்த ஒரு வார காலத்தில் மோட்டார் சைக்கிளில் சென்று தனிமையில் செல்லும் பெண்களின் நகைகளை அபகரித்துச் செல்லும் இளைஞர் குழுக்களால் சுமார் ஆறு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தங்க நகைகள் சூறையாடப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரதம பொலிஸ் பரிசோதகர் சி.ஆர். றொகான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

**குறிப்பிட்ட சூறையாடல்கள் சம்பந்தமாக நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.**

வாராந்தம் நடைபெறும் பொலிஸ்- உடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடை பெற்றது.

இதன்போது கருத்துக் கூறுகையில், இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில்லாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின் சுமார் மூன்றுரை லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி, காங்கேசன் துறை பொலிஸ் பிரிவில் கோவிலுக்கு சென்ற பெண்ணின் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சங்கிலி, மானிப்பாய் பொலிஸ் பிரிவில் சங்குவேலிப் பகுதியில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியும் அபகரிக்கப்பட்டுள்ளன என்றும், குறிப்பிட்ட சூறையாடல்கள் சம்பந்தமாக நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் புலன் விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார். (ஒ-86)

## கோப்பாய் பகுதியில் நகை, பணம் திருட்டு

வலி.வடக்கு. பெப்.23
கோப்பாய் பொலிஸ் பிரிவில் வீட்டை உடைத்து பணம், நகைகள் உட்பட சுமார் 3 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருள்கள் கடந்த 19 ஆம் திகதி திருடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரதம பொலிஸ் பரிசோதகர் சி.ஆர். றொகான் பீரிஸ் தெரிவித்தார்.

திருடர்கள் குறிப்பிட்ட வீட்டில் இருந்த சுமார் இரண்டு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் உட் பட பெறுமதியான பொருள் கள், பணம் 13 ஆயிரம் ரூபா மற்றும் இந்தியப் பணம் 2 ஆயிரம் ரூபா என்பவற்றை திருடிச்சென்றுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட களவு சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் கோப்பாய் பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (ஒ-86)

## சனசமூக நிலையங்களை புனரமைக்க நடவடிக்கை

வலி.தென்மேற்கு,பெப் .23
வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களும் புனரமைக்கப் படவுள்ளன. இதற்கான சகல ஒழுங்குகளையும் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மேற்கொண்டுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 84 சனசமூக நிலையங்கள் இருக்கின்ற போதிலும் தற்பொழுது சுமார் 50 சனசமூக நிலையங்கள் மட்டுமே தொடர்ந்து சிறப்பாக இயங்கி வருகின்றன. ஏனைய நிலையங்கள் இயங்காமல் இருப்பதனால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் பின்னடைவு கண்டுள்ளது.

இதையடுத்து. இயங்காமல் இருக்கும் சனசமூக நிலையங்களுக்கு புத்துயிர் கொடுக்க முன்வந்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் இந்தப் பிரதேசத்திலுள்ள அனைத்து நூல் நிலையங்களையும் புனரமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். (ஒ-115)

## வெடிமருந்துடன் கைதானோர் தொடர்ந்து பொலிஸ் காவலில்

### பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன

வலி.வடக்கு, பெப்.23
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் 72 கிலோ வெடி மருந்துகளுடன் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று தொடர்ந்து பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரதம பொலிஸ் பரிசோதகர் சி.ஆர். றொகான்பீரிஸ்தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர்களுக்கு வாராந்தம் நடைபெறும் பொலிஸ் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து ரிஎன்ரி வெடி மருந்து 56 கிலோவும் சி 4 வெடி மருந்து 16 கிலோவும் கைப்பற்றப்பட்டிருந்தன என்றும் குறிப்பிட்ட பொலிஸ் பரிசோதகர் சந்தேக நபர்களிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெறும் வகை யில் விசாரணைகள் நடை பெற்று வருகின்றன என்றும் கூறினார். (ஒ-86)

## உத்தியோகத்தராக மட்டுமன்றி சிறந்த சேவையாளராகவும் திகழ வேண்டும்

### யாழ்.மேலதிக அரச அதிபர் கிராம உத்தியோகத்தர்களுக்கு வேண்டுகோள்

உத்தியோகத்தர்களாக மட்டுமன்றிச் சிறந்த சேவையாளர்களாக நீங்கள் இருத்தல் வேண்டும். பலதரப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் இருந்தாலும் சட்ட ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளும் கடமை கிராம உத்தியோகத்தர்களுடையதே என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை சங்கத் தலைவர் ஆர்.சுந்தரராஜன் தலைமையில் நல்லூர் பிரதேசசெயலக மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமத்தின் முழுமையான நிர்வாக அதிகாரிகளான உங்கள் மூலமே பிரதேச செயலர்கள் தமது பணிகளை முன்னெடுக்கின்றனர். எனவே முழுமையான சிறந்த பயிற்சிகளை உங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில்நுட்ப ரீதியாக ஏனைய மாவட்டங்களில் வழங்கப்படும் பயிற்சிகளையும் நீங்கள் பெறக்கூடியதான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

தற்போது புதிய கிராம அலுவலர்கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களை உரிய முறையில் வழிப்படுத்த வேண்டியவர்களும் நீங்களே. உங்களது தளபாட வசதிகள் ஏனைய நிர்வாக விட யங்கள் தொடர்பாகவும் அரச அதிபர் அக்கறை கொண்டுள்ளார். சில தேவைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தளபாட வசதிகளை கடந்த டிசெம்பரில் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. இந்த ஆண்டில் அது ஏற்படுத்தித் தரப்படும். இக்கட்டான காலங்களில் சிறந்த சேவையை வழங்கியுள்ளீர்கள். உங்களது சேவை தொடர்பான முன் னேற்றங்களை மட்டுமன்றி எதிர்கால முன்னேற்றத்தை யும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்-என்றார். (வ-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
05.06.1931

மறைவு
24.01.2014

### அமரர் மகேஸ்வரி திருஞானசம்பந்தபிள்ளை

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் (இலகடி) நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

இலகடி, கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (C/12547)(2.6.3)

குடும்பத்தினர்.
தி.சரவணபவன்.

## மரண அறிவித்தல்



### திருமதி தர்மிளா சிவநேசன்

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மிளா சிவநேசன் 22.02.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை சிவநேசனின் அன்பு மனைவியும், கனகரத்தினம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும்,சின்னத்துரை- பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சிந்தூரி (வேம்படி மகளிர் கல்லூரி), கவீனா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவநேந்திரன் (கணபதிஸ்ரோர் - தலவாக்கலை), பிரசன்னா (கனடா), பிரதீபன் (கணபதி ஸ்ரோர் - தலவாக்கலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவானி (தலவாக்கலை), தேவிகா (கனடா) ஆகியோரின் மைத்துனியும், அபிசன், அபினன், அன்சிகா ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில். (சி12530)(12.6.3)

தகவல்:
கனகரத்தினம் (தந்தை).

## இளங் கலைஞர் மன்றத்தில் இன்று ஆராதனை விழா

யாழ்ப்பாணம், பெப்.23

ஒரு சாதாரண பெண்ணின் உடம்பைப் பராமரிப்பதற்கு தினமும் 1900 கிலோ கலோரி சக்தியும், ஓர் ஆணின் உடலைப் பராமரிப்பதற்கு 2500 கிலோ கலோரி சக்தியும் தேவைப்படும். ஒருவர் தனது நிறையைக் குறைத்துக் கொள்ள விரும்பினால் அவர் தனக்கு அன்றாடம் தேவைப் படும் சக்தியிலும் பார்க்க குறைந்த சக்திப் பெறுமானம் உள்ள உணவுகளையே உண்ண வேண்டும். ஒவ்வொருவரும் தான் சேமித்து வைத்திருக்கும் சக்தி யில் 6500 கிலோ கலோரியை இழக்கும் பொழுது அவரின் நிறை ஒரு கிலோகிராமினால் குறைவடைகிறது. அதாவது ஒருவர் உடற் பயிற்சி மூலமோ, அல்லது உணவுக் கட்டுப்பாட்டு மூலமோ, 6500 கிலோ கலோரி சக்தியை இழந்தால் அவரின் நிறை ஒரு கிலோகிராம் குறைவடையும்.





ஒருவர் தனது உடற் தேவைக்கு மேலதிகமாக 50 கிராம் சீனி சேர்க்கப்பட்ட தேநீரை அருந்துவாராக இருந்தால் அவரின் உடல்நிலை ஒரு கிலோகிராமினால் அதிகரிக்கும். அதே போல அவர் 26 ரோல்ஸ்களை மேலதிகமாக உண்ணுவாராக இருந்தால் அவரின் நிறை ஒரு கிலோ கிராமினால் அதிகரிக்கும். தினம் தோறும் ஒருவர் உடற் தேவைக்கு மேலதிகமாக ஒரு கோப்பை தேநீரையும், ஒரு ரோல்ஸ்யையும் உண்டு வந்தால் 17 நாள்களில் அவரது நிறை ஒரு கிலோ கிராமினால் அதிகரிக்கும். அதாவது நாம் இடை நேரங்களில் உண்ணும் உணவுகளும் எமது நிறை அதிகரிப்பில் பெரும் பங்கு வகிக்கின்றன.

உடற் பயிற்சியும் உடல்நிறைக் குறைப்பிலே ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. அத்துடன் உடற் பயிற்சி உடலின் வினைத்திறனை கூட்டுவதற்கும், பல நோய்களைத் தடுப்பதற்கும், பல நோய்களின் தீவிரத் தன்மையை குறைப்பதற்கும் உதவியாக இருக்கிறது. அதாவது உடல் ஆரோக்கியமும் அழகும் பெறுவதற்கு உடற் பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒருவர் தான் வழமையாக நடக்கும் தூரத்துக்கு மேலதிகமாக 150 கிலோமீற்றர் தூரத்தை நடந்தால் அவரின் நிறை ஒரு கிலோகிராமினால் குறைவடையும். ஒருவர் உணவுக்கட்டுப்பாடு இன்றி உடற் பயிற்சி மட்டும் செய்து நிறையைக் குறைத்துக் கொள்வது கடினமாகும். எனவே நிறைக் குறைப்பு முயற்சிக்கு உடற்பயிற்சியும், உணவுக் கட்டுப்பாடும் மிகவும் முக்கியமானதாக அமைகின்றன.


> ஒருவர் உடற் பயிற்சி மூலமோ அல்லது உணவுக் கட்டுப்பாட்டு மூலமோ 6500 கிலோ கலோரி சக்தியை இழந்தால் அவரது நிறை ஒரு கிலோ கிராமினால் குறைவடையும்.

நாம் உண்ணும் உணவுப் பொருள்கள் ஒவ்வொன்றினதும் கலோரிப் பெறுமானம் என்ன என்பதை அறிந்து வைத்திருந்தால் எமது உடற் தேவைக்கு வேண்டிய உணவின் அளவை நாமே தீர்மானிக்க முடியும். நாம் உண்ணும் உணவின் அளவை மாற்றி நிறைக்குறைப்பையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

*(தொடரும்)*

**Dr.S.சிவன்சுதன், MD,**
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# மாபெரும் சமையல் போட்டி முடிவுகள்-2014



சிறுவர்களுக்கான ஊட்டச்சத்துள்ள புதிய உணவு வகைகளைக் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட சமையல் போட்டி முடிவுகள் அறிவிக் கப்பட்டுள்ளன.

சைவ உணவு வகைத் தயாரிப்பில் முதலாவது இடத்தை பாகற்காய் சத்துக் கூழைத் தயாரித்த திருமதி எம்.மகேஸ்வரி தட்டிச் சென்றுள்ளார்கள்.

இரண்டாம் இடத்தை பாசிப்பயறு, உழுந்து, பயற்றம்மா வடை, உழுந்து உப்புமா ஆகியவற்றைத் தயாரித்த திருமதி கிருபனா பிறேம்குமார் பெற்றுள்ளார்.

மூன்றாம் இடத்தை பலாக்காய்ப் பிரட்டல் தயாரித்த திருமதி வ.வேல்சிவாநாதன் பெற்றுள்ளார்.

மற்றும் சைவ உணவு வகை தயாரிப்புப் போட்டியில் கலந்து கொண்டு சான்றிதழ்களையும், பணப்பரிசில் களையும் பெற்றுக் கொண்ட போட்டியாளர்களின் விவரம் வருமாறு:-

புரதக் குண்டுத் தோசை-ஜோய் சத்தியராஜன்
பயிற்றம் தாளிசக்கலவை-சிவகுமாரன் கீதாஞ்சலி
சத்தாக கேசரி-எம்.பால்ராஜ்
சோளன் பச்சடி-கே.சுஜன்
கோஸ்தக்காளித் தோசை-பி.இராஜேஸ்வரி
பீற்றூட் லட்டு-பவனேசன் பாஸ்கரன்
உமாபதி, பருவதம்,பல்லவி-சிற்றம்பலம் சிவஞானராஜா

அதேவேளை, அசைவ உணவு வகை தயாரிப்பில் முதலாவது இடத்தை போஷாக்கு சத்து மாவைத் தயாரித்த புண்ணியராஜா சிவசக்தி பெற்றுள்ளார்.

இரண்டாம் இடத்தை முட்டை மடிப்பு தயாரித்த எஸ்.கஸ்தூரிகா பெற்றுள்ளார்.

மூன்றாம் இடத்தை முட்டை வெதுப்பியைத் தயாரித்த வி.நிவோயா பெற்றுள்ளார்.


மற்றும் அசைவ உணவு வகை தயாரிப்புப் போட்டி யில் கலந்து கொண்டு சான்றிதழ்களையும், பணப் பரிசில்களையும் பெற்றுக் கொண்ட போட்டியாளர்கள் வருமாறு:-

இறால் சுருள்-ஜி.சந்திரகுமார்
பலாக்காய்ப் பிரட்டல்-ஏ.வேல்சிவநாதன்
வெண்டி கட்லட்-ஜோய் சத்தியராஜன்
அப்பிள் கேக்-எஸ்.துரைசிங்கம்
கௌபி தட்டை-எஸ்.துரைசிங்கம்
முட்டை போண்டா-எஸ்.யோகம்மா
கடலைமாப் பிட்டு-எஸ்.துரைசிங்கம்

இவ்வாறாக சமையல் போட்டியில் முதலாம் இடத்துக்கு 10,000 ரூபாவும், இரண்டாம் இடத்துக்கு 7,000 ரூபாவும் ,மூன்றாம் இடத்துக்கு 5,000 ரூபாவும் பணப் பரிசில்களாகவும், அத்தோடு சான்றிதழ்களும் வழங்கப்படும். இந்தச் சமையல் போட்டியில் வெற்றி பெற்ற உணவு வகைகளில் தயாரிப்பு முறைகள் புத்தகமாக வெளியிடப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.


குண்டுத்தோசை


பாவற்காய்க் கூழ்





நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் அரசியல் உரிமை அபகரிப்பே தெற்கின் செல்நெறி ஆகிவிட்ட பின்....?

தென்னாபிரிக்காவின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளைக் கண்டறிவதில், கொழும்பு அரசு திடீரென அதிக அக்கறை கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. அந்த வெளிப்பாட்டை உத்தி யோகப்பற்றற்ற முறையில் வெளிப்படுத்தி உள்ளார் மூத்த அமைச்சர்களில் ஒருவரான டாக்டர் ராஜித சேனா ரத்ன.

மூத்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில், தென்னாபிரிக்காவுக்கு அமைச்சர்கள் மட்டத் தூதுக்குழு ஒன்று விரைந்துள்ளது. இலங்கை அரசின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சுமா விசேட பிரதிநிதி ஒருவரை நியமித்திருந்தார்.

அந்தப் பிரதிநிதியுடனும் ஏனைய தென்னாபிரிக்கத் தலைவர்களுடனும் கலந்தாலோசித்து, அங்கு உருவாக்கப்பட்டமை போன்ற ஆணைக்குழுவை எமது நாட்டிலும் நியமிப்பது குறித்து இலங்கை அரசு முனைப்பாக உள்ளதை அனுமானிக்க முடிகிறது.

இப்போதைய சூழ்நிலையில், மிகக் குறிப்பாக அடுத்த மாதத்தில், ஜெனிவாவில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில், இலங்கை அரசுக்கு எதிரான வலுவான பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட உள்ள நிலையில், அதன் தாக்கத்தைத் தணிக்கும் உத்தியாக, உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவை அமைப்பதில் இலங்கை அரசு கரிசனை காட்டுவதாக இருக்கக்கூடும். அதனை மனதில் இருத்தியே அமைச்சர் ராஜித சேனாரத்ன தமது கருத்தை முன்னோட்டமாக வெளியிட்டுள்ளார் என்றும் கருத இடமுண்டு.

அதன்பொருட்டே, உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவை நியமிப்பதற்கு நாட்டின் சகல அரசியல் கட்சிகளையும் ஒத்துழைப்பு நல்குமாறு அமைச்சர் ராஜித வேண்டுகோள் விடுக்கிறார் எனக் கொள்ளலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் இணைந்து கொள்ள வில்லை. தெரிவுக் குழுவின் உண்மையான இலக்கு. நோக்கம் என்பன குறித்த நிகழ்ச்சி நிரல் ஒன்றை அரசு தயாரித்துப் பகிரங்கப்படுத்தினால் மட்டுமே, அக்குழுவில் இணைந்து கொள்வது குறித்துப் பரிசீலிக்கலாம் என்பது கூட்டமைப்பின் எண்ணப்பாடு.

தமிழர்களுக்கான உரிமைகளை நீக்கமற வழங்கினால் மட்டுமே கூட்டமைப்பு உத்தேச தெரிவுக் குழுவில் பங்காற்ற வேண்டும் என்பது தமிழ் மக்களின் நிலைப்பாடு. அதனை அரசாங்கம் மட்டுமன்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைவர்களும் ஒரு கணமேனும் மறந்து விடக் கூடாது என்பது தமிழ் மக்களின் பிரதான நிலைப்பாடு.

எதிர்வரும் மார்ச் மாதத்தில்-இன்னமும் சுமார் மூன்றரை வாரங்களில்-ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா, பிரிட்டன், உட்பட்ட நாடுகளால் சமர்ப்பிக்கப்பட உள்ள பிரேரணை, தீர்மானமாக நிறை வேறுவதற்கு முன்னர்-

எமது நாட்டில் உண்மையைக் கண்டறியும் குழுவை நியமித்து, அதனுள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் உள்வாங்கி, அனைத்துலக முயற்சியை பலவீனப்படுத்தும் அரசின் தந்திரோபாயமாகவே தமிழ் மக்கள் இதனை நோக்குகிறார்கள். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரும் நன்கறிவர்.

ஆகையால், அமைச்சர் ராஜித சேனாரத்தினவின் இப்போதைய கருத்தை உள்வாங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முனையக் கூடாது. முந்தைய கொழும்பு அரசுகள் எல்லாமே தமிழ் மக்களை கிள்ளுக் கீரைகளாகப் பயன்படுத்திய காலம் இனியும் நீடிக்கக் கூடாது என்பதில் தமிழ் மக்கள் மிகவும் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளனர்.

1956 ஆம் ஆண்டின் பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் தொடக்கம் டட்லி-செல்வா ஒப்பந்தம் மற்றும் சந்திரிகா குமாரணதுங்காவின் தீர்வுப்பொதி, நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அரசு-தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக்கள் என்பவற்றுக்கு உண்டான நிலைமைகளை-


அரசியல் தலைவர்கள் மறந்தாலும் தமிழ் மக்கள் மறக்கவில்லை; மறக்க மாட்டார்கள்.

ஏனெனில், கடந்த ஐம்பத்தேழு ஆண்டுகளாக (1956-2013 வரை) தென்னிலங்கை அரசியல் தலைவர்கள், சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்காமல், அபகரிப்பதனையே தமது ஆத்மார்த்தமான அரசியல் செல்நெறியாகக் கொண்டு செயற்படுகிறார்கள். இனியும் அதற்கு அவர்களுக்குத் துணை போகக் கூடாது என்பதில் தமிழ் மக்கள் தெட்டத் தெளிவாக உள்ளார்கள். ஆகையால் தலைவர்கள் எந்தத் தருணத்திலும் தடம்மாறக் கூடாது.

---

### ஏமாறாதே...ஏமாற்றாதே...

# நொந்து போயுள்ள அரசை சீண்டுகிறது ஐ.தே.கட்சியும்



வசந்-அற்புதன்

> 99 இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்த விசாரணை விவகாரம், இந்தளவுக்கு தீவிரம் பெற்றதே அரசின் முறை யற்ற நடவடிக்கை யினால் தான் என்ற குற்றச்சாட்டு உள்நாட்டில் தீவிர மடைந்து வருகின்றது. எதிர்க் கட்சியான ஐதேக கூட, உள்ளக விசாரணைக்கு ஆதரவு தெரி வித்துள்ளது. இதனை அரசு செய்யத் தவறியதால் தான், ஜெனிவாவில் நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அது குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையில் நடைபெற்று முடிந்த போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் குறித்துக் காத்திரமான, நம்பகமான, சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம், ஐ.நா மனிதஉரிமைகள் சபையில், இதனை முன்னிலைப் படுத்தி, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரத் தயாராகி விட்டது . இந்தத் தீர்மானம் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையின் அறிக்கையை அடியொற்றி அமைந்திருப்பதாக அமெரிக்கத் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் இலங்கை அரசு வெளியில் எதற்கும் அஞ்சாத சிங்கமாகத் தன்னைக் காட்டிக்கொண்டாலும், தாம் சிக்கலான, பொறிக்குள் சிக்கிவிடு வோமா என்ற அச்சம் அரசை ஆட்டிப் படைக்கின்றது. ஏனெனில் , இதுவரையில், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகும் சரி, ஐ.நா மனிதஉரிமைகள் சபையும் சரி, இந்த மீறல்கள் குறித்து, சுதந்திரமான, நம்பகமான, உள்நாட்டு விசாரணைகளை நடத்தவே அழுத்தங்கள் கொடுத்து வந்துள்ளன. உள்ளக விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசு தயாராக இல்லை எனினும், வெளி உலகுக்கு உள்ளக விசாரணை ஒன்றை நடத்துவதாக நாடகம் ஒன்றை அரங்கேற்றுகின்றது. அதில் ஒன்று தான் காணாமற் போனோரைக் கண்டறிவதற்கான ஜனாதிபதியின் ஆணைக் குழு. இந்த ஆணைக்குழு முதலில் கிளிநொச்சியிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலுமாக தனது விசாரணைகளை நடத்தி முடித்துள்ளது. இந்த ஆணைக்குழுவின் முன் தமது உறவுகளைக் காணாமற் போகச் செய்தவர்கள் யார் என்பதைத் துணிச்சலுடன் எடுத்துக் கூறியுள்ளனர் உறவுகளைப் பறிகொடுத்தவர்கள். வெள்ளை வாகனத்திலும் சீருடையிலும் வந்த இலங்கை இராணுவமும் ஈ.பி.டி.பியினருமே தமது உறவுகளைக் காணாமற் போகச் செய்தனர் என ஆணைக்குழு முன் தைரியமாக நின்று முறைப்பாடு செய்துள்ளனர். அதற்கும் மேலாக தங்களது உறவுகளைக் கடத்திச் சென்றவர்கள் யார் என்பதைத் தம்மால் அடையாளம் காட்டவும் முடியுமென அவர்கள் தெரிவித்துள்ளனர். அரசைப் பொறுத்த வரை இது ஒருபெரும் தலையிடியே. வரப்போகும் ஜெனிவாக் கூட்டத் தொடரில், போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவான குரல்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே, கனடாவும், பிரித்தானியாவும், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உறுதியான ஆதரவைத் தெரிவித்து விட்டன. இந்த நிலையில், அமெரிக்க செனெட்டில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள தீர்மான வரைவு, ஐரோப்பிய ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், ஆஸ்திரேலிய செனட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் என்பன சர்வதேச போர்க்குற்ற விசாரணை அழைப்புக்கான ஆதரவு உலகில் அதிகரித்து வருவதை வெளிப்படுத்தியுள்ளன. இதில், ஆஸ்திரேலிய செனட்டில் தீர்மானம் நிறைவேற்றினாலும், அதனை அந்த நாட்டில் ஆட்சியில் உள்ள ரொனி அபோட் அரசு ஏற்றுச் செயற்பட வேண்டிய கடப்பாடு கிடையாது. ஆஸ்திரேலிய அரசு இலங்கை அகதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக, இலங்கை அரசுடன் ஒத்துழைப்பதிலேயே கவனம் செலுத்துகிறதேயன்றி, முடிந்து போன போரின் மீறல்களைப் பற்றியெல்லாம் அதற்குக் கவலையில்லை. ஆனால் ஆஸ்திரேலியாவின் இந்த நிலைப்பாட்டினால், ஜெனிவா தீர்மானத்துக்குப் பெரிதாக எந்தப் பாதிப்பு வரப் போவதும் இல்லை. ஏனென்றால், ஐ.நா மனிதஉரிமைகள் சபையில் வாக்களிக்கும் தகைமை பெற்ற உறுப்பு நாடாக ஆஸ்திரேலியா இல்லை. இதனால் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசை அதனால் காப்பாற்றமுடியாது. அதேவேளை, இந்திய நாடாளுமன்றத்தில் கூட சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவான தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்ற குரல்கள் உயர்ந்துள்ளன, இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா தலைமையில் சர்வதேச விசாரணை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும், அதே நேரம் அமெரிக்கத் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும் என்றும் தி.மு.க வினால் மன்மோகன் அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆட்சியில் இருக்கும் அரசுக்கு , தமிழ்நாட்டில் வாக்கு பலம், கூட்டணிப் பலம் என்பன தேவையாக-இருப்பதால் இந்தியா கூட இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்க முடியாத சூழல் உருவாகலாம்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்த விசாரணை விவகாரம், இந்தளவுக்கு தீவிரம் பெற்றதே அரசின் முறையற்ற நடவடிக்கையினால் தான் என்ற குற்றச்சாட்டு உள்நாட்டில் தீவிரமடைந்து வருகின்றது. எதிர்க்கட்சியான ஐ.தே.க. கூட, உள்ளக விசாரணைக்கு ஆதரவு தெரி வித்துள்ளது. இதனை அரசு செய்யத் தவறியதால் தான், ஜெனிவாவில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அது குற்றம் சுமத்தி யுள்ளது. பிரதான எதிர்க்கட்சியையே தனது நிலைப்பாட்டுக்கு ஆதரவாகக் கொண்டு வரமுடியாத அரசு, ஜெனிவாவில், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது.

ஐ.நா மனிதஉரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் கதவுகளையெல்லாம், இலங்கை அரசின் அமைச்சர்கள் தட்டிக் கொண்டிருக்கின்றனர். மேற்கே பிறேஸிலிடம் போய் கோத்தபாய ராஜபக்ஷ ஆதரவு கோரியிருந்தார். கிழக்கே தென்கொரியாவின் ஆதரவு கோரி பஸில் ராஜபக்ஷ சென்றுள்ளார். உலகம் முழுவதும், இலங் கைக்கு ஆதரவு திரட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் முழுவீச்சில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஜப்பான், தென்னாபிரிக்கா, பிறேஸில் இந்த மூன்று நாடுகளையும் மடக்கிப் போடுவதன் மூலம், கணிசமான ஆதரவைத் திரட்டலாம் என்று அரசு கணக்குப் போட்டுள்ளது. தென்னாபிரிக்காவை வைத்து, ஆபிரிக்க நாடுகளையும், பிறேஸிலை வைத்து இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் தனக்கு ஆதரவாகத் திருப்பும் இலங்கை அரசின் முயற்சியின் பயன் என்னவென்று அறிந்து கொள்ள வரும் மார்ச் 28ஆம் நாள் வரை காத்திருக்கத்தான் வேண்டும்.

அதேவேளை, அரசு, ஜெனிவாத் தீர்மானத்தை வைத்து அரசியல் வெற்றியை அறுவடை செய்வதில் தீவிரமாகியுள்ளது. ஜெனிவா அழுத்தங்களுக்குப் பதிலடி கொடுக்க மாகாணசபைத் தேர்தலை முழு மூச்சாக அரசு பயன்படுத்திக் கொள்கிறது. ஆக, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகின் நகர்வுகளுக்கு எதிராக, வெளிநாடுகளில் மட்டுமன்றி உள்நாட்டிலும் அரசு தீவிர பரப்புரையை மேற்கொண்டுள்ளது. மாகாணசபைத் தேர்தல் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் மேடைகளில் அரசினால், எதையும் பேச முடிகிறது. எனவே, சர்வதேச அளவில் அரசின் பரப்புரைகள் ஜெனிவாவில் தோல்வியைத் தழுவ நேர்ந்தாலும், உள்நாட்டில் மாகாணசபைத் தேர்தலின் மூலம் வெற்றியை அறுவடை செய்ய அரசு தயாராகின்றது.




# அதிர்ஷ்டசாலிகள் பலரை உருவாக்கிய நட்ராஜ் பென்சில் அதிர்ஷ்டப் போட்டி

பல ஆண்டுகளாக எமது பிள்ளைகளின் நம்பிக்கையைப் பெற்ற உலகின் மிக உயர் தரத்திலான பென்சில்,வர்ண பென்சில்கள்,அழிப்பான்,பென்சில் கட்டர் உட்பட பாடசாலை உபகரணங்களை நட்ராஜ் என்ற வியாபாரப் பெயரில் உற்பத்தி செய்யும் இந்தியாவின் மிகப்பெரிய காகித உற்பத்தி செய்யும் நிறுவனமான ஹிந்துஸ்தான் பென்சில் நிறுவனம் மற்றும் அந்நிறுவனத்தின் இலங்கையின் ஏகவிநியோகஸ்தரான பெக்ஸ்கோ சிலோன் நிறுவனத்துடன் இணைந்து நட்ராஜ் பென்சில் உங்களை வெற்றியாளராக்கும் என்ற பெயரில் நடாத்திய அதிர்ஷ்டப் போட்டியின் சீட்டிழுப்பு அண்மையில் வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

இலத்திரனியல் அச்சு ஊடக பிரதிநிதிகள் உட்பட பிரதம அதிதிகள் பலரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய வருமானவரித் திணைக்களத்தின் மேல் மாகாண சிரேஷ்ட வரி அதிகாரி பிரசாத் முனசிங்க அவர்களின் மேற்பார்வையின் கீழ் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட கூப்பன்களுக்கிடையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

முதலாவது பரிசாக 12 மடிக்கணனிகள் உட்பட மவுன்டன் சைக்கிள்கள்,கைக்கடிகாரங்கள்,ரீ-சேர்ட் உட்பட பல பெறுமதியான பரிசில்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கி வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

ஐரோப்பாவின் தர நிர்ணயங்களுக்கு அமைய உற்பத்தி செய்யப்படும் நட்ராஜ் உற்பத்திகள் மிக உயர்தரத்தில் அமைவதற்காக இவற்றுக்குத் தேவையான மூலப்பொருட்களான மரப்பலகை,வர்ணம் மற்றும் மிகவும் சிறிய பிளேட் போன்றவை தமது தொழிற்சாலையிலேயே தயாரிக்கப்படுகின்றமை,நட்ராஜ் உற்பத்திகளுக்காக பாவிக்கப்படும் விசேட மரப்பலகை தமது உற்பத்திகளுக்காகவே பயிரிடப்படுகின்றமையால் ஹிந்துஸ்தான் பென்சில் நிறுவனம் சுற்றாடலுக்கு இசைவான நிறுவனமாக அறிமுகப்படுத்தப்படுவதுடன், 40க்கும் மேற்பட்டநாடுகளுக்கு தனது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கிறது என பெக்ஸ்கோ சிலோன் லிமிட்டட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.ரவீந்திரன் கருத்துத் தெரிவித்தார்.



# ராணி சந்தன சோப் தங்கப் பரிசுப் போட்டி

புது வருடத்தில் ராணி சந்தன சோப் வாடிக்கையாளர்களை தங்கப்பரிசு மழையில் நனைய வைக்கும் புதிய மற்றுமொரு ஊக்குவிப்புத்திட்டத்தை சுவதேஷி இன்டஸ்ரியல் வேர்க்ஸ் பிஎல்சி அறிமுகம் செய்துள்ளது.

ராணி சோப் பாவனையாளர்கள் தமது பெயர் முகவரி உள்ளடங்கிய விபரங்களை வெற்று ராணி சந்தன சோப் அல்லது ராணி வெள்ளை சந்தன் சோப் அல்லது ராணி சந்தன சோப் 4 இன் 1 பொதி மேலுறைகளுடன் இணைத்து 'ராணி சந்தன தங்க வசந்தம்' த.பெ.இல. 04, கந்தானை என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் 20 தங்க நாணயங்கள் (மாதம் 10) மற்றும் 400 ஆறுதல் பரிசுகள் (வாராந்தம் 50) போன்றவற்றை எட்டு வாரங்களுக்கு வெற்றி கொள்வதற்கான வாய்ப்புகளைப் பெறுவார்கள்.

இந்த விசேட ஊக்குவிப்புத் திட்டம் 2014 பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி முதல் மார்ச் மாதம் [illegible]ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது. வாராந்தம் மற்றும் மாதாந்தம் பரிசிழுப்பின் மூலம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.


சுவதேஷி இன்டஸ்ரீஸ் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், 'இந்த ஊக்குவிப்புத் திட்டம் எமது உண்மையான நீண்ட கால வாடிக்கையாளர்களை கௌரவிக்கும் வகையில் முன்னெடுக்கப்படுகிறது. சந்தையில் காணப்படும் தூய்மையான அழகு சந்தன சோப் வகையாக ராணி சந்தன சோப் அமைந்துள்ளது' என்றார்.

'சந்தனம் என்பது, ராணி சந்தன சோப் வகையில் காணப்படும் பிரதான உள்ளடக்கமாக அமைந்துள்ளது. அத்துடன் தூய்மையாக்கலுக்கு அத்தியாவசியமான சேர்மானங்களையும் கொண்டுள்ளது. இது சருமத்தை மென்மையாக்கவும், மிருதுவாக்கவும் பயன்படுகிறது. ஆரோக்கியமான பளபளப்பான மற்றும் துர்மணமற்ற சருமத்தைப் பேண உதவுகிறது. இந்த சிறப்பம்சங்கள் தொடர்பான விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஊக்குவிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது' என்றார்.ராணி சந்தன சோப் என்பது அழகிய பெண்களுடன் ஒன்றிணைந்து காணப்படுகிறது. இதை அடிப்படையாக கொண்டு ராணி சோப் வகைகளின் சந்தைப் படுத்தல் நாமமாக, 'அழகு ராணிகளின் தெரிவு' என்பது அமைந் துள்ளது. (த)




ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபன எல்.ஐ.சி சாவகச்சேரி கிளையின் வாடிக்கையாளர் கந்தசாமி குலேந்திரன் நோய் வாய்ப்பட்டு இறந்ததால், அவரது குடும்பத்தினருக்கு இழப்பீட்டுத் தொகை அண்மையில் வழங்கப்பட்டது. சாவகச்சேரி கிளை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இறந்தவரின் மனைவியிடம் இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையை கிளை முகாமையாளர் ம.கோபிதாஸன் வழங்கினார். அருகில் விற்பனை மேற்பார்வையாளர்களான ப.நிரஞ்சன், மோ.பிரகாஸ் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (த-9)

# தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டிய கொமர்ஷல் வங்கி



2012ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு பாரிய அளவில் கடன்களை வழங்கியிருந்த கொமர்ஷல் வங்கி அதன் 12வது விவசாய மற்றும் நுண்நிதிப் பிரிவை (AMFU) திஸ்ஸமஹாராமையில் திறந்து வைத்துள்ளது.

அத்தோடு காலி மற்றும் மாத்தறை நகரங்களில் தொழில் முயற்சியாளர்களுக்கு இரு வெவ்வேறு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்திருந்தது. இவற்றின் மூலம் இலங்கையின் தென் பகுதியில் வர்த்தக அபிவிருத்திக்கான ஆர்வத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

தொழில்முயற்சியாளர்களுக்கான திட்டங்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆதரவுடன் இடம்பெற்றன. நிதியியல்அறிவுமற்றும்தொழில் முயற்சி அபிவிருத்தி என்ற தொனிப் பொருளில் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. 200க்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றதாக வங்கி அறிவித்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும், நுண் தொழில் முயற்சியாளர்களுக்கும் வங்கி ஏற்கனவே மொனராகலை, வெல்லவாய, பதுளை, பஸறை, பண்டாரவளை, வெலிமட, வெலிகம, கொக்கல, கராப்பிட்டிய ஆகிய இடங்களில் அண்மைக் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தியுள்ளது. வங்கியின் விவசாய மற்றும் நுண்நிதிப் பிரிவு இரத்தினபுரி, நாரம்மல, கண்டி, அநுராதபுரம், கிளிநொச்சி, பண்டாரவளை, வெல்லவாய, ஹிங்குராக்கொட, கலேவலை, அச்சுவேலி மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் செயற்படுகின்றது. புதிய வர்த்தக முயற்சிகளைத் தொடங்குகின்றவர்களுக்கு நிதி தேவைப்படும் பட்சத்தில் உதவுதல், தற்போது உள்ள வர்த்தகங்களை விரிவாக்க உதவுதல், வர்த்தகங்களை முன்னேற்றுவதற்கான வழிகாட்டிச் சேவைகளை வழங்குதல், கஷ்டங்களைத் தீர்க்க உதவுதல் ஆகிய துறைகளில் இந்தப் பிரிவுகள் செயற்படுகின்றன.

கொமர்ஷல் வங்கி பல தசாப்தங்களாக நாட்டின் சிறியமற்றும்நடுத்தரதொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்கி வருகின்றது. இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதில் உலகக் கவனம் தற்போது வெகுவாகத் திசை திரும்பி உள்ளதால் வங்கியும் அண்மைக் காலங்களில் இந்தப் பிரிவில்கூடுதல்கவனம்செலுத்தி வருகின்றது என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் இந்தப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொது முகாமையாளர் சந்தன குணசேகர.

ஒரு பொருளாதாரத்தின் மிகப் பெரிய உந்து சக்தியாக இருப்பது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியே என்பது நிபுணர்களின் கருத்தாக உள்ளது. இலங்கைப் பொருளாதாரத்தில் இந்தத் துறையின் பங்களிப்பானது 80 வீதமாக உள்ளது என்றுஅவர்மேலும்கூறினார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் தேவைக்கு பொருந்தும் வகையிலான அபிவிருத்திக் கடன்களை வங்கி வழங்குகின்றது. கவர்ச்சிகரமான வட்டி வீதங்களுடனும், நெகிழ்ச்சிப் போக்குடைய மீளச் செலுத்தல் காலப்பகுதி கொண்டதாகவும் இந்த கடன் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. கடன் பெறுகின்றவர்களுக்கு வங்கியின்அனுபவம்மிக்க அதிகாரிகள் தேவையான ஆலோசனைகளையும் வழங்குகின்றனர். வர்த்தக அபிவிருத்தி மூலோபாயம், வர்த்தக பிரச்சினைகளை தீர்த்து வைத்தல், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வர்த்தக ஆற்றல்களை மேம்படுத்தல், என்பன போன்ற சேவைகள் இதனூடாக வழங்கப்படுகின்றன. (த)

## புதிய கட்டடம் வாடகைக்கு

யாழ்.நகர் மத்தியில் பஸ் நிலையத்திற்கு மிகவும் அருகில் மின்சார நிலைய வீதியில் சகல வசதிகளையும் கொண்ட முதலாம், 2ஆம், 3ஆம் மாடிகள் ஒவ்வொன்றும் 1200 சதுர அடி கொண்ட கட்டடத்தொகுதி வாடகைக்குண்டு.
அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், காட்சி அறைகள் மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் உகந்தது.
(பகுதிகளாகப் பிரித்தும் கொடுக்கப்படும்)

(44999)(12.6.6) தொடர்பு: 077 993 4740/077 905 1895

## உங்கள் இலக்கை அடைவது எப்படி ?

உங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தரமான வெளிநாட்டு, உள்நாட்டு கல்வி / வேலைவாய்ப்பை மிகச் சரியாக தெரிவு செய்ய வழி காட்டும் ஒரு நாள் கருத்தரங்கு

- ☑ தொழில்சார் வழிகாட்டல் (Career guidance)
- ☑ உயர்கல்வித்துறை வழிகாட்டல் (Educational Guidance)
- ☑ சுயவிபரக்கோவை தயார்ப்படுத்தலும்,தொழிலுக்கான விண்ணப்ப உபாயங்கள்.
- ☑ சரியான வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களை தேர்ந்தெடுக்கவும்,சிக்கனமான முறையில் விண்ணப்பிப்பதற்கான ஆலோசனைகள்.

இடம் : கருத்தரங்கு மண்டபம்
TILKO CITY HOTEL (70/6,K.K.S Road,Jaffna)
காலம் : 01-03-2014
நேரம் : காலை 10.00 - மதியம் 1.00
கட்டணம் : ரூ.1500/=

முன்பதிவுகளுக்கும், மேலதிக விபரங்களிற்கும் தொடர்பு கொள்ள
**0776 017470 | 0755 017027**
முதலில் முன்பதிவுகளை மேற்கொள்ளும் 15 பேருக்கு 20% கட்டணக்கழிவு உண்டு

(C/12220) **WWW.NETTECHSL.COM**

max adz

## கார் விற்பனைக்கு

TOYOTA COROLLA -121
2003 Model
தொடர்பு:077 373 4109 (44992)(3.6.4)

இறக்குமதி செய்யப்பட்ட
## புதிய குறூடா கரற்
விதைகள் அடங்கிய
ஒரு கிலோ பைக்கற்றுக்கள்
தொகையாகப் பெற்றுக்கொள்ளலாம்

Imported New Kuroda Carrot Seeds Available in Baulk 1 Kg Pack

071-8167955 (12.6)

## பெற்றோர் கவனத்திற்கு

விழிப்புணர்வுடன் இருப்பதன் மூலம் பிள்ளைகளின் பெறுபேறுகளை G.C.E. (A/L) பரீட்சையில் உயர்த்த அழையுங்கள்.

| Biology | Chemistry |
|---|---|
| Narew Master | Indran Master |
| (New Science World) | (New Master Institute) |
| 077 773 0840 | 077 665 5290 |

தனி/குழு/வீடுவந்து கற்பித்தல்
(Tamil & English Medium) (44998)(7.6.3)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு முன்பாக 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 642 8502,
077 813 1599 (29769)(3.6.4)

## வேலையாள்கள் தேவை

கோயில் வேலை தெரிந்த ஆண்கள் தேவை.
தொடர்பு:021 492 0435 (29784)(3.6.4)

## டோஹா கட்டாரில் அல்மீரா சுப்பர்மார்கட்டில்
உடனடி வேலைவாய்ப்பு

| Job Category | Qty | Salary Qrs | Salary RS |
|---|---|---|---|
| மேர்சன்ரைசர் (Merchandiser) | 30 | 800+200 | 36,000/= |

- தங்குமிடம்,போக்குவரத்து,மருத்துவ வசதி வழங்கப்படும்.
- விமானச்சீட்டு 2 வருட ஒப்பந்த காலத்திற்கு பின்னர் வழங்கப்படும்.
- வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம்
- எனைய நிபந்தனைகளும் விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது

1 QR = Rs. 36.00

**நீங்கள் செலுத்தவேண்டிய கட்டணத்தை வேலை பெற்று வெளிநாடு சென்று உங்கள் சம்பளத்தில் செலுத்தும் வசதியை பெற்று தரப்படும்**

**வயதெல்லை : 21 – 27 அனுபவம் தேவையில்லை**

சாதாரண ஆங்கில அறிவுடன்

வீசா கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மாத்திரம் அறவிடப்படும்.

**INTERVIEW**
**24 February 2014**
வெளிநாட்டு முகவர்களால் நடத்தப்படும்
**விசா 7 நாளில் பெற்றுத்தரப்படும்**

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 287-1/2, ஹவ்லொக் றோட், கொழும்பு - 06. (மயூரா அம்மன் கோயில் எதிராக)
**Tel : 0112552598|0773074744|0718126094** (அ/12226)

max adz

## my Cola

உயர்ந்த தரத்திலான மென்பானங்களை பல்வேறு சுவையுடன் தரும் myCola, இன்று நாடளாவிய விற்பனை முகவர்களுடன் வெற்றிநடை போடுகின்றது.
நாங்கள் மேலும் முன்னேறுவதற்கு பின்வருவோரை ஒன்றுசேர்க்க உள்ளோம்.

it's my THRILL

## விற்பனை மேற்பார்வையாளர்
## (SALES SUPERVISOR)
வடமாகாணம்

தகைமைகள் :
- 40வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- மேற்குறிப்பிட்ட துறையில் குறைந்தது 2 அல்லது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்
- குறைந்தபட்சம் க.பொ.த (உயர்) தரத்தில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சிறந்த ஊதியம் , மற்றும் ஏனைய சலுகைகளும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 07 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

Human Resource Manager
**my BEVERAGES MARKETING (PVT) LTD.**
555/5D, Gonahena Road, Kadawatha.
E-mail: jobs@mycola.lk
(C/12223)

IOM International Organization for Migration

## கேள்விமனு கோரல்
### ITB LK14-001/002/003/004

புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (ஐ.ஓ.எம்) புலம்பெயர்தல் தொடர்பாக செயலாற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான முன்னணி நிறுவனமாகும். ஐ.ஓ.எம் நிறுவனமானது, முறையானதும் மற்றும் மனிதாபிமானதுமான முறையில் நிர்வகிக்கப்படுவதையும், புலம்பெயர்தல் தொடர்பான பிரச்சனைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும், புலம்பெயர்தல் தொடர்பான பிரச்சனைகளுக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்குவதற்கும், அகதிகள் உட்பட உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாய மற்றும் மீன்பிடிதுறைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஐ.ஓ.எம் (Bind Evaluation and Awards Committee) ஆர்வமுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்வரும் திட்டங்களுக்கு கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

| வேலையின் பெயர் | முடிவுறும் காலம் | திட்ட அமைவிடம் | முந்தகமை | முன் ஆலோசனைக் கூட்டம்,வேலை இடங்களை பார்வையிடல் திகதி | பொறியியலாளர் மதிப்பீடு இலங்கை ரூபா |
|---|---|---|---|---|---|
| பொதுநோக்கு மண்டபம் | 3 மாதம் | மல்லிகைத்தீவு,புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு,முல்லைத்தீவு | C-8 அல்லது அதற்குமேல் | 07-03-2014 மு.ப 11:00 | 3.5 மில்லியன் |
| பிரம்பு குடிசை கைத்தொழில் கட்டிடம் | 3 மாதம் | மல்லிகைத்தீவு,புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு,முல்லைத்தீவு | C-8 அல்லது அதற்குமேல் | 07-03-2014 மு.ப 11:00 | 2.0 மில்லியன் |
| பொதுநோக்கு கட்டிடத் திருத்தம் | 3 மாதம் | புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு,முல்லைத்தீவு | C-9அல்லது அதற்குமேல் | 07-03-2014 மு.ப 11:00 | 1.7 மில்லியன் |
| மீனவர் ஓய்வு மற்றும் களஞ்சியக் கட்டிடம் | 3 மாதம் | முள்ளிவாய்க்கால் கிழக்கு,கரைதுரைபற்று பிரதேச செயலாளர் பிரிவு,முல்லைத்தீவு | C-8 அல்லது அதற்குமேல் | 07-03-2014 மு.ப 11:00, | 2.9 மில்லியன் |

1. விண்ணப்பதாரிகள் ரூபா 2000 (இரண்டு ஆயிரம்) மீளளிக்கப்படாத தொகையினை ரொக்கமாக செலுத்தி கீழுள்ள முகவரியில் எழுத்து மூலம் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதன் மூலம் முழுமையான ஆங்கில மொழியிலான கேள்விமனுப் பத்திரங்களைப்பெற்றுக்கொள்ள முடியும்

   தவிசாளர்,
   புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம், கொழும்பு அல்லது கிளிநொச்சிகாரியாலயம் (முகவரிகள் கீழே தரப்பட்டுள்ளன)
   காலம் - 25.02.2014 தொடக்கம் 07.03.2014 வரை (மு.ப 10.00 – பி.ப 04.30 வரை)
   கேள்விமனு தொடர்பான ஆவணங்கள் கட்டணமின்றி ஐ.ஓ.எம் நிறுவனத்தில் பார்வையிட முடியும்.
2. திட்டம் தொடர்பான தொழில்நுட்ப விளக்கம் மற்றும் திட்டம் அமையவிருக்கும் இடத்தை பார்வையிடல் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கேள்வி முன் ஆலோசனை கூட்டம், 07-03-2014ம் திகதி மு.ப 11:00 மணிக்கு 155 மைல் கல், A9 வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் ஐ.ஓ.எம் உத்தியோகத்தர்களால் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான முழுமையான விளக்கம் வழங்கப்படும். கேள்விதாரர்கள் தங்கள் வரவை கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 07-03-2014 திகதிக்கு முன் தொலைநகல் (Fax) மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள். கொள்வனவு உத்தியோகத்தர், புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம்,155 மைல் போஸ்ற் வீதி, கிளிநொச்சி தொலைநகல் இல: 0212285386
3. கேள்விப்பத்திரமானது பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 17-03-2014 அன்று 14:30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம், இல 62, ஆனந்தகுமாரசாமி மாவத்தை,கொழும்பு 3. எனும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரமானது அதே தினம் பிரசன்னமான கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். பிரசன்னமாக விரும்பும் கேள்விதாரர்கள் சார்பாக ஒரு பிரதிநிதி மட்டும் கலந்துகொள்ள முடியும்.
4. இல. 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்படாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. சகல கேள்விதாரர்களும் செல்லுபடியான வியாபார அனுமதிப் பத்திரம், ICTAD அனுமதிப்பத்திரம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்
6. கேள்விப்பத்திரமானது திறக்கப்படும் திகதியில் இருந்து 60 நாள்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்
7. கேள்வித்திரம் தயாரித்தல், சமர்ப்பித்தல் தொடர்பான எந்தவொரு செலவீனங்களுக்கும் ஐ.ஓ.எம் நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது.
8. இது தொடர்பான மேலதிக தகவல்களுக்காக கீழ் உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்
   **கொள்வனவு உத்தியோகத்தர் - புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம்**
   இல 62,ஆனந்தகுமாரசாமி மாவத்தை,கொழும்பு 3. தொ.இல; 011 53 25 300
9. ஒப்பந்தம் கையளிப்பதற்கு முன்பாக எந்நேரத்திலும் கேள்விப்பத்திரம் தொடர்பான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள, நிராகரிக்க அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் நிறுவனத்துக்கு உண்டு. இது தொடர்பாக கேள்விதாரர்களுக்கு ஏற்படும் எந்தவித இழப்பீடுகளுக்கும் நிறுவனம் பொறுப்பு ஏற்கமாட்டாது

**லைகொப்பம் தவிசாளர், IOM BEAC புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம்**
**இல 62,ஆனந்த குமாரசாமி மாவத்தை,கொழும்பு 3.** (C/12216)(2.6.3)

## விற்பனைக்கு

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை அருகில் 9 பரப்பு பனங் காணியும், தோட்டமும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 986 5777 (44993)(3.6.4)

## மலிவு விற்பனை
## TVகள், குளிர்சாதனப் பெட்டிகள்

மிக மலிவு விலையில்Sony, பனசோனிக் TVகள் 21" - 14000/=, 29" - 15000/=, இரட்டைக்கதவு - குளிர்சாதனப் பெட்டிகள் - 25000/= முதல், DVD - 3250/=, அம்பிளிபயர், Box, ரேடியோ கசெற்
தொடர்பு: 021 568 9344/077 044 0570
சோனி ரேட்ற்சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்) 56, K.K.S வீதி, சுன்னாகம்.

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 394 4745

## வாகனம் விற்பனைக்கு

LJxxxx, இலக்கம் கொண்ட "டிப்பர்"(கொமட் 2010 மொடல்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 448 1443/077 801 2250
கிளிநொச்சி

**தவறிவிட்டது** 123/1,கன்னாதிட்டியைச் சேர்ந்த கி.இராசரத்தினம் என்பவரது கடதாசிப்பையுடன் முக்கிய ஆவணங்கள், 1குடை, 1தொப்பி தெல்லிப்பழைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 021 222 3920

## மலேசியா நாட்டிற்கு உடன் பயணம்

✱Car Wash ✱Restaurant ✱Factory helper போன்ற தொழில்களில் உடன் வேலை வாய்ப்பு. உணவு, தங்குமிடம், மருத்துவம், இலவசம். மிகக் குறுகிய காலத்தில் பயணம். (43186)(3.6.4)
உடன் தொடர்பு:075 409 9124

## பணிப் பெண் தேவை

24 வயதுக்குட்பட்ட பணிப்பெண் வீட்டில் தங்கியிருந்து வீட்டுப்பணிகளைச் செய்வதற்கு உடன் தேவை. அவர் குடும்பத்தில் ஒருவராகவே நடத்தப்படுவார். முதல் மாத ஊதியமாக ரூபா 9000/= வழங்கப்படும். கிராம சேவகருடைய நற்சான்றிதழோடு பணிக்கு வரவேண்டும். வேலைக்கு வருபவர் மட்டுமே தொடர்பு கொள்ளவேண்டும்.
தொடர்பு:021 226 0277 (46061)(3.6.4)

## கடைகள் வாடகைக்கு

நல்லூர் தெற்கு வீதியில் 31'x 12' நீள அகலம் கொண்ட இரண்டு கடைகள் (குளியல், கழிவறையுடன்) வாடகைக்கு. புதிய பிளாஸ்ரிக் கதிரைகளும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு:077 651 0434 (46000)(3.6.4)

## டுபாய்

MINARAL WATER-Company helper 60 பேர் -1200 (QR) Salary. 20-35 வயது வரை செல்ல முடியும். ஆங்கில அறிவு ஓரளவு போதுமானது. உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்.
26.02.2014 ஆம் திகதி கொழும்பில் வெளிநாட்டு முகவர்களால் நேர்முகத்தேர்வு இடம்பெறும்.
தொடர்பு: 077 395 7291 (43183)(10.6.3)

## வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் Tea, Paint, Tin. Plastic bag, கோழி இறைச்சி, Battery, Brush போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18-48 வரையான ஆண்/பெண் இருபாலாருக்கும் உணவு, தங்குமிட வசதியுடன் நிரந்தர வேலை வாய்ப்பு.
தொடர்பு: 076 699 1993 (44893)(10.6.3)

## பரதநாட்டிய அரங்கேற்றம்




**ஸ்ரீமதி கலையரசி கல்யாணி தயாபரன்**
அவர்களின் மாணவியும்
**திரு.திருமதி விஜயராஜ்**
தம்பதியரின் புதல்வியுமான
**செல்வி வித்யா**
அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்
**இன்று (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு**
Sentrum Scence, Arbeidersamfunnets plass, 0181 OSLO, NORWAY
என்னும் அரங்கில் நடைபெறவுள்ளது.
**செல்வி வித்யா விஜயராஜ்** அவர்களின் அரங்கேற்ற நிகழ்வு சிறப்புற அமைவதுடன் அவர் புகழ் நானிலம் போற்றிடவும் எம் நல்வாழ்த்துக்கள்.

**புங்கன்குளம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

வாழ்த்துவோர் :
அப்பம்மா, நாதன் மாமா,றஜினி மாமி, சுவர்ணன், சுவேன், சுவராஜ் (44991)(7.6.3)

கீரிமலை – நகுலேஸ்வரம்



அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி திருக்கோயில்
பூச்சப்பறத்திருவிழா 10 ஆம் நாள் இன்று (23.02.2014)ஞாயிற்றுக்கிழமை

"பூச்சப்பறத்திலே இன்று பூங்கோதை நகுலேஸ்வரியுடன்
நீக்கமற நீயும் வந்திடுவாய் வீதியுலா – உன்
பக்தர்களைக் காத்திடவே கடலோரம் வீற்றிருந்து
தக்கவரமளித்திடுவாய் உன் தயவு நாடியவர்க்கே"

அனுசரணை:

**பத்தாம் திருவிழா உபயகாரர்களும்**
**கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்.**

(சி/12101)(2-6-3)

# குளிரூட்டப்பட்ட BUS விற்பனைக்கு

## TOYOTA COASTER

- 26 இருக்கைகளை கொண்டது.
- யாழ்பாணத்தில் பாவனையில் உள்ளது.
- உற்பத்தி ஆண்டு YOM-2011.
- விலை பேசி தீர்மானிக்கப்படும்.



**தொடர்புகளுக்கு : 0773 788795**

## கார் விற்பனைக்கு

NISSAN SUNNY FB 14
300-xxxx இலக்கமுடைய
(Super Saloon) White Colour
கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 015 5039 (44972)(3.6.4)

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் ஏ.9 பாதைக்கு
அண்மையில் புகையிரத நிலைய
வீதியில் சகல வசதிகளுடன் கூடிய
கடை வாடகைக்குண்டு. (44968)(3.6.4)

தொடர்பு:077 633 7307, 077 023 6718

## வீடு வாடகைக்கு

ஆனைப்பந்தியடியில் சகல
வசதிகளுடனும்
கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:071 514 0950 (44966)(3.6.4)

## கடை வாடகைக்கு

சாவகச்சேரி கொமர்ஷல்
வங்கிக்கு அருகில் உள்ள
இரு கடைகள்
வாடகைக்குள்ளன.

(44969)(3.6.4) தொடர்பு:077 875 9401

## பெண் பணியாளர்கள் தேவை

கொக்குவில்ஆடியபாதம் வீதியில் உள்ள
Medical Clinicஇல் பணியாற்ற
பெண்பிள்ளைகள் தேவை.
வேலை நேரம் மாலை 4- இரவு 8மணிவரை
கொக்குவில், மருத்துவபீடம், பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில்
வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
(அரச வைத்தியசாலையில் பணியாற்றுவோர்/
ஓய்வுபெற்றோர் தொடர்புகொள்ள வேண்டாம்)

(44973)(12.3.6) தொடர்பு: 077 821 0007

## கணினித் தட்டெழுத்தாளர் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் சட்டத்தரணியின்
அலுவலகத்திற்கு தமிழ்-ஆங்கிலம் ஆகிய இரு
மொழிகளிலும் நன்கு புலமையுடையவரும்
கணினித் தட்டெழுத்தில் நல்ல அனுபவமும்
தேர்ச்சியுமுடைய கணினித்
தட்டெழுத்தாளர் தேவை.
Manual Type Writter இல் தட்டெழுத்து
செய்யும் அனுபவம் மேலதிக தகைமையாகக்
கருதப்படும்.

தொடர்பு:021 224 1898/Mobile: 075 532 7185 (44944)(3.6.4)

# முகவர்கள் தேவை

★ யாழ்ப்பாணம் ★மன்னார்
★ வவுனியா ★மட்டக்களப்பு
★ கிளிநொச்சி


ஆகிய பிரதேசங்களில்

**Mineral Water**

விநியோகம் செய்வதற்கு
முகவர்கள் தேவை

வங்கி உத்தரவாதம் மற்றும் சகல
வசதிகளையும் கொண்டவர்கள் விரும்பத்தக்கது

**Hotline - 0715 711 711**



# 75 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

23.02.2014



## சின்னப்பொடி இராசரெத்தினம்

கனவுகள் எல்லாம் நனவாகி - நீங்கள்
கருதுவ தெல்லாம் நினைவாகி
மனதால் விரும்பும் எல்லாம் - உங்கள்
வாழ்வில் கிடைத்த மகிழ்வோடு
அனைத்து வளங்களும் நலன்களும்
பெற்று வாழ்க என வாழ்த்துகின்றோம்




அன்புடன் வாழ்த்தும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.74, துளசி புகைப்படக் கலையகம்,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

(43530)(2.6.3)

# பாடசாலையை விட்டுவிலகிய உங்களுக்கு தொழில் பயிற்சிக்கான சந்தர்ப்பம்



வயது 18 - 25 இற்கு
இடைப்பட்ட பாடசாலையை
விட்டு விலகிய இளைஞர்கள்
மற்றும் யுவதிகளுக்கான அரச சார்
பற்ற நிறுவனத்தினூடாக நடத்தப்
படும் தொழில் பயிற்சிக்கான
பாடநெறிகள் "இலவசம்"
கிளிநொச்சி ஒத்துழைப்பு
மையத்தில்

| பாடநெறிகள் | காலம் |
|---|---|
| ★ ஆங்கிலப் பாடநெறி | 06 மாதம் |
| ★ கணினி பாடநெறி | 06 மாதம் |
| ★ அழகுக்கலை பாடநெறி | 06 மாதம் |
| ★ தையல் கலை பாடநெறி | 06 மாதம் |

★ விசேட பயிற்சி பெற்ற அனுபவமிக்க ஆசிரியர்களால் நடத்தப்படும் கற்கை நெறிகளை வெற்றிபூர்வமாக நிறைவேற்றும் உங்களுக்கு அரசசார்பான நிறுவனத்தின் ஊடாகச் சான்றிதழ் வழங்கப்படும்.

★ பாடநெறியின் முடிவில் வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம்.

★ உங்கள் விண்ணப்பப் படிவங்கள் யாவும் 2014.03.05 ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ, நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.

**இணைப்பாளர்,**
**ஒத்துழைப்பு மையம் - கிளிநொச்சி.**

(43526)(2.6.3)

# பயிற்றுவிப்பாளர்கள் இணைத்துக் கொள்ளல் ஒத்துழைப்புமையம், கிளிநொச்சி

அரசசார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன்
கிளிநொச்சி ஒத்துழைப்பு மையத்தின் ஊடாக
நடைபெறவிருக்கும் இப் பிரதேச வேலைவாய்ப்பற்ற
இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான இலவச பயிற்சி
நெறிகள் இலவசமாக நடத்துவதற்கு அனுபவமிக்க
பயிற்சியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவிருக்கின்றனர்



| பாடநெறிகள் | நடத்தப்படும் இடம் | காலம் |
|---|---|---|
| அழகுக்கலை பாடநெறி | ஒத்துழைப்பு மையம் கிளிநொச்சி | 06 மாதம் |
| தையல் கலை பாடநெறி | | 06 மாதம் |
| கணினி பாடநெறி | | 06 மாதம் |
| ஆங்கிலப் பாடநெறி | | 06 மாதம் |

**தேவையான தகுதிகள்:**


அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் அல்லது வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழில் பயிற்சிகள் பெற்ற தகுதிச் சான்றிதழ்கள். (சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்)

**கொடுப்பனவுகள் வரப்பிரசாதங்கள்**

★ உயர்வான மாதக் கொடுப்பனவுகள் (கலந்துரையாடி முடிவெடுக்கப்படும்)
★ மதியபோசனம் மற்றும் தேநீர் இலவசம்
★ எல்லா வகையிலான சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்கள் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 05.03.2014 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கலாம்.
★ விண்ணப்பப்படிவத்தில் உங்கள் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.
★ விண்ணப்பப் படிவங்களை ஒப்படைக்க வேண்டிய இடம்:

**இணைப்பாளர்,**
**ஒத்துழைப்பு மையம் - கிளிநொச்சி.**


(43525) (2.6.3)





சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பழைய மாணவனும் ஓய்வு நிலை அதிபருமான வ.கயிலேஸ்வரனையும் உடற்கல்வி மாணவர்களின் விளையாட்டு ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீஸ்கந்தா, முன்பள்ளி அதிபர் நா.அருட்சோதி ஆகியோரையும் சிறார்களின் விளையாட்டு நிகழ்வையும் காணலாம். (க-9)







நெல்லியடி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினரான மருத்துவர் என்.பரஞ்சோதி வரவேற்கப்படுவதையும் கல்லூரியின் கடேற் பிரிவால் குண்டு வெடிக்க வைக்கப்படுவதையும், சிரேஷ்ட மாணவர்களின் பாண்ட் வாத்தியக் குழுவினரையும் காணலாம். (ஒ-422)





சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மாணவத் தலைவர்கள் தின நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவனும் பிரதம விருந்தினருமான மருத்துவர் ரி.சேத்திரபாலனுக்கு மாணவத் தலைவர்களின் சிரேஷ்ட தலைவன் மாலை அணிவிப்பதையும் கலை நிகழ்ச்சியையும் காணலாம். (ஒ-36)



யாழ். மத்திய கல்லூரியின் 7 கிலோ மீற்றர் தூர வீதியோட்டத்தை கல்லூரி இல்லங்களின் மாணவர்கள் ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாக நின்றபோது... (ஒ-51)





வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தம்பதியர் வரவேற்கப்படுவதையும் திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் பரிசில் வழங்குவதையும் காணலாம். (ஒ-173)





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியை சங்கானைக் கல்விக் கோட்டத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஏ.எஸ். மரியாம்பிள்ளை ஆரம்பித்து வைக்க அருகில் கல்லூரி அதிபர் வண கலாநிதி டி.எஸ். சொலமன் மற்றும் பெற்றோர் காணப்படுகின்றனர். மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்ச்சியும் இடம்பெறுகின்றது. (க)





கைதடி - நுணாவில் அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி ஒன்றில் வெற்றியீட்டிய வீரர்களுடன் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட தென்ம ராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர், அதிபர் ஆகியோரையும் அணி வகுப்பையும் காணலாம். (ஒ-9)



யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்ட குருநகர் - சீநோர் படைமுகாம் பொறுப்பாளர் லெப்டினன்ட் ஜெகத் வெற்றியீட்டிய மாணவன் ஒருவனுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குகிறார். (ஒ-51)



கிராஞ்சி அ.த.க.பாடசாலையில் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணமும், சிறப்பு விருந்தினரான கிராஞ்சி கிராம சேவையாளர் கு. கணேசமூர்த்தியும் அழைத்து வரப்படுகின்றனர். (க-18)





கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பாண்ட் வாத்திய அணி வகுப்பையும் காணலாம். (க-18)



கிளிநொச்சி பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் கே.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீகுமரன் வெற்றிக் கேடயத்தை வழங்குகிறார். (க-18)



கிளிநொச்சி புன்னைநீராவி அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந் தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் வெற்றி பெற்ற அணியினருக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்குகின்றார். (க-18)






தனிநாயகம் அடிகளார் பாடசாலை வித்தியாலயத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் ஒலிம்பிக் சுடர் ஏற்றும் பாடசாலை மாண வர்களும் கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்களும். (க-402)



மன்னார் முருங்கன் ஆரம்பப் பாடசாலையில் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி முருங்கன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பரிசில்களை வழங்குவதையும் காணலாம். (க-56)



யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றமும், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகமும் இணைந்து கலைப்பாலம் நிகழ்வொன்றை அண்மையில் கிளிநொச்சியில் நடத்தியுள்ளன. கரைச்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தைச்சேர்ந்த கலைஞர்களும், தென்னிலங்கையைச் சேர்ந்த கலைஞர்களும் இணைந்த கலைநிகழ்வு. (க-18)




வவுனியா பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய விழா அண்மையில் வவுனியா நகரசபை முத்தையா மண்டபத்தில் பிரதேச செயலர் க.உதயராசா தலைமையில் இடம்பெற்ற போது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவிகள் மற்றும் வவுனியா நிருத்திய நிவேதன மாணவிகள் வழங்கிய நடன நிகழ்வையும், வவுனியா பிரதேசத்துக்குரிய அகளங்கனின் கவி வரிகளில் உருவான பாடல் இறுவட்டை வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வவுனியா பிரதேச செயலர் க.உதயராசா, உதவிச் செயலர் திருமதி செ.கர்ணன், கலாசார உத்தியோகத்தர் எஸ்.நித்தியானந்தன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைப்பதையும் பாடல் ஒலிப்பதிவின் போது குரல்கொடுத்த செல்வி தயானந்தி நித்தியானந்தனுக்கு வவுனியா அரச அதிபர் கௌரவம் செய்து வைப்பதையும் கலைநிகழ்வையும் காணலாம். (க-421)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

மாசி-12 திங்கட்கிழமை 24.02.2014
திதி: தசமி பி.இ.02.01 வரை
நட்சத்திரம்: மூலம் பி.இ.04.08
சுபநேரம்: 12.30- 02.00 வரை
இராகுகாலம்:08.00.-09.30 வரை

**மேடம்**: குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். உங்களுக்கு யாரும் முக்கியத்துவம் தருவதில்லை எனப் புலம்புவீர்கள்.

**இடபம்**: முகப்பொழிவுடன் காணப்படுவீர்கள். முடியாமல் போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும்.

**மிதுனம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**கடகம்**: மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். அவர்களின் உடல் நிலை சீராக அமையும். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும்.

**சிங்கம்**: குடும்பத்ினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். அரசுக் காரியங்களில்அனுகூலமானநிலைகாணப்படும்.

**கன்னி**: முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கல்களுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்ட நாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வீர்கள்.

**துலாம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிப்பு மரியாதைக் கூடும். சகோதரர்கள் உதவுவார்கள். வியாபரத்தில் பாக்கிகளை விரைந்து வசூலிப்பீர்கள்.

**விருச்சிகம்**: ராசிக்குள் சந்திரன் நுழைவதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். குடும்பத்தாரின் உணர்வுக ளைப் புரிந்துக் கொள்ளுங்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும்.

**தனுசு**:எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.

**மகரம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளை நல்வழிபடுத்துவீர்கள். அவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கும்பம்**:புது எண்ணங்கள் தோன்றும். விரும்பியப்பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பணவரவு உண்டு. கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும்.

**மீனம்**: எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்துபணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சித் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். வியா பாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 5 | | | | | |
| | | | 9 | 6 | 1 | | 8 | |
| | 1 | 6 | | 7 | | 3 | | 9 |
| 4 | 3 | | 1 | | 7 | 5 | | |
| | | 5 | | 2 | | 7 | | |
| | | 7 | 3 | | 5 | | 2 | 4 |
| 3 | | 1 | | 5 | | 4 | 6 | |
| | 7 | | 6 | 3 | 8 | | | |
| | | | | | 4 | 8 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 5 | 4 | 8 | 3 | 6 | 1 | 9 |
| 4 | 3 | 1 | 9 | 6 | 2 | 5 | 8 | 7 |
| 8 | 6 | 9 | 1 | 7 | 5 | 2 | 4 | 3 |
| 9 | 5 | 6 | 7 | 3 | 1 | 4 | 2 | 8 |
| 1 | 2 | 4 | 8 | 9 | 6 | 3 | 7 | 5 |
| 3 | 8 | 7 | 5 | 2 | 4 | 1 | 9 | 6 |
| 7 | 4 | 2 | 6 | 5 | 9 | 8 | 3 | 1 |
| 5 | 9 | 3 | 2 | 1 | 8 | 7 | 6 | 4 |
| 6 | 1 | 8 | 3 | 4 | 7 | 9 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


Fantastic FEBRUARY SPECIALS 2014

யாழ் softlogic
BEST IN THE BUSINESS

காட்சியறையில் மாத்திரம்
(கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.)



**5600/=** மாத்திரம் செலுத்தி 32" **Panasonic LED** தொலைக் காட்சிப் பெட்டியினைப் பெற்றுக் கொண்டு மீதிப் பணத்தை 12 மாத வட்டியில்லாத தவணைக் கொடுப்பனவு முறையில் செலுத்தலாம்.

யாழ்ப்பாணக் காட்சியறையில் தொலைக்காட்சிப் பெட்டியைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு எம்மால் வீடுகளுக்கு கொண்டுவந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
0777 397 734 / 077 048 2041 / 077 982 4213 / 075 040 9787

(C1251410.6)


-நிபந்தனைக்குட்பட்டது-

# காண விரும்புகிறோம்

படத்தில் பெற்றி எனும்
கிளியுடன் இருக்கும்
சங்கரவின் தந்தையாரான
**சின்னத்தம்பியை**
**கண்டி அம்மா**
காணவிரும்புகிறார்.
இந்தத் தகவலை
சின்னத்தம்பியிடம் தெரிவித்து
**போதகர் ஐயாவை**
தொடர்புகொள்ளவும்.

077 063 9711
(போதகர் ஐயா)
சாவகச்சேரி.

(44919) (45.6.3)



**சீர்மியர் (உளவள ஆலோசகர்) பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்**
**(Diploma in Counseling)**

- மேற்படி பயிற்சி 8மாத கால விரிவுரைகளையும் 4மாதகால செய்முறைகளையும் கொண்டது.
- பயிற்சி நடைபெறும் இடம்: சிவபூமி ஞான ஆச்சிரமம் குப்பிளான்.
- பயிற்சி திங்கள், புதன், வெள்ளி, (மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 04.00 மணி வரை.
- விண்ணப்பதாரி க.பொ.த உ/த பரீட்சையில் குறைந்தது 3பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- 20வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- பயிற்சி முடிவில் நடைபெறும் எழுத்துப்பரீட்சை, வாய்மொழிப்பரீட்சை, விடய முன்வைப்புப் பரீட்சை ஆகியவற்றில் சித்தி அடைவதோடு பத்துச் சீர்மிய நபர்களுடன் செய்த உரையாடல் ஒப்படை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் அனைவரும் நேர்முகப்பரீட்சையினூடு தெரிவுசெய்யப்படுவார்.
- பயிற்சிக் கட்டணமாக ரூபா 11,000
- முழுப்பெயர், பிறந்த திகதி, விலாசம், தொலைபேசி இலக்கம், கல்வித்தகைமை, பிறதகைமைகள் ஆகிய விவரங்களோடு விண்ணப்பங்களை **சிவபூமி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.** என்ற முகவரிக்கு 10.03.2014இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு 077 690 9718 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**சிவபூமி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்** (44899) (12.3.6)



யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றுவதையும் அதிபர் மு.மகேந்திரன் மற்றும் பிரதி அதிபரும், விளையாட்டுச் செயலருமான செல்வி ச.சின்னத்துரை ஆகியோர் பிரதம விருந்தினருக்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும் காணலாம். (ஒ)



சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவில் அம்மன் தேரேறி வலம்வரும் காட்சி. (ஒ-9)



சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் கால்கோள் விழாவில் தேவாரம் பாடும் மாணவி ஒருவரும் பிரதம விருந்தினரும் ஓய்வு பெற்ற அதிபருமான 'சிற்பி' சரவணபவனுடன் அதிபர், ஆசிரியர்களும். (ஒ-36)





மாசியப்பிட்டி வள்ளுவர் சனசமூக நிலையத்தின் 23 ஆவது வருட பூர்த்தி நிகழ்வு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற போது விருந்தினர்கள் மாலை அணிவித்து வர வேற்கப்படுவதையும் நிகழ்வில் சிறுமி ஒருவ ருக்கு சண்டிலிப்பாய் பிர தேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத் தர் திருமதி ம.கேதார கௌரி பரிசில் வழங்குவ தையும் காணலாம். (ஒ)



தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் தரம் ஒன்றுக்கான கால்கோள் விழா நிகழ்வில் மாணவர்களுக்கு வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர், என். அனந்தராஜ், பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீராமச்சந்திரா ஆகியோர் பரிசில் பொதிகளை வழங்குகின்றனர். (ஒ-400)





சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூ ரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடை பெற்ற போது வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றி பீடத்தில் சான்றிதழ் வழங்கப்படுவதையும் இடைவேளையின் போது இடம் பெற்ற காட்சியும் கானமும் நிகழ்ச் சியையும் காணலாம். (ஒ)



யாழ். மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் சுன்னாகம் கிளை அண்மையில் திறந்து வைக் கப்பட் டுள்ளது. வலி. தெற்கு பிரதேச சபையின் தலைவர் ரி.பிரகாஸ் கட்டடத்தை திறந்து வைத்தார். (ஒ-14)



சேதமடைந்து காணப்படும் வீதியின் சில பகுதி

## குன்றும் குழியுமாக எழுத்தூர் வீதி

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியின் எழுத்தூர் சந்தியில் உள்ள பிரதான வீதி நீண்ட நாள்களாக குன்றும் குழியுமாக காணப்படுவ்தாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் சிரமத்துக்கு உள்ளாகுகின்றன. பாதசாரிகளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குடிதண்ணீர் இணைப்புக்காக வீதி தோண்டப் பட்டுள்ள நிலையி லேயே வீதியில் பள்ளம் ஏற்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-56)

## வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் உடன் நடைமுறைக்கு

### நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.23

ஆடியபாதம் வீதி, இருபாலை வீதிகளுக்கு மின்சார சபை யின் உதவியுடன் வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்து வது தொடர்பில் நல்லூர் பிர தேச சபையின் முன்னைய கூட்டத் தீர்மானத்தை உடன டியாக நடைமுறைப் படுத்து வதாக செவ் வாய்க்கிழமை இடம்பெற்றசபையின் மாதாந் தக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது.

இதனடிப்படையில் உள்ளக வீதிகளில், முக்கியசந்திகள், வீதிவளைவுகள்போன்றவற் றில் மின்சார சபை உதவி யுடன் அந்தந்தப் பகுதி உறுப்பினர் மூலம் இடம் தெரிவு செய்து மின் விளக்குகள் பொருத்துவதுஎன்றுதீர்மானிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலை மையில் நடைபெற்ற மாதாந் தக் கூட்டத்தில் பிரதேச சபையின் தொழில்நுட்பக் குழுத் தலைவர் தா.தியாகமூர்த்தி குறிப்பிட்ட பிரேரணைகளைச் சமர்ப்பித்திருந்தார். பரீட்சார்த்தமாக ஒவ்வொரு உறுப்பினர்களுக் கும் பத்து மின்விளக்குகள் வீதம் வழங்கவும் வீதிகள் புனர மைப் பதற்கு முன்னர் தொழில் நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட் டைப் பெற்று சபைக் குப் பரிந்துரை செய்ததற்கு அமைய மக்களின் மேற்பார் வைக் குழு தெரிவு செய்து அவர்களின் பங்களிப்புடன் வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும். வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட வீதிகள் முதலில் புனரமைக்கப்பட வேண் டும் என்றும் சபை முடிவெடுத்துள்ளது. (வ-7)



## மரத்திலிருந்து வீழ்ந்தவர் சாவு

ஆட்டுக்குக் குழை வெட்டுவதற்கு வேப்ப மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.
இந்தச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைதடி கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது. இதில் கைதடி கிழக்கு கள்ளி நகரைச் சேர்ந்த நாகன் செல்வரத்தினம் (வயது-49) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்த வராவார். சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-400-188)

## கிராம அலுவலர்களுக்கு பாராட்டு



மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் கிராம அலுவலர் ஒருவருக்கு விருது வழங்குகிறார். அருகில் யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத் தலைவர் சுந்தரராஜனையும் காணலாம்.

யாழ்ப்பாணம், பெப்.23
யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
கிராம அலுவலர் ஆர்.சுந்தரராஜன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட உதவி செயலாளர் எஸ்.சுதர்சன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
கடந்த ஆண்டில் கிராம அலுவலர்களில் பிரச்சினைகள் குறித்தும் அது தொடர்பாக சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் சங்கத்தின் தலைவர் சுந்தரராஜன் விளக்கிக் கூறினார். புதிய நிர்வாகிகள் தெரிவைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற கிராம அலுவலர்களுக்கான பாராட்டு விருதுகள் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. (ரு-7)






# செப்பனிடப்பட்டது விளையாட்டு மைதானம்

வவுனியா,பெப் .23

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுக்கான விளையாட்டு மைதானம் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் செப்பனிடப்பட்டுள்ளது.

மைதானத்தின் உட்பகுதியில் கனரக வாகனத்தின் உதவியுடன் குறித்த விளையாட்டு மைதானம் செப்பனிடப்பட்டதாக ஆரம்பப் பிரிவு அதிபர் செ.மோகநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் சிறுவர்கள் தமது உடல்,உளப் பயிற்சிகளை மைதானத்தில் மேற்கொள்ளக்கூடிய வகையில் அதனைச் சுற்றியுள்ள பற்றைகளும் அகற்றப்பட்டுள்ள துடன் அண்மையில் இதற்கான சிரமதானப் பணிகளும் கால்வாய் புனரமைப்புகளும் மேற்கொள்ளப்பட்டு, மழை காலங்களில் நீர் தேங்காத வகையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய சிரமதானப் பணிகளை முன்னெடுத்து சுகாதாரத்தை பாடசாலையில் மேம்படுத்த உதவிய பெற்றோர்களுக்கு அதிபர் பாராட்டுத் தெரிவித்துள்ளார். (வ-402)

**சிறுவர்கள் தமது உடல்,உளப் பயிற்சிகளை மைதா னத்தில் மேற்கொள்ளக்கூடிய வகையில் அதனைச் சுற்றியுள்ள பற்றைகளும் அகற்றப்பட்டுள்ளன.**

IELTS™

Win university scholarships worth Rs.500,000




We are pleased to introduce the British Council University Scholarship programme. This programme provides the opportunity for two of our IELTS candidates to win scholarships worth Rs.500,000 each to pursue their higher education in any country outside of Sri Lanka.

The scholarship is open to candidates taking the IELTS test with the British Council between 1 January and 31 March 2014. For further details, terms and conditions and to download the application form, please visit www.britishcouncil.lk

BRITISH COUNCIL

IELTS is jointly owned by British Council, IDP: IELTS Australia and Cambridge English Language Assessment.



கிளிநொச்சி மாவட்டத்தில் கால போகச் செய்கையில் அறுவடை செய்த நெல்லை வீதியில் காயவிடுவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். திடீரென பெய்யும் மழையால் அறுவடை நேரத்தில் விவசாயிகள் நெல்லைக் காயவிடுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். மாரி மழை தகுந்த முறையில் இல்லாத நிலையிலும் இந்த முறை நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ள போதும் குளங்களின் கீழான நெற்செய்கை ஓரளவு வெற்றியளித்துள்ளது. இவ்வாறு விளைந்த நெல்லை விவசாயிகள் காயவிடுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். திடீரென பெய்யும் மழைக்கு மத்தியிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் வீதிகளில் நெல்லைக் காயவிட்டு சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். பரந்தன் - பூநகரி வீதியில் நெல் காய விடப்பட்டுள்ளதை இங்கு காணலாம். (வ-18)

# சந்தைகளின் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்க

## வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்து

வலி.தென்மேற்கு, பெப்.23

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக இயங்கி வரும் பொதுச் சந்தைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ள சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி சந்தைகளில் காணப்படும் குறைபாடுகளைப் பட்டியலிட்டு அவற்றை விரைவாக நிவர்த்தி செய்யுமாறு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளார்.

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் கீழ் ஒன்பது பொதுச் சந்தைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் கடலுணவு, மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுவதுடன் சில சந் தைகளில் வர்த்தக நிலையங்களும் இயங்குகின்றன.

அந்த சந்தைகள் மலசல கூடம், குடி தண்ணீர் உட்படப் பல வசதியீனங்களுடன் சுகாதார விதிமுறைகளுக்கு முர ணாக இயங்கி வருவதால் வியாபாரிகள் மட்டுமல்ல அங்கு வரும் பொது மக்களும் பாதிக்கப்படுகின்றனர்.

சந்தைகளில் நிலவிவரும் குறைபாடுகளை அவதானித்த சுகாதாரப் பகுதியினர், மக்களின் நலன் கருதி அவற்றை விரைவாக நிவர்த்திசெய்யுமாறு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளனர். சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தலுக்கு அமைய சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளைப் பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் உறுப்பினர்களின் ஆலோசனைகளுடன் மேற்கொண்டுள்ளார். (வ-115)

# நீண்ட காலத்தின் பின்னர் மின்சாரம் கிடைத்த கிராமங்கள்

வவுனியா,பெப்.23

நீண்ட காலமாக மின்சாரம் கிடைக்காத கிராமங்களான வவுனியா - ஆச்சிபுரம் ஓமந்தை, வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்டம் ஆகிய பகுதிகளுக்கு மின் ஒளி கிடைத்துள்ளது. வவுனியா - ஆச்சிபுரப் பகுதியில் 282 குடும்பங்களும் ஓமந்தை, வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் 150 இற்கு மேற்பட்ட குடும்பங்களும் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர். மின்சார இணைப்பினை வழங்குவதற்குரிய துரித நடவடிக்கைகளை மின்சக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, பொறியியலாளர் எஸ்.பிரபாகரன், ஸ்ரீ ரெலோ செயலாளர் நாயகம் ப.உதயராசா ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் இதுவரை மின்சாரம் கிடைக்காத பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-402)

அழகான தோற்றத்துடன் என்றும் உங்களை வெளிக்காட்டுங்கள்

இளமைப்பருவத்திலிருந்து வாழ்க்கையின் மாறுபட்ட பல நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கும் பெண்ணானவள் இவ்வனைத்து நிகழ்வுகளிலும் அழகாக இருப்பின் அது அவள் பெற்ற அதிஷ்டமாகும். என்றும் மறையாத அழகினை வாழ்நாள் முழுவதும் பெற்றுத்தரும் Facia உங்கள் அழகினை என்றும் பாதுகாக்கின்றது. Facia சருமசுருக்கம், சருமத்தில் நிற மாற்றம் ஏற்படுவதை தடுத்து சருமத்திற்கு பளபளப்பான பொலிவினை சேர்க்கின்றது. Facia தலைமுடி உதிர்தலை தடுத்து தலைமுடிக்கு போஷணையை வழங்கி வனுமிக்க அழகான கூந்தலை உங்கள் உரிமையாக்குகின்றது.

Facia உங்களது நகங்களை அழகாக்குகின்றது. Facia சருமம், தலைமுடி மற்றும் நகங்களின் அழகிற்கு தேவையான பிரதான போஷனை மூலக்கூறுகள் பலவற்றினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை உற்பத்தியாகும்.

Facia இல் அடங்கியுள்ள இயற்கை மூலக் கூறுகள்" கடல் கொலஜின் (Marine Collagen)- உடலின் அனைத்து பாகங்களினதும் பராமரிப்பிற்கு தேவையான பிரதான மூலக்கூறாக இதனை வகைப்படுத்த முடியும்.

திராட்சை விதை சாறு (Grape Seed Extract)- சருமச்சுருக்கம், தலைமுடி உதிர்தல் போன்றவற்றை தடுக்கின்றது.

பயோடின்- தலைமுடிக்கு சிறந்த பராமரிப்பினையும் சக்திமிக்க நகங்களையும் பெற்றுத்தரும். இதற்கு மேலதிகமாக பல இயற்கை மூலக்கூறுகள் உள்ளடங்கியுள்ளன. Facia அவுஸ்திரேலியாவின் CMPS தனியார் நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்றது. ஆஸ்திரேலியாவின் TGA தரச் சான்று மற்றும் உலக சுகாதார அமைப்பின் தரச் சான்று (WHO - GMP) Facia உற்பத்திக்கு கிடைத்துள்ளது. இயற்கை மூலக்கூறுகளை மட்டுமே பயன்படுத்தி தயாரிக்கப்படும் உற்பத்தியான Facia இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இயற்கை உற்பத்தியாகும்.

TGA பதிவிலக்கம்: 67513



## காணி விற்பனைக்கு

அளவெட்டி பிரதான வீதியில் அலுக்கைச் சந்திக்கு அண்மையில் நல்ல சூழலில் கடைகள், வீடுகள் கட்டுவதற்கேற்ற கிணற்றுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு: 071 627 5177

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், 178/8, கொழும்புத்துறை வீதியிலுள்ள 9½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு: 077 789 4004

## காணி விற்பனைக்கு

உடுவில், மானிப்பாய் றோட் அருகில் உடுவில் மகளிர் கல்லூரிக்கும், சிவஞானப் பிள்ளையார் கோயிலுக்கும் அண்மையாக உள்ள 4½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உள்ளது. தனிக்கிணறும் உள்ளது.
தொடர்பு: 077 736 1326

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் (திருமுருகன் கொம்நெற் அருகில்) 50 அடி நீளமும் 13 அடி அகலமும் உடைய கடை வாடகைக்குண்டு.
நிறுவனங்கள், அலுவலகங்கள் விரும்பத்தக்கது. (45002)(3.6.4)
தொடர்பு:077 732 9862

## சேவை

சுவாமி ஆயுள்வேத ஆஸ்பத்திரி, Home & Hotel Visit வயிறு சம்பந்தமான, ஆண்களுக்கான பிரச்சினை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஒயில் மசாஜ், இந்திய சிகிச்சை, ஸ்பா, ஆயுள்வேத மசாஜ் & ஸ்ரீம் பார்த், அர்சஸ் வியாதிகளுக்கும் @ மௌன்ட் லெவனியா, பிரியா
072 813 8773/ 077 720 4921/ 011 458 8114 (45.6.3)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1978 பூரம் பாவம் 22 உடைய பட்டதாரி ஆசிரியருக்கு செவ்வாய்க் குற்றமற்ற அரச உத்தியோகத்திலுள்ள மணமகளை யாழ்ப்பாணத்தில் எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு:077 730 1455 (44593)(3.6.4)

## ஐஸ்கிறீம் மெசின் விற்பனைக்கு (Ice Cream Machine)

மீசாலை, புத்தூர்ச் சந்தி பாடசாலைக்கு அருகில் உள்ள ''சொய்சஸ்'' வணிக நிலையத்தில் ஐஸ்கிறீம் மெசின் விற்பனைக்குண்டு.
(BQL 20/2 Production 18 kg-20kg, winrich company)
தொடர்பு:077 541 3945 (சி/12549)(3.6.4)

## வீடு வாடகைக்கு

நல்லூர், செட்டித் தெருவில் 3 படுக்கை அறைகளுடன் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம். 077 404 8949

## வாடகைக்கு

4அறைகள் Tiled வீடு சோமசுந்தரம் அவனியூவில் வாடகைக்குண்டு.
மாதம் 20,000/=
தொடர்பு: 077 374 2934/076 690 7064

## தேவை

வீட்டுப்பணிப்பெண் தங்கியிருந்து வேலைசெய்ய இருவருள்ள குடும்பத்திற்குத் தேவை. வயது 40 - 45. நோயற்ற தனியார் விரும்பத்தக்கது. சம்பளம் தகுதிக்கேற்ப 23000/= தொடர்பு: 072 503 6434

## வீடு வாடகைக்கு

பொற்பதி வீதியில் தரிப்பிட வசதி உள்ள மாடிவீடு உடன் வாடகைக்குண்டு.
தொடர்பு:011273 0734, 011 272 2750 (33377)(3.6.4)

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)
Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222 (சி/12214)(3.6.4)

## கடை விற்பனைக்கு

சுன்னாகம் சந்தியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் NDB வங்கிக்கு அருகிலுள்ள கடை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-0777 698 158 (45016)(6.2.3)

## மணல் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவற்குழிப் பிர தேசத்தில் 300 கியூப்புக்கும் அதிகமான மணல் விற்பனைக்குண்டு. சிறந்த விலையில் மொத்தமாகவோ, சில்லறையாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
உடனடித்தொடர்பு:077 233 0855 (சி/12561)(3.6.4)


# மரண அறிவித்தல்

## கந்தையா ஆறுமுகம்

(முன்னாள் வதிரி உப அஞ்சல் அதிபரும் சமாதான நீதிவானும்)



கதிர்காம கோயிலடி, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஸ்காபறோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் 20.02.2014 வியாழக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி (மணி-கனடா) அவர்களின் அன்புக் கணவரும், குமரகுருபரன் (கனடா), ஞானகுரு பரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், பொன்னம்மா, வடிவேலு, தெய்வானை ஆகியோரின் அன்புச்சகோதரரும், சறோஜினி(கனடா), கலாவதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வரதலட்சுமி(குஞ்சு), Dr.இராதாகிருஷ்ணன், கருணாநிதி, ஜெகதாம்பிகை(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், குலேந்திரன்(கண்ணன்) அவர்களின் பாசமிகு பெரியதந்தையும், துஷாந்தன் (கனடா), நிஷாந்தன்(கனடா) நிருஷன்(கனடா), ஷாஜினி (கனடா), அபிஷேக் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஸ்காபறோவில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு ஒன்ராறியோவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கதிர்காம கோயிலடி,
வதிரி, கரவெட்டி.
077 796 8311 (சி/12552)(3.6.4)

தகவல்:
ச.குலேந்திரன்
(கண்ணன்-பெறாமகன்)

# கைதடி முதியோர் இல்லத்தில் ஓய்வூதியருக்கு அனுமதியில்லை

தென்மராட்சி, பெப்.23

கைதடி முதியோர் இல்லத்தில் இணைய வந்த ஓய்வூதியர் ஒருவர் வேறு இல்லத்துக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் கைதடி முதியோர் இல்லத்தில் இடம் பெற்றது.

வரணி வடக்கைச் சேர்ந்த முருகேசு ஈஸ்வர பாதம் (வயது- 80) என்னும் ஓய்வுநிலை நில அளவைத் திணைக்கள ஊழியர் அந்தப் பகுதி கிராம அலுவலரின் பரிந்துரையுடன் முதி யோர் இல் லத்தில் இணைய வந்திருந்தார்.

அவரது மனைவி, மகன், சகோதரி ஆகியோர் இறந்ததால் சொத்துக்கள் உறவினர் களால் அபகரிக்கப்பட்டுத் துரத் தப்பட்டதாகக் கூறி இல்லத்தில் இணைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அரச முதியோர் இல்லத்தில் வருமானம் பெறுபவர்களை இணைப்பதில்லை என்று கூறிய இல்லப் பொறுப்பதிகாரி அவரை வேறு இல்லத்தில் இணைப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளனர். (வ-9)

# மெய்வன்மைப் போட்டிகள்

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குமாகாண சபை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி ஆகி யோர் கலந்துகொள் வர். (ந)

◆◆◆

வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள்நாளைதிங்கட் கிழமைபி.ப.2மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடை பெறும்.

பாடசாலை அதிபர் எஸ். விஜயகுமார் தலைமையில்நடைபெறும்போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (ந-9)

# பெருந்திருவிழா

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் (பெரிய பிள்ளையார்) கோயில் வருடாந்தப் பெருந்திரு விழா கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும்28 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 1 ஆம்திகதி சனிக்கிழமை காலை 9.45மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடை பெறும். (ந-135)


## கடைகள் வாடகைக்கு

யாழ். பலாலி பிரதான வீதியில் உரும்பிராய் மடத்தடிக்கும் - ஊரெழு அம்மன் ஆலயத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் சகல வசதிகளோடும் அமைந்த இரண்டு கடைகள் வாடகைக்கு உள்ளன. அதற்கான முற்பணம், மாத வாடகை என்பன நேரில் பேசிக்கொள்ள கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

வ.ரவி
உரும்பிராய். (46003)(45.6.3)
தொ.பே. 077 949 9823


## ஸ்கந்தவரோதயக் கல்லூரி விசேட பொதுக்கூட்டம்

எமது கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளுக்கான விசேட பொதுக்கூட்டம் நாளை (24.02.2014) திங்கள் பி.ப.6.30 மணியளவில் கல்லூரி கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நடைபெறும். சகலரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

அதிபர்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம். (சி/12542)(3.6.4)




## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

### சின்னத்தம்பி பாலசுந்தரன்



எளிமையாய் தான் வாழ்ந்து
வாழ்வில் ஏற்றம் பல கண்டு
அறிந்திராரோடும்
கதைபேசி
புன்னகைப் பூ விரித்து
ஆண்டுகள் 12 கடந்தனவோ!
அப்பா என நாமழைத்து
உங்கள் ஆத்மா
சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.


மலர்வு 1935.12.20 — உதிர்வு 2002.03.07

சங்கம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (29770)(12.3.6.)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சிவலிங்கம் பார்த்தீபன்



5ஆம் வட்டாரம், மண்கும்பான், வேலணையைப் பிறப்பிடமாகவும், அட்டகிரி வீதி, நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் பார்த்தீபன் நேற்று முன்தினம் (21.02.2014) வெள்ளிக்கிழமை இரவு அகால மரணமானார்.

அன்னார் சிவலிங்கம் - சதாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், பாலசுப்பிரமணியம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பா.சுகந்தினி (சுதா)வின் அன்புக் கணவரும், கோவிந்தன், ரஜீவன், ஆனந்தன் (கனடா), மகாலட்சுமி ஆகியோரின் சகோதரனும், சதீஸ்குமார், ராஜ்குமார், விஜயகுமார் ஆகியோரின் மைத்துனரும், விதுஷன், திபுஷன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2014) ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.00 மணிக்கு 5ஆம் வட்டாரம், மண்கும்பான், வேலணையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசன் - 077 042 4111
சஜந்தன் -077 824 8833 (45053)(12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்,

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆயுள் காப்பீட்டுக்
கூட்டுத்தாபன யாழ். கிளையின்
விற்பனை மேற்பார்வையாளர்
**இராசையா யோகராஜா**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி யோகமணி இராசையா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்,
**எல்.ஐ.சி, யாழ்ப்பாணம்.**

(46052)(2.8.4)

## பணிநிலை வேண்டுகை

**நேரச்சு இயந்திர இயக்குநர்**
**Offset Machine Minder**
**(KORD, KORS)**

▪ அனுபவமுள்ளவர்கள் மட்டும்

விண்ணப்பதாரர்கள்
2014 பெப்ரவரி 24, 25, 26 ஆம் திகதிகளில்
காலை 10.00 முதல் 4.00 மணிவரை
நேரில் வரவும்.

**பாரதி பதிப்பகம்**
இல.430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## Double Cab விற்பனைக்கு



Brand new-ISUZU
Options : A/C Setup
16" Alloy Wheel
இயந்திரம் மற்றும் body
100% நல்ல நிலையிலும்.
நல்ல பெயின்ட் வளத்துடனும் உள்ளது.
விற்பனைகோ அல்லது வாகனத்திற்கு வாகனம்
மாற்றீடாகவோ பெறலாம்.

**தொடர்பு: 0715 711 711**

## தேவை

சிறந்த சுய தொழில் வாய்ப்பு
நாம் உற்பத்தி செய்யும்
நாட்டுக் கோழி, வாத்து,
வான் கோழி குஞ்சுகளை
விற்பதற்காக விற்பனை
முகவர்களை அழைக்கின்றோம்.
முகாமையாளர்
லங்கா ஃபாம்ஸ்
0722 137 952
0717 377 343
0767 345 880

## வாகனம் விற்பனைக்கு

2011 Model "TATA NANO Car
லீசிங்குடன் உடனடி விற்பனைக்கு.
தொடர்பு:077 148 0409
(46016)(3.8.4)

## திருகோணமலை நகரில் 120 ஆண்டுகள் பழமையான Hotel/Restaurant விற்பனைக்கு

10 படுக்கையறை, 5 குளியலறை கொண்ட
**ஹோட்டல் / ரெஸ்டூரண்ட்**
20 பேர்ச்சில் விற்பனைக்கு உண்டு. மிகவும் அதிக இலாபத்தில் நடைபெறும் ஹோட்டல்.
தொடர்பு 0773 384 758

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சப்பல் வீதியில் 1¾ பரப்புக் காணி (பழையவீடு) விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் வேண்டாம்.
தொடர்பு: 077 344 1360/071 813 2756

## தேவை

தெல்லிப்பழையில் புதிதாக ஆரம்பிக்கப்படும் புடைவைக் கடை ஒன்றிற்கு நன்கு அனுபவமுள்ள ஆண், பெண் பணியாளர்கள் தேவை.
தொடர்பு:077 160 0507,
021 222 0757
(46017)(3.8.4)

## 18 வருடம் சிங்கப்பூரில் தொழில் புரிய ஓர் அரிய வாய்ப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும்
சிங்கப்பூர் அரசின் கட்டட நிர்மாண அதிகார சபை (BCA)
அங்கீகரித்துள்ள SEC (K) சான்றிதழை முறையான பயிற்சியின் பின்பு
பரீட்சையில் சித்திபெறும் அனைவருக்கும்




படிப்பதும் சுலபம்... சித்தியடைவதும் சுலபம்... சிங்கப்பூர் செல்வதும் சுலபம்...
இன்றே எம்மிடம் வாருங்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்

உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனை....
**ஜயலத்**
இல 69, ஜயலத் கட்டடம், புதிய களனிபாலம் வீதி, ஒருகொடவத்த, கொழும்பு 14.
(களனிதிஸ்ஸ பவர்ஹவுஸ் முன்பாக)

JAYALATH · JAYALATH · JAYALATH

☎ 011 7 503 503
admin@jceti.com
www.jceti.com


# நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவத்துக்கு சிறப்பான ஏற்பாடுகள்

வரலாற்றுச் சிறப்புமிக்க கிளி நொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங் கல் உற்சவத்தை மிகச் சிறப்பாக முன்னெடுப்பதற் குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புளியம்பொக்கணை நாகதம் பிரான் ஆலயத்தில் வருடாந் தப் பொங்கல் உற்சவம் எதிர் வரும் 10 ஆம் திகதி விளக்கு வைத்தல்பூசையுடன் ஆரம்பமாகி 17 ஆம் திகதி பங்குனி உத்தரத்தன்று பொங்கல் விழாவுடன் நிறைவுபெறும். இதில் விளக்கு வைத்தலைத் தொடர்ந்து பாரம்பரிய முறைப்படி இந்தப் பிரதேசத்திலே விளைகின்ற நெல் மற்றும் தானியங்களை மாட்டு வண்டியில் யாழ்ப்பாணம், தென்மராட்சி , புத்தூர் சந்திக்கு எடுத்துச் சென்று அங்கே அவற்றைக் கொடுத்து விட்டு பொங்கலுக்குரிய பண்டங்களை எடுத்து வருகின்ற மரபு பேணப்பட்டு வருகின்றது. அதே போன்று இந்தவருடமும்பண்டம் எடுத்து வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொங்கலுக்குரிய முன்னோ டிக் கலந்துரையாடல் நடை பெற்று அதற்கமைவாக உரிய பொறுப்புகள் உரிய நிர்வாகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளைவிட இந்தஆண்டு அதிகளவானபக்தர்கள் ஆலயத்துக்கு வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது.

(க-55)

# வீடு எரிந்து நாசம்

வவுனியா பூந்தோட்டம் அண்ணா நகர் ஜெபஸ்தான வீதி யில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

கணவன் வேலைக்குச் சென்ற பின்னர், வீட்டில் மனைவி பிள்ளைகளை முன்பள்ளிக்குஅழைத்துச்சென்ற வேளை சுவாமிப் படத்தில் வைக்கப்பட்டிருந்த விளக்கு அதிகமாக பற்றி எரிந்து தீ பரவி அந்த வீடு சாம்பலாகியது எனத் தெரிவிக்கப் பட்டது.

இந்தச் சம்பவத்தில் சுமார் ஒரு லட்சம்பெறுமதியான பொருள் கள் எரிந்து நாசமாகியுள்ளன. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(ஓ-402)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 07 . 1925
மறைவு 23 . 02 . 2013

அமரர் **சங்கரப்பிள்ளை தம்பையா**
(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்- புடைவை கைத்தொழில் திணைக்களம்)

அன்பின் திருவுருவமே அறிவின் பிறப்பிடமே
பாசத்தின் உறைவிடமே! - எம்மை
நீங்காத துயரினிலே நிறுத்திவிட்டு
மறைந்து சென்று ஆண்டொன்று ஆனபோதும்
அணையாத தீபமாக எம் நெஞ்சில் எப்போதும்
ஒளிர்ந்து நின்று எமக்கெல்லாம் வழிகாட்டுவீர்கள்

இல. 6/3, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(45055)(10.6)

# கண்ணீர் அஞ்சலி



சுதுமலை தெற்கு,
குண்டடியை
வசிப்பிடமாகவும்
தற்போது லண்டனில்
வசித்தவருமாகிய
திருமதி
**பத்மாஜனி விஸ்வலிங்கம்**
அவர்கள் 18.02.2014
இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி ச.இராசலிங்கம்**
**குடும்பத்தினர்.**
(45009) (5.6.3)

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளிப்பிள்ளை நல்லையா



தெடுத்தனை, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை நல்லையா கடந்த (19.02.2014) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை நல்லையாவின் (இராசு) அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வரூபன் மற்றும் செல்வரூபி (இந்தியா), காந்தரூபன் (பிரான்ஸ்), சுரேஸ் (பிரான்ஸ்), றமேஸ், தினேஸ் (பிரான்ஸ்), நிரோஜன் ஆகியோரின் அன்புத் தாயும், சிதம்பரன், கிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தயானந்தினி (பிரான்ஸ்), சிவரூபன் (பிரான்ஸ்), தவராணி (ஜேர்மனி), சுபாசினி ஆகியோரின் மாமியும், சின்னக்கிளி, சிவக்கொழுந்து ஆகியோரின் மைத்துனியும், அருணன், சனுஜா (பிரான்ஸ்), பவித்திரன், சாஜ்தரன், அருசன் (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2014) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யார்க்கரு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யார்க்கரு, கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (சி/12556)(2.6)

தகவல்:
குடும்பத்தினர்.



விருந்தினர்களுடன் பள்ளி நிர்வாகிகள்

# திறந்து வைக்கப்பட்டது முன்பள்ளிக் கட்டடம்

*வவுனியா உலுக்குளம் பகுதியில்*

வவுனியா, பெப்.23

வவுனியா உலுக்குளம் பகுதியில் ஜப்பானியர் ஒருவரின் நிதி உதவியுடன் முன்பள்ளிக் கட்டடம் ஒன்று நேற்றுமுன்தினம் காலை திறந்து வைக்கப் பட்டது.

ஜப்பான் நாட்டின் சமூக சேவையாளர் நெறியா சக்சாய் என்பவர் 70 லட்சம் ரூபா செலவில் இந்த முன்பள்ளியை அமைத்துக் கொடுத்துள்ளார்.

இந்த முன்பள்ளிக் கட்டடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளை சமாதானத்துக்கான சமயப் பேரவை மேற்கொண்டிருந்தது.

இந்த நிகழ்வில் ராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா, திருமதி துரைச்சாமி சிவநந்தினி, ஜப்பான் நாட்டின் நெறியா சக்சாய், பேராசிரியர் விமல ரட்ணதேரர், மௌலவி ஆதாம் பாவா, சோபித தேரர், தம்ஜத் சோதிதேரர், ரட்ணஜோதி திஸ்ஸதேரர், கிறிஸ்தோபர் சவரிமுத்து உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய மூன்று மதங்களையும் உள்ளடக்கிய முன்பள்ளியாக இது அமைகிறது. சுமார் 58 மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர். ஜப்பான் நாட்டில் இருந்து வந்தவர்களைக் கௌரவிக்கும் முகமாக உலுக்குளம் விகாரையில் சமய சம்பிரதாய நிகழ்வு இடம்பெற்றதுடன், உலுக்குளம் பாடசாலையொன்றில் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கையின் உணவுப் பண்டங்கள் பரிமாறப்பட்டன. (க-402)

# உயர்ந்தது வைக்கோலின் விலை திணறுகின்றனர் கால்நடை வளர்ப்போர்

வலி.மேற்கு, பெப்.23

என்றுமில்லாத அளவுக்கு வைக்கோலின் விலை அதிகரித்துச் செல்வதால் வலி.மேற்கில் உள்ள கால்நடை வளர்ப் பாளர்கள் கால்நடைகளைப் பராமரிப்பதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கடந்தபெரும்போகநெற்செய்கை மழை பொய்த்ததால் மோசமாகப் பாதிக்கப்பட்டது. இதனால் நெல்லை மட்டு மல்ல வைக்கோலையும் பெற முடியவில்லை.

இதனால் கடந்த ஆண்டுகளில் 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கட்டு வைக்கோல் இம்முறை ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 2 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் ஒரு உழ்வு இயந்திரத்தின் பெட்டியில்ஏற்றக்கூடிய வைக்கோலை 12 ஆயிரம் ரூபா கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் உள்ளதாக வலிகாமம் மேற்கு மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஏற்றுக் கூலியாக ஆயிரம் ரூபாவும், வாகனக் கூலி, வைக்கோலைப் போர் அமைத்து வைக்கும் கூலி ஆகியவற்றையும் செலுத்த வேண்டியுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.



கோப்புப்படம்

மேலும் பசு மாடுகளை வளர்ப்பவர்களிடமிருந்து ஒரு லீற்றர் பாலை 45 ரூபா வுக்குக் கொள்வனவு செய்யும் சங்கத்தினர் அதனை 60 ரூபாவுக்கு விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே வைக்கோல் உட்பட கால்நடைத் தீவனங்களின் விலை அதிகரித்துக் காணப்படுவதால் பாலின் கொள்வனவு விலையை அதிகரிக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

## மரண அறிவித்தல்

**திருமதி மார்கிரட் குமாரகுலசிங்கி (புஸ்பம்)**
[யாழ். ப.நோ.கூ. சங்க ஓய்வுபெற்ற ஊழியர் (Town shop Aunty)]



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்கிரட் குமாரகுலசிங்கி நேற்றுமுன்தினம் (21.02.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன்-திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான S.S.V.குமாரகுலசிங்கி-மேரி ஜெட்மன் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரகுலசிங்கியின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜோசப் செல்வராசா (யாழ். மாநகரசபை நீர் விநியோகப்பகுதி), ரோஸ்மலர் (ஆசிரியர்-மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற லவல், நிலானி (யாழ். ப.நோ.கூ.சங்கம் தலைமைச் செயலகம்), அன்ரன் ஜெசம்பியின் அன்புத் தாயும், புஸ்பராசா, Rev.Fr.ஆஞ்சலோ பொன்னையா ஆகியோரின் அன்பு மாமியும், டிலக்சனின் (மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (24.02.2014) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18/5, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
077 404 7949, 077 684 8493

(46056)
(10.14)

தகவல் : நிலானி, புஸ்பராசா
(மகள், மருமகன்)
அன்ரன் ஜெசெம்பி (பேறாமகன்)

# கச்சதீவில் வியாபார நிலையங்கள்; முன்கூட்டியே அனுமதி பெறுக

*நெடுந்தீவு பிரதேச சபை செயலர் அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், பெப்.23

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவத்தையொட்டி அங்கு வியா பாரநிலையங்களை நடத்தவுள்ளவர்கள் அதற்கான அனுமதியை முன்கூட்டியே நெடுந்தீவு பிரதேச சபையில் பெற்றுக் கொள்ள வேண்டும் என நெடுந்தீவு பிரதேச சபை செயலாளர் எஸ்.தம்பிராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட வர்களுக்கு அவர் சில அறிவுறுத்தல்களையும் விடுத்துள்ளார். அவை வருமாறு:

★ எதிர்வரும் பங்குனி மாதம் 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை உற்சவம் இடம்பெறும். உற்சவ கால வியாபார நிலையங்களை அமைக்க இருப்பவர்கள் பிரதேசசபையில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

★ கச்சதீவில் உங்களது வியாபார நிலையங்கள் அமைவதற்கான இடங்களை தெரிவு செய்து தரப் படும். உங்களுக் குரிய இடங்களை நீங்களே துப்புரவு செய்வதுடன் திரும்பி வரும் பொழுதும் அந்த இடங்களை மீண்டும்துப்புரவுசெய்து வர வேண்டும்.

★ வியாபார நிலையங்களை அமைக்கும் போது அதற்கான வியாபார உரிமத்தையும் பொது சுகாதார பரிசோதகரின் அனுமதியையும் பெற்றிருக்க வேண்டும். (ஒ-7)

## கார்ச்சாரதி தேவை

45 வயதுக்கு மேற்பட்ட
சாரதி தேவை நாள்
ஒன்றுக்கு 500/= வீதம்
வேதனம் வழங்கப்படும்
தொடர்பு: 078 5285342

## அக்ஷயா

டிப்ளோமா பயிற்சியகம்

வீட்டில் இருந்த படியே சம்பாதிக்க கை நிறைய உழைக்க வேண்டுமா

1) பேசியல் மேக்கப், கெயாஸ்டைல், தலைமுடி அயன்பண்ணுதல், சுருட்டுதல், ஐசிங் தையல் (அடிப்படையில் இருந்து OR விரும்பிய கட்டிங்)
மேற்படி பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன பயிற்சியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். கிழமை வகுப்பு ஆரம்பம் : 25.02.2014
சனி, ஞாயிறு வகுப்பு ஆரம்பம் : 01.03.2014
நேரம் : 1ஆம் பிரிவு காலை - 10.30, 2ஆம் பிரிவு மாலை - 3.30
* கறுப்பு பிறப்பிலே, கறுப்பு, மஞ்சள், வெள்ளை புள்ளிகள், நாட்பட்ட வடுக்கள் காயங்கள், கரும்புள்ளிகள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைத்நிங் கிறீம் உடல் எடை குறைக்கும் பால்மா குளிசை உடல் எடை கூட்டும் பால்மா குளிசை ஒட்டிய கன்னங்களை குண்டுக்கன்னங்களாக மாற்றும் குளிசை விற்பனைக்குண்டு.
077 2106155
(பேசியல் செய்ய 2500/=)
அக்ஷயா. 221, நாவலர் றோட்,
(பிறவுண் றோட் அருள் கொமினிக்கேஷன் அருகில்)

## மரண அறிவித்தல்



**திருமதி கமலாம்பிகை கைலாசநாதன்**

8 ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், பாடசாலை வீதி தாவடி தெற்கு கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை கைலாசநாதன் (20.02.2014) வியாழக்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

பாடசாலை வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

## Drive your Vehicle

நாங்கள் தருகிறோம் நீங்களே ஓட்டிச் செல்லுங்கள்

கார்கள்
கப்கள்
வான்கள்
பஸ்
லொறி



PEAKING
RENT A CAR
அழையுங்கள்
0777484820

## மரண அறிவித்தல்



**வீரசிங்கம் செல்வநாதன்**
(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

அல்வாய் கௌரி தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இரணைப்பாலை புதுக்குடியிருப்பை புகுந்த இடமாகவும் இல. 270, நாயன்மார் வீதியை வசிப்பிடமாக வும் கொண்ட வீரசிங்கம் செல்வநாதன் நேற்றுமுன்தினம் (21.02.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் (24.02. 2014) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்தில் ஆன்ம இளைப்பாற்றுக் கான திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : வி. ரங்கநாதன்
(சகோதரன்-ஆசிரியர்)0775062082

இல. 270, நாயன்மார் வீதி,நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம்.
செ. நிரோசன் (மகன்) 077 1275268

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக புதிதாக கட்டப்பட்டுக் கொண் டிருக்கும் மூன்று தொடர்கடைகள் வாடகைக்கு உள்ளன.

தொடர்புகளுக்கு:- 077 0835800

## கணினி கற்கை நெறிகளும் கணினி திருத்தமும்

உங்கள் கணினி பழுதடைந்து விட்டதா? உங்கள் இல்லங்களுக்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் கணினி பாட நெறிகளும் வீட்டுக்கே வந்து கற்றுக்கொடுக் கப்படும். (TALLY AND MS OFFICE)

தொடர்புகளுக்கு:- 077 5768959

## வின்மீன் காட்டிறஸ் வெளி உணவு சேவை

உங்கள் வீடுகளில் நடைபெறும் வைபவங்களுக்கு சிறந்த முறையில் உணவு வழங்கப்படும்.
பிறந்தநாள், கல்யாணம், பூப்புனித நீராட்டு விழா, எழுத்து (பதிவுத் திருமணம்) மற்றும் ஒன்று கூடல்
குறிப்பு : வேலை செய்பவர்களுக்கு மதிய உணவுப் பார்சல் உங்கள் அலுவலகங்களுக்கே கொண்டு வந்து தரப்படும்

இல. 158 நாயன்மார் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
அலுவலகம்: 021 2054078,
தொ.பே: 077 3266949,075 7378716

# உயர்தரப் பிரிவு மூடப்படக் கூடும்

## ஜெயபுரம் பாடசாலை அதிபர் அச்சம் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.23

ஜெயபுரம்பாடசாலையின் உயர் தரப்பிரிவு மூடப்பட்டுவிடும் என்ற அச்சம் உள்ளது. இவ்வாறு தெரிவித்தார் அந்தப் பாடசாலையின் அதிபர் நடேச மூர்த்தி.

நேற்று முன்தினம் பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

இந்தப் பாடசாலையில் வர்த்தகப் பிரிவுக்கு ஆசிரியர்கள் இல்லாததன் காரணத்தால் இங்குள்ள மாணவர்கள் அயற் பாடசாலைக்கு பெரும் சிரமங்களின் மத்தியில் சென்று கற்கின்றனர். அவர்கள் பயணிக்கின்ற போது பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை நாம் நேரடியாக அவதானிக்கின்றோம். அத்துடன் எமது பாடசாலையில் உயர்தர வகுப்புகள் மூடப்பட்டுவிடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியின் போது கடந்த காலங்களில் எமது பாடசாலைக்கு அனைத்து வளங்களும் கிடைத்தன. அதனடிப்படையில் இந்தப் பாடசாலை கட்டட வளங்களை நிறைவாகப் பெற்றிருக்கின்றது. ஆனால் இன்று ஆசிரியர் வளத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது நாம் தவிக்கின்றோம்.

எனது காலத்திலேயே வர்த்தகப் பிரிவு இந்தப் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் எனது காலத்திலேயே அது இடைநிறுத்தப்படும் நிலை உருவாகிவிடுமோ என நான் அஞ்சுகிறேன். எனவே இந்தப் பிரிவை மீள இயக்குவதற்காக நாம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். ஆயினும் எமது மாணவர்களை மீள எமது பாடசாலைக்கு கொண்டு வருவதற்கான வாய்ப்புக் கிட்டவில்லை எனக் குறிப்பிட்ட அவர் இந்தப் பாடசாலையில் இடைநிலை வகுப்புக்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் விஞ்ஞானம், தமிழ், இந்து சமயம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதாகவும் தெரிவித்தார். (க)

# மாயவனூர் கிராமத்துக்கு தண்ணீர் விநியோகம்

## வடமாகாண விவசாய அமைச்சர் உறுதிமொழி

கிளிநொச்சி, பெப்.23

கிளிநொச்சி மாயவனூர் புழுதியாற்றுக் குளத்திலிருந்து மாயவனூர் கிராமத்துக்கு தண்ணீர் விநியோகம் மேற்கொள்வது தொடர்பான திட்டத்தை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கடந்த 20 ஆம் திகதி நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் பொது மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.


வறட்சியான பகுதிகளில் ஒன்றாகக் காணப்படும் மாயவனூர் கிராமத்தில் 550 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இங்கு மக்களின் நன்மைகருதி புழுதியாற்றுக் குளத்திலிருந்து ஏற்று நீர்ப்பாசனத் திட்டம்ஒன்றை ஆரம்பிக்குமாறு அப்பகுதி மக்கள் வட மாகாண உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஊடாக அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமைய அந்தப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் மக்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந் தார்.

இதன் போது மாயவனூர் கிராம அபிவிருத்திச்சங்கம், கமக்கார அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஏற்று நீர்ப்பாசனப் புனரமைப்புத் திட்டத்துக்கு 20 மில்லியன் ரூபா தேவை என்றும் அடுத்த ஆண்டு வரவு -செலவு திட்டத்தின் மூலமாக இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் மக்களிடம் உறுதியளித்தார். (க-55)



மருத்துவர் சி.சிவதாஸ் கட்டடத்தைத் திறந்து வைக்கிறார்.

# விசேட கல்வி அலகுக்குரிய கட்டடம் திறந்து வைப்பு

## கிளிநொச்சி வலய அலுவலகத்தில்

கிளிநொச்சி, பெப்.23

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் விசேட கல்வி, அலகுக்குரிய புதிய கட்டடம் கடந்த 19 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா பொது மருத்துவமனையின் உளநல மருத்துவர் சி.சிவதாஸ் புதிய கட்டடத்தை திறந்து வைத்ததுடன், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கினார். கிளிநொச்சி கல்வி வலயத்தில் 600 வரையான விசேட தேவையுடைய மாணவர்கள் உள்ளதாக வலயக் கல்விப் பணிமனையின் விவரங்கள் தெரிவிக்கின்றன. விசேட தேவையுடைய மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதும், அந்த மாணவர்களின் உளநலனைப் பாதுகாத்து கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குமான ஒரு முயற்சியாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் விசேட அலகுக்குரிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

**கிளிநொச்சி கல்வி வலயத்தில் 600 வரையான விசேட தேவையுடைய மாணவர்கள் உள்ளதாக வலயக் கல்விப் பணிமனையின் விவ ரங்கள் தெரிவிக்கின்றன.**

# பூநகரி மகாவித்தியாலயத்தை உயர்தர பாடசாலையாக மாற்ற வேண்டும்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பூநகரி, பெப்.23

பூநகரி மகா வித்தியாலயத்தை உயர்தரப் பாடசாலையாக மாற்றுவதுடன் சூழவுள்ள ஏனைய பாடசாலைகளை ஆரம்பப் பாடசாலைகளாக இயக்குவதன் மூலமாக கல்வியில் பெரும் முன்னேற்றம் ஏற்படும். இவ்வாறு தெரி வித் தார் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.

பூநகரியிலுள்ள முக்கொம்பன் அ.த.க., செம்மங்குன்று அ.த.க, செல்லியாதீவு அ.த.க. ஆகிய பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரை யாற்றுகையில்;

பூநகரியிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது. பூநகரி மகாவித்தியாலயத்தை சூழவுள்ள கறுக்காய்த் தீவு மகா வித்தியாலயம், நல்லூர் மகா வித்தியாலயம், சிறி விக்னேஸ்வரா வித்தியாலயம், ஞானிமடம் பாடசாலை ஆகியவற்றை ஆரம்பப் பாட சாலைகளாக மாற்றிக் கொண்டு பூநகரி மகாவித்தி யாலயத்தை சகல வளங்களும் கொண்ட உயர் தரப் பாடசாலையாக இயங்கச் செய்வ தன் மூலமாக கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். தற்போது பூநகரி மகாவித்தியாலயத்திலும் உயர் வகுப்புக்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதேவேளை மிகக் குறைந்த மாணவர்களைக் கொண்ட நல்லூர் மகா வித்தியாலயம், கறுக்காய்தீவு மகா வித்தியாலயம், ஞானிமடம் பாடசாலை, சிறி விக்கினேஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

எனவே பூநகரி மகா வித்தியால யத்தை வளம் மிகுந்த தொரு பாடசாலையாக மாற்ற வேண்டும். இதேவேளை முக்கொம்பன் அ.த.க. பாடசாலையைத் தர முயர்த்தி வளம் மிகுந்த பாடசாலையாக மாற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# வேலிகள் இல்லாத தென்னங் காணிகள்

பூநகரி, கிராஞ்சிக்குளத்தில் உள்ள காணிகளுக்கு வேலிகள் அமைக்கப்படாததால் தென்னைச் செய்கையாளர்கள் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர். இவர்கள் காடுகளில் இருந்து தடிகளை வெட்டமுடி யாத நிலையில் உள்ளதால் தமது தென்னங் காணிகளைப் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறு வேலிகள் அமைக்கப்படாத நிலையில் 200 ஏக்கர் தென் னங்காணிகள் உள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வட மாகாண விவசாய அமைச்சு உதவவேண்டும் எனவும் கிராஞ்சி. மக்கள்வேண் டுகோள் விடுத்துள்ளனர். (க-18)


**வாடகைக்கு**

ஸ்ரான்லி வீதியில், கஸ்தூரியார் வீதிக்கு அருகில் வெற்றுக்காணி குத்தகைக்கு / வாடகைக்கு உண்டு. தொடர்பு: 077 9254768

**CAR விற்பனைக்கு**

Toyota Corsa, GJ-xxxx, 2001,Reg

தொடர்பு: 077 6621884


# மரண அறிவித்தல்



திருமதி

## பிள்ளையம்மா தம்பிராசா

தம்பாட்டி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி பிள்ளையம்மா தம்பி ராசா கடந்த (19.02.2014) கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பார்வதிப் பிள்ளையின் பெறாமகளும், காலஞ் சென்ற தம்பி ராசாவின் அன்பு மனைவி யும், காலஞ் சென்ற மயில் வாகனம்-கண்ணாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், தயானந்தி, பத்மாவதி, அழகம்மா, மின் னொளி, தவராசா, சிவராசா, யோகேஸ்வரி, மகராசா (பிரான்ஸ்), உத்தமி, சிவாகினி, புஸ்பலட்சுமி (பிரான் ஸ்), செந்தில்குமரன் (பிரான்ஸ்), சிவமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02. 2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரி யைக்காக தம்பாட்டி விராட்டி முனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.


**மலிவு விற்பனை**

நம்பமுடியாத விலைகளில் புதிய பழைய தளபாட வகைகள், யன்னல்கள், திராந்திகள், வீட்டு நிலைகள், மற்றும் மின்சார உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்



தொடர்புகளுக்கு : பிறைற் ஒக்ஷன் சென்ரர், இல 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3404 / 0773122062 / 0779154222


# மரண அறிவித்தல் நேரமாற்றம்

## திருமதி மீனாட்சி சங்கரன்



நவபுரம் கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி சங்கரன் கடந்த (20.02.2014) வியாழக்கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2014) திங்கட்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
நவபுரம், கைதடி. குடும்பத்தினர். 077 4737483


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜெனிவாவில் ஆதரவு

ஜெனிவாக் குழு

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. இதன்போது இலங்கைக்கு எதிராக, அமெரிக்க அரசினால் கடுமையான பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறித்த பிரேரணையில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள், அங்கத்துவ நாடுகளிடம் ஆதரவு திரட்டுதல் உள்ளிட்ட வேலைகளை முன்னெடுப்பதற்கு சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் சார்பில் ஜெனிவா அமர்வுக்குச் செல்பவர்கள், இந்தியா உள்ளிட்ட அங்கத்துவ நாடுகளுக்குச் சென்று ஆதரவு திரட்டுபவர்கள் யார் யார் என்பதை இந்தச் சிறப்புக் குழு தீர்மானிக்கும். இந்தக் குழுவினர் அடிக்கடி சந்திப்புக் களை நடத்தி தமது நடவடிக் கைகள் தொடர்பில் ஆராய்வார்கள்.

வடக்கு மாகாணசபைக் குழு

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பதாகவே இது தீர்மானிக்கப்பட்ட விடயம். வடக்கின் அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் தொடர்பில் முதலமைச்சர் உள்ளடங்கலாக குழுவொன்று நியமிப்பதென்றும் அந்தக் குழுவினர் மாதமொரு முறை கலந்துரையாடல்கள் நடத்துவர் என்றும் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் அந்தக் குழு அமைப்பது இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்து வருகின்றது. உடனடியாக அந்தக் குழுவை அமைத்து, வடக்கு மாகாண சபையைக் கொண்டு நடத்துவதில் ஏற்படுகின்ற முட்டுக்கட்டைகளை நீக்குவது தொடர்பில் ஆராயப்படும் என்றும் அந்தக் குழு விரைவில் அமைப்பதென்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மனோவுக்கு ஆதரவு

ஜனநாயக மக்கள் முன்னணிக்கு மேல்மாகாண சபைத் தேர்தலில் ஆதரவு வழங்குவதென்றும் நேற்றுமுன்தினம் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வடக்குகிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனநாயக மக்கள் முன்னணி ஆதரவு வழங்கியிருந்தது என்றும் அத்துடன் தலைநகரில் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து வருவதுடன் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் முற்போக்குடன் செயற்பட்டு வருவதால் அவர்களை ஆதரிப்பதென்று முடிவெடுக்கப்பட்டதாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார். (த-5)

### தமிழர்

ஸிம் மகா வித்தியாலயத்தில் மஹிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடம் திறந்து வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விலேயே குண்டு வெடிக்கவுள்ளதாகப் புத்தளம் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் அத்தியட்சகருக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற இனப் பிரச்சினை, போர் முடிவின் போது தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டதாகவும், அதற்குப் பதில் கொடுக்கும் வகையில் இந்தக் குண்டை வெடிக்க வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், தமிழ் மாணவன் ஒருவனைப் பழிவாங்குவதற்காகவே முஸ்லிம் மாணவர்கள் மூன்று பேர் இணைந்து இந்தப் போலிக் கடிதத்தை எழுதியுள்ளனர்.

மதுரங்குளி, கடயாமட்ட முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 13 இல் கல்வி பயிலும் மாணவர்களே இந்தச் சம்பவத்தின் பின்னணியில் செயற்பட்டுள்ளனர்.

தற்போது இந்தப் போலிக் கடிதம் எழுதியவர்கள் என்று நம்பப்படும் முஸ்லிம் மாணவர்கள் மூன்று பேரும் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதால் மேலதிக விசாரணைகளை உடனடியாக முன்னெடுக்க முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் குறித்த கடிதம் போலியானது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (த-5)

### சிங்களக்

காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்குக் கடந்த 19 ஆம் திகதி வருகை தந்த அமெரிக்க தூதரக அதிகாரி மைக் கல் ஏ. ஏர்வின் மற்றும் அவரது மொழிபெயர்ப்பாளர் ஆகியோர் நாவற்குழியிலுள்ள சிங்களக் குடியேற்றத்துக்குச் சென்றுள்ளனர். அங்கு தங்கியுள்ள 30 சிங்களக் குடும்பங்களிடம் அவர்கள் கலந்துரையாடல்கள் நடத்தியுள்ளனர்.

அவர்கள் எந்தச் சூழ்நிலையில் இடம்பெயர்ந்தார்கள், இப்போது யாருடைய உதவியில் இங்கு தங்கியிருக்கின்றார்கள் என்பது தொடர்பான விவரங்களை அமெரிக்க அதிகாரிகள் திரட்டியுள்ளனர்.

இதன் பின்னர் மறுநாள் முல்லைத்தீவுக்குச் சென்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுடன் குறித்த அதிகாரிகள் சந்திப்பு நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பில் நில அபகரிப்புத் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன் வடக்குகிழக்கு மாகாணங்களில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களையும் அவர்கள் ஆராய்ந்துள்ளனர் என்று குறித்த ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்கத் தூதரகம் இந்தப் பயணம் தொடர்பில், இது தமது வழமையான நடவடிக்கை என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை அரச தரப்பு தெரிவிக்கையில், பிரிட்டன் தமிழர் பேரவையால் வடக்கு கிழக்கின் காணி அபகரிப்பு தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றதன் பின்னணியிலேயே இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா கூட்டு நட வடிக்கைகள் இடம்பெற்றுள்ளமையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எதிர்வரும் ஜெனிவா அமர்வில் தரவுகளைச் சமர்ப்பிப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கின் இனப்பரம்பலை மாற்றியமைத்தது விடுதலைப் புலிகள்தான் என்று குற்றஞ்சாட்டியுள்ள பாதுகாப்பு அமைச்சு, வடக்கிலிருந்த 20 ஆயிரம் சிங்களவர்கள், ஒரு லட்சம் முஸ்லிம்களை புலிகள் ஒரு மணி நேரத்தில் வெளியேற்றினர் என்றும் இதனூடாக இனப்பரம்பல் மாற்றியமைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. (த-5)

### தினப்புயல்

தின் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பத்திரிகை அலுவலகத்தின் பணிகளை முடித்து ஊழியர்கள் வெளியேறிய நிலையில், திடீரென அலுவலகத்தின் முன்பக்கத்தின் மீது இனந்தெரியாதாரோல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

உடனடியாகச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். பெற்றோல் குண்டே வீசப்பட்டிருக்கவேண்டும் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இருப்பினும் இதுவரை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. (த-5)

### வடமாகாண

சர்க்.வி.விக்னேஸ்வரன் தலைமையில் ஒவ்வொரு மாதமும் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறுவதுடன், மாகாணசபை அமர்வுக்கு முன்னதாகவும், விசேட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும் அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படுகிறது.

இதில் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் பங்குகொள்கின்றனர். இந்தக் கூட்டத்தில் எட்டப்படுகின்ற முடிவுகள் தொடர்பில் இதுவரையில் பகிரங்கமாக அறிவிக்கப்படுவதில்லை.

இந்த நிலையில், வடக்கு மாகாண சபையின் ஆறாவது அமர்வு கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றபோது, ஆளுங்கட்சி உறுப்பினரான அசிராய்வா, அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் எமக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை. உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமர்வில் பகிரங்கமாகவே கோரிக்கை முன்வைத்தார். (த-5)

### கெஹலியவுக்கு

னம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஆறாவது அமர்வில், பலாலி-திருகோணமலையிலிருந்து இந்தியாவுக்கு விமான சேவை ஆரம்பிப்பது தொடர்பிலும், தலைமன்னார் - இராமேஸ்வரம் கடற்போக்குவரத் துச் சேவை ஆரம்பிப்பது தொடர்பிலும் இந்திய - இலங்கை அரசுகளைக் கோருவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்தை ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிரியங்க ஜயரட்ண ஆகிய இருவரும் விமர்சித்திருந்தனர். 13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி விமான, கப்பல் போக்குவரத்துத் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அதிகாரங்கள் மாகாண சபைக்கு இல்லை என்றும், நாட்டில் ஏற்கனவே இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் இயங்கி வருகின்ற நிலையில் இன்னொரு சர்வதேச விமானநிலையம் அமைக்கப்படத் தேவையில்லை என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இது தொடர்பில் ஊடகத்துறை அமைச்சருக்குப் பதிலளித்து அவைத் தலைவர் அனுப்பியுள்ள கடிதத்தில், எந்தவொரு பிரஜைக்கும் அரசிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு உரிமை இருக்கின்றது என்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விமான நிலையம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதியையும் அனுப்பி வைத்துள்ளார்.

தீர்மானம் தொடர்பிலும், அதில் என்ன வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறியாமலும் தெரிவிக்கும் எதிர்மறையான கருத்துக்கள், நல்லிணக்க முயற்சிகளையே சீர்குலைக்கும் என்று அவைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (த-5-408)

### ஜெனிவாவில்

தேசத்தின் மகுடம் கண்காட்சியைத் திறந்து வைப்பதற்காக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை குளியாப்பிட்டிய நகருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ சென்றிருந்தார். இதன் போது பூண்டுலோயா நகரில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக் கப்பட்ட பகுதிகளையும் அவர் பார்வையிட்டிருந்தார்.

இதன் பின்னர் நேற்று முன்தினம் இரவு கொட்டகலைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ மற்றும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் சென்றுள்ளனர். அங்கு இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்து அழைத்து வரப்பட்ட நம்பூதிமார் பெரும் யாகம் நடத்தியுள்ளனர்.

இலங்கை அரசுக்கு எதிராக அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணையை வெற்றி கொள்வதற்காகவே இந்த யாகம் நடத்தப்பட்டுள்ளது. இந்த யாகம் இடம்பெற்ற பகுதியினுள் அரச உயர் மட்டத்துக்கு நெருக்கமானவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### புதைகுழி

மைகள் சபையின் கூட்டத் தொடருக்கு எழுத்து மூலமான கோரிக்கையையும் அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை இதன் சகோதர அமைப்பான ஆசிய சட்டவளங்கள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் இரண்டு பெரிய மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மாத்தளைப் புதைகுழியிலிருந்து 154 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. மன்னார் புதைகுழியிலிருந்து இதுவரை 79 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் ஐ.நாவின் வலுக்கட்டாயமாகக் காணாமற்போனோர் தொடர்பிலான குழு கவனம் செலுத்த வேண்டும்.

மனிதபுதைகுழிகள் தோண்டப்படுகின்றபோது நவீன செயல்முறைகள் பின்பற்றப்பட வேண்டும். அத்துடன் புதைகுழியிலுள்ள தடயப் பொருள்கள் சிதைவடையாமல் அவை மீட்கப்படவேண்டும். ஆனால் இவை எதுவுமே பின்பற்றப் படவில்லை.

மேலும் மாத்தளைப் புதைகுழி ஜே.வி.பி கிளர்ச்சியுடன் தொடர்புபட்டதாக இருக்கலாம் என்று அதற்குரிய அடையாளப்படுத்தல்கள் நடந்துள்ளன. ஆனால் மன்னார் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகளை அடையாளப்படுத்துவதற்குரிய எந்தவொரு நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

ஐ.நாவின் தலையீடு இன்றி மேற்கொள்ளப்படுமாக இருந்தால், இந்த விசாரணைகள் சரியாக இருக்கும் என்று சொல்ல முடியாது என்று தெரிவித்துள்ள ஆசிய சட்ட வளங்கள் அமைப்பு, ஐ.நாவின் வலுக் கட்டாயமாக காணாமற்போனோர் தொடர்பிலான பணிக் குழு இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. (த-5)

### 79

குழுவினர் சமூகமளிக்க வில்லை. இதனால் கண்டுபிடிக்கப்பட்ட மனிதஎலும்புக்கூடுகள் மீட்கப்படவில்லை.

மன்னார் நீதிவான் முன்னிலையில் பொலிஸாரும், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து தோண்டும் பணியில் ஈடுபட்டனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை 30 ஆவது தடவையாக புதைகுழியைத்தோண்டும்பணிமுன்னெடுக்கப்படவுள்ளது. (த-56)

### வேலையற்ற

சேவை அலுவலர் பிரிவுக்கும் சென்று மேற்படி விவரங்களைத் திரட்டி வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

20 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகளின் விவரங்கள் திரட்டப்பட்டு அதிலிருந்து அவர்களில் வேலையற்றிருப்பவர்களின் விபரங்கள் வேறாகவும் பிரிக்கப்பட்டு வருகின்றன.

என்ன நோக்கத்துக்காக இராணுவத்தினர் மேற்படி விவரங்களைத் திரட்டுகின்றனர் என்பது தமக்குத் தெரியாதென்று அரச உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை இராணுவத்துக்கு அல்லது சிவில் பாதுகாப்புப் படைக்குப் பெண்களை திரட்டும் நடவடிக்கைகள் பரவலாக இடம்பெற்று வருகின்ற நிலையிலேயே இராணுவத்தினர் மேற்படி தகவல்களைத் திரட்டும் நடவடிக் கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (த-5)

### சாந்தன்

ஆதரவளித்துள்ளனனர்.

தண்டனை விதிக்கப்பட்ட மூவரையும் விடுவிப்பது என்று தமிழக அரசு விடுத்த அறிவிப்பை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அல்லது அது பற்றி கருத்து எதுவும் சொல்ல விரும்பவில்லையா? என்ற கேள்விகள் கேட்கப்பட்டன.

நேற்று வரையில் 76 வீதமானவர்கள் ஆதரித்தும் 23 சதவீதமானவர்கள் எதிர்த்தும் வாக்களித்துள்ளனர். மிகுதி ஒரு வீதத்தினர் கருத்துச் சொல்ல விரும்பவில்லை.

மூவரின் விடுதலையைத் தாமதப்படுத்தும் விதத்தில் இந்திய மத்திய காங்கிரஸ் அரசு உச்ச நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை வாங்கியுள்ள நிலையில் இவர்களை விடுவிக்க வேண்டும் என்ற வாதம் இந்தியா முழுவதும் எழுந்திருப்பதை இந்த ஆய்வு காட்டுகின்றது. (உ)

### மோதல்

மக்ரே தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் நடந்தேறிய மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சனல் - 4 தொலைக்காட்சியினால் மோதல் தவிர்ப்பு வலயம் என்ற ஆவணப்படம் தயாரித்து வெளியிடப்பட்டது. இந்த ஆவணப் படத்தை கெலும் மக்ரே இயக்கியிருந்தார்.

குறித்த ஆவணப் படத்தை இந்தியாவில் காண்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஹிந்தி மற்றும் தமிழ் உபதலைப்புக்களுடன் அவற்றைக் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. தமிழகம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் இதனை ஒளிபரப்புவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த ஆவணப்படத்துக்கு, இந்திய மத்திய அரசின் திரைப்படச் சான்றிதழ் சபை அனுமதி மறுத்துள்ளது. இலங்கையுடனான நல்லுறவைக் கருத்தில் கொண்டே மேற்படி அனுமதியை மறுத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் குறித்த ஆவணப் படத்தை இன்று முதல் இணையத்தினூடாக இலவசமாக ஒளி பரப்புச் செய்வதற்குக் கெலும் மக்ரே நடவடிக்கை மேற் கொண்டுள்ளார். http://nofirezone.org/watch என்ற இணையத்தளத்தினூடாக ஆவணப்படத்தை இலங்கை, நேபாளம், மலேஷியா ஆகிய நாடுகளில் மாத்திரம் பார்வையிடமுடியும். (த-5)

(பிந்திய செய்தி 4 ஆம் பக்கத்தில்)

### தமிழக

லையில் சர்ச்சைக்குரிய தீவாக இருப்பது கச்சதீவு. அங்குள்ள புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இதற்குத் தமிழகத்திலிருந்து 4 ஆயிரம் பேர் வரை வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த உற்சவத்திற்குரிய ஏற்பாடுகள் யாழ். மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் ஒவ்வொரு ஆண்டு உற்சவத்துக்கும் தமிழ் நாட்டு ஊடகவியலாளர்கள் வருவது வழமை. ஆனால் இந்த ஆண்டு தமிழ்நாட்டு ஊடகவியலாளர்கள் கச்சதீவு உற்சவத்துக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்நாட்டு ஊடகங்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட செயலர் (மாவட்ட ஆட்சியர்) மற்றும் கியூ பிரிவுப் பொலிஸாரினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

### ஜெனிவா

காணலாம். சர்வதேச மன்னிப்புச் சபையின் சார்பில், முன்னெடுக்கப்படும் இந்த வாய்ப்பு உங்களில் ஒருவருக்கு கிடைக்கும்.

இது தொடர்பான விவரங்களை அறிந்துகொள்ள 009144 66044770 என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைப்புக் கொடுக்குமாறு மன்னிப்புச் சபையின் இந்தியக் கிளை கேட்டுக்கொண்டுள்ளது. (த-5)

# கல்வளை விநாயகர், குறிஞ்சிக்குமரன் அரையிறுதியில் மோதுவதற்குத் தகுதி

வலி.வடக்கு, பெப். 23

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட போட்டிகளில் கடந்த வியாழக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம், குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றியீட்டி அரையிறுதி ஆட்டத்தில் மோதத் தகுதி பெற்றுள்ளன.

பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் இருந்த வேளை முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் யாரும் எதிர்பாராத விதமாக அபாரமாக விளையாடி 4 கோல்களைப் பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை வென்று அரையிறுதி ஆட்டத்தில் விளை யாடத் தகுதி பெற்றது

மற்றுமொரு ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும கோல் பெறக் கடும் முயற்சி மேற்கொண்டன. மகாத்மா விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் இருந்த வேளை முதல் பாதி ஆட்டம் முடிவடைந் தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த கடும் பிரயத்தனத்தின் காரணமாகக் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தமையால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்தில் மோதத் தகுதி பெற்றது. (த-86)

## வென்றது ஹென்றிஸ்

வலி.வடக்கு, பெப். 23

தலைவர் 2013 வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில்யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் தெல்லிப்பளை யூனியன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் இருந்த வேளை முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் போட்டது. இதன் பின்னர் மீண்டும் இரண்டு கோல்களை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் போட்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் யூனியன் விளையாட்டுக் கழகத்தை வென்று அரையிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)



நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டி அண்மையில் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.
இதன்போது வீரர்கள் குதிரைச் சவாரி மூலம் ஒலிம்பிக் தீபத்தை மைதானத்துக்குள் கொண்டு செல்லும் காட்சி. (த-23)

## குழப்பத்தில் முடிந்த ஆட்டம்

வலி.வடக்கு, பெப். 23

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்று மத்தியஸ்தரின் தவறான முடிவினால் ஒரு குழப்பமான நிலைமைக்கு சென்றது.

முதல் பாதி ஆட்டம் முடிவடைய இரண்டு நிமிடங்கள் இருக்கும் நிலையில் கோல் காப்பாளரின் எல்லைக்குள் கையால் பந்து தாக்கப்பட்டமையால் தண்டனை உதை வழங்கிய வேளை பந்தை உதைத்த அணியின் வீரர் ஒருவர் கோல் பரப்பு எல்லைக்குள் நுழைந்தமையால் பந்து கோலாக மாறிய போதிலும் அது வெளியே சென்ற பந்தெனக் கூறி முடிவெடுக்கப்பட்டது.

ஆனாலும் உடனடியாக மத்தியஸ்தர் தனது முடிவை மாற்றித் திரும்ப உதைக்கும்படி பணித்த வேளை அதனை இரு அணிகளும் ஏற்க மறுத்ததால் மத்தியஸ்தரினால் போட்டி ஒத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து நேற்று வெள்ளிக் கிழமை இரவு கூடிய ஒழுக்காற்றுக்குழு போட்டியை உதைபந்தாட்ட வீதிகளுக்கு அமைவாகத் தண்டனை உதையை மீள உதைத்து மிகுதி நேரத்தை விளையாட வேண்டும் என்ற முடிவை இரு அணிகளுக்கும் அறிவித்துள்ளது. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்



வலி.வடக்கு, பெப். 23

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்டச சம் மேளனத்தின் ஆதரவுடன்வலிகாமம்உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பிற் பகல் 3.45 மணிக்கு அரை யிறுதி போட்டி நடைபெறவுள்ளது. (த-86)

★★★

வலி.வடக்கு, பெப். 23

நெடுந்தீவு பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையேயான ஆண்கள் பெண்களுக்கான கபடிப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3.00 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்டமும் நடைபெறவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் தெரிவித்துள்ளார். (த-86)

★★★

யாழ்ப்பாணம், பெப்.23

உடுவில் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை உடுவில் விளையாட்டுக்கழக, சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானங்களில் இடம் பெறவுள்ளன. (த-23)

★★★

யாழ்ப்பாணம், பெப்.23

கரவெட்டி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான கரம்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (த-23)

★★★

யாழ்ப்பாணம், பெப்.23

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை பிற்பகல் 1.30 மணி முதல் ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலையில் ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டி இடம்பெறவுள்ளது. (த-23)

★★★

யாழ்ப்பாணம்,பெப். 23

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் அங்கத்துவ லீக் அணிகளுக்கு இடையில் நடத்தும் சீனியர் லீக் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது.

இதேவேளை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து குருநாகல் உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (த-23)

## மானிப்பாய் இந்துவின் குகப்பிரசாந் சதம்; மகாஜனாவுடனான மோதல் சமநிலையில்

வலி.வடக்கு, பெப் 23

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணியினருக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வீரன் குகப்பிரசாந் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திச் சதம் பெற்ற போதும் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரிக்கும் இடையிலான போட்டி அண்மையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் இந்துக் க்ல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.இதனடிப்படையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி ஆட்டநேர முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அணி சார்பாக தனது சிறப்பாட்டத்தினை வெளிப்படுத்திய குகப்பிரசாந் சதத்தினைப் பூர்த்தி செய்தார்.138 பந்துகளுக்கு முகம் கொடுத்த இவர் 4 ஆறுகள், 21 நான்குகள் அடங்கலாக 148 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். கிரிசாந் 58 பந்துகளுக்கு முகம் கொடுத்து 60 ஓட்டங்களையும்,சஜீவன் 81 பந்துகளுக்கு முகம் கொடுத்து 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மகாஜனாக்கல்லூரி சார்பாக பந்துவீச்சில் சிறப்பாகச் செயல்பட்ட ஜனாத்தன் ஹற்றிக் சாதனை நிலைநாட்டியதுடன் 52 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 இலக்குகளையும் வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக்கல்லூரி அணியினர் 190 ஓட்டங் களுக்கு சகல இலக்குகளையும் இழந்தனர். கல்லூரி சார்பாக ஜனாத்தன் 6 நான்குகள், 1 ஆறு அடங்கலாக 66 ஓட்டங்களையும், டினோசன் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்

மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பாக பந்து வீச்சில் டிலக்ஸன் 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும்,பிரதீபன் 61 ஓட்டத்தைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி 8 இலக்குகள் இழப்புக்கு 149 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட போது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. கல்லூரி சார்பாக சஜிந் 55 பந்துகளுக்கு முகங் கொடுத்து 2 ஆறுகள் 7 நான்குகள் அடங்கலாக 58 ஓட்டங்களையும் குகப்பிரசாந் 31 பந்துகளுக்கு முகங் கொடுத்து 5 நான்குகள் அடங்கலாக 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மகாஜனாக்கல்லூரி சார்பாகப் பந்து வீச்சில் ஜனாத்தன் 4 இலக்குகளையும் மயூரன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அணியினர் 5 இலக்குகள் இழப்புக்கு 162 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.கல்லூரி சார்பாக டிலோஜன் 61 ஓட்டங்களையும்,நிசாந் 42 ஓட்டங்களையும்,பவன் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.



குகப்பிரசாந்

மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பாக ரிலக்ஸன், குகப்பிரசாந்.டிலக்ஸன் ஆகியோர் தலா ஒரு இலக்கை வீழ்த்தினர்.ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி நிறைவுக்கு வந்தது. (த-86)

## பரிசளிப்பு

மணிவதனன், ஜெயசித்திரா சகோதரர்களின்19ஆவதுஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி றோமன்குக் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் பழையமாணவனும்,முன்னாள் துடுப்பாட்ட பயிற்றுநருமான வி.கே.சண்முகலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## தாச்சிப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனு மதியுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு பண்டத்தரிப்பு அறவொளி வி.க. எதிர் ஆலடி சிந்து வி.க. மோதவுள்ளது. (த-288)

# ஷகிப் அல் ஹசனுக்கு தடை


ஷகிப்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் ஷகிப் அல் ஹசனுக்கு மூன்று ஒரு நாள் போட்டிகளில் விளையாட அந்த நாட்டு கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.
இலங்கைக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் ஷகிப் அல் ஹசன் ஆட்டம் இழந்த காட்சியை திரும்ப திரும்பப் போட்டுப்பார்த்தபோது ஆத்திரத்தில் கமராக் காரர்களை நோக்கி அவர் மோசமான சைகை காட்டியதால் இத்தகைய ஒழுங்கு நடவடிக்கைக்குள்ளாகி இருக்கிறார்.
தடையுடன் ரூபா 6 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.
இதன்படி அவர் இலங்கைக்கு எதிரான கடைசி ஒரு நாள் போட்டியிலும், ஆசியக் கிரிக்கெட்டின் முதல் இரு ஆட்டங்களிலும் விளையாட முடியாது. (து)


# குசல் பெரேரா சதம் வென்றது இலங்கை


குசல் பெரேரா

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது. நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 240 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது. குசல் பெரேரா 106 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார்.
மூன்று ஒருநாள் போட்டிகளை கொண்ட இந்த தொடரை இலங்கை அணி 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. (து)

# சிறந்த விளையாட்டு வீரர் விருதுக்கு உசைன் போல்ட், ரொனால்டோ போட்டி

உலகின் சிறந்த விளையாட்டு வீரர் விருதுக்கான போட்டியில் ஜமெய்க்காவைச் சேர்ந்த தடகள வீரர் உசைன் போல்ட், உதைபந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ரென்னிஸ் வீரர் ரபேல் நடால், கார்ப்பந்தய வீரர் செபாஸ்ரியன் வெட்டல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.
ஆண்டுதோறும் முந்தைய ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு லாரியஸ் உலக விளையாட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த அணி உள்ளிட்ட ஆறு பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும். சிறந்த வீரருக்கான விருதுக்கான போட்டியில் உதைபந்தாட்ட வீரர் மெஸ்சி, பிரிட்டனைச் சேர்ந்த மர தன் ஓட்டப் பந்தய வீரர் மோபரா, சீனாவைச் சேர்ந்த நீச்சல் வீரா சுன் யங், கூடைப் பந்து வீரர் லெப்ரான் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.
மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் மார்ச் 16ஆம் திகதி நடைபெறும் விழாவில் விருது பெறும் வீராகள் அறிவிக்கப்படுவர். அதற்கு முன் இந்த மாத இறுதியில் விருதுக்குப் பரிந்துரைக்கப்படுபவர்கள் பட்டியலை தேர்வுக் குழு வெளியிடும். அந்தத் தேர்வுக்குழுவில் விளையாட்டுப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், விளையாட்டுக் கட்டுரை எழுதுபவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஒளிபரப்பாளர்கள் இடம்பெற்றிருப்பர். (து)



ரொனால்டோ-உசைன் போல்ட்

# வெய்ன் ரூனியின் விலை 29 மில்லியன் பவுண்ட்ஸ்


ரூனி

மன்செஸ்டர் யுனைட்டட் உதைபந்துக் கழகம், அந்த அணியின் முன்னிலை வீரர் வெய்ன் ரூனியை அணியிலேயே தக்க வைத்துக் கொள்வதற்காக பெரிய தொகையைச் செலவிடத் தீர்மானித்திருக்கிறது. எனினும் 28 வயதான அவருக்காக இந்த அளவு செலவிட வேண்டுமா என்று சில தரப்பில் இருந்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.
இந்த ஆண்டில் மன்செஸ்டர் யுனைட்டட் உதைபந்து கழகம் 420 மில்லியன் பவுண்ஸ்களை வருமானமாகப் பெற்றது.
இந்த நிலையில் ரூனிக்காக இந்த வருடம் 29 மில்லியன் பவுண்ஸ்களை செலவிட தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# புதிய அனுபவம்


கிரிஸ்டன்

பிரிமியர் கிரிக்கெட் தொடரில் டில்லி அணிக்குப் பயிற்சியாளராக செயல்படுவது புதிய அனுபவம் என இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் கிறிஸ்டன் தெரிவித்தார்.
ஏழாவது பிரிமியர் தொடர் ஏப்ரல் 9 இல் தொடங்குகிறது. இதில் சென்னை, டில்லி, ராஜஸ்தான் உள்ளிட்ட 8 அணிகள் களமிறங்குகின்றன. கடந்த தொடரில் சொதப்பிய டில்லி அணி, இம்முறை முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.
இந்த அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவின் கிறிஸ்டன் நியமிக்கப்பட்டார்.
சமீபத்தில் நடந்த பிரிமியர் கிரிக்கெட் ஏலம் குறித்து கிறிஸ்டன் கூறியதாவது:-
எனக்கு இது முதல் பிரிமியர் தொடர். இதற்கான வீரர்கள் ஏலத்தில் பங்கேற்றமை முற்றிலும் வித்தியாசமான அனுபவமாக இருந்தது. சரியான வீரர்களைத் தேர்வு செய்து துடுப்பாட்ட வீரர், சகலதுறை வீரர், பந்து வீச்சாளர் என நிலையான அணியை உருவாக்குவதே எங்களின் முதல் இலக்கு.
இந்தத்தொடர் இந்தியா, தென்னாபிரிக்கவில் நடக்க இருப்பதால், பந்து வீச்சாளர்களைத் தேர்வு செய்வதில் அதிக கவனம் செலுத்தினோம். தென்னாபிரிக்க ஆடுகளங்களில் வேகப்பந்து வீச்சாளர்கள் கைகொடுப்பர்.
கெவின் பீற்றர்சன், ரோஸ் ரெய்லர் உள்ளிட்ட சர்வதேச அனுபவம் பெற்ற வீரர்களும் அணியில் இடம் பெற்றுள்ளது தனிப் பலம். இந்தியாவின் தினேஷ் கார்த்திக், போட்டியின் தன்மைக்கு ஏற்ப திறமையை வெளிப்படுத்துவார். இவர் இலக்குக் காப்பாளர் பொறுப்பையும் கவனிப்பதால் ஏலத்தில் கடும் போட்டி இருந்தது. இவ்வாறு கிறிஸ்டன் கூறினார். (து)

# பண மழையில் நனைந்த இந்தியக் கிரிக்கெட் சபை

சச்சினுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான தொடரின் மூலம் பண மழையில் நனைந்துள்ளது இந்தியக் கிரிக்கெட் சபை. இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், சர்வதேச கிரிக்கெட்டில் சதத்தில் சதம் அடித்தது உட்பட பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர். இவர் தனது 200ஆவது டெஸ்ட் போட்டியைச் சொந்த மண்ணில் விளையாடி, ஓய்வு பெற வேண்டும் என்பதற்காக மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் ஒரு தொடரை(2 டெஸ்ட்+3 ஒருநாள் போட்டி) இந்தியக் கிரிக்கெட் சபை அவசரம் அவசரமாகக் கடந்த ஆண்டு ஏற்பாடு செய்தது. இதன் மூலம் மட்டும் 180.60 கோடி இந்திய ரூபா வருமானம் இந்தியக் கிரிக்கெட் சபைக்குக் கிடைத்தமை தற்போது தெரியவந்துள்ளது.
ஒளிபரப்பு உரிமம்(ரூபா 32.2 கோடி, ஒரு போட்டிக்கு), தொடர் அனுசரணை உரிமம்(ரூபா 2 கோடி), ஜெர்சி உரிமம் (ரூபா 1.92 கோடி) உள்ளிட்டவை இதில் அடங்கும்.
இது குறித்து இந்தியக் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள், டெஸ்ட் போட்டிகள் அனைத்தும் இரு நாட்டு கிரிக்கெட் சபைகளின் பரஸ்பர ஒப்பந்த அடிப்படையில் தான் நடத்தப்பட்டன.
அப்போதைய ஐசிசியின் அட்டவணைப்படி, ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒரு 20/20 , 7 ஒரு நாள் போட்டிகள் மட்டுமே இடம் பெற்றிருந்தது.
ஆனால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் செய்யப்பட்ட மாற்றம், சச்சினின் கடைசி டெஸ்ட் போன்ற காரணங்களுக்காக தான் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடர் நடத்தப்பட்டது. ஐ.சி.சி.,யால் ஒப்பந்தம் செய்யப்பட்டு இத்தொடர் நடத்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். (து)

Raja Plaza, 74, Palaly Road, Kondavil East, Jaffna

You Too Can Have A Car

**AQUA SHOWROOM**

**யாழ்மண்ணின் கார் காட்சியறை**

Hotline 077 3 169 433

/Aquaholding

www.aquaholding.lk

யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டே அமைச்சர் இல்லாமல் உங்கள் கனவு காரைப் பெற்றுக் கொள்ளுங்கள்



Permit முறைமூலம் வாகன இறக்குமதி

---

**வெள்ளைச் சல்லிக்கல் விற்பனைக்கு**

3/4" - 3/4 கியூப் - 5500/=, 1/2" - 3/4 கியூப் - 4000/=, 5நூல் - 3/4 கியூப் - 6500/= ஏற்று கூலியுடன்

தொடர்பு: 077 0776565

---

உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

---

**GERMAN LANGUAGE ACADEMY**

(ஜேர்மன் கல்லூரி)

ஜேர்மன் டொச் மொழிகள் இலகுவான வழியில் ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியரால் ஜேர்மன் தூதரகம் நடத்தும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு கற்பிக்கப் படுகிறது.

குறிப்பு:- ஜேர்மன் தூதரக அனுசரணையுடன் நடைபெறுகின்றன.

ஏற்கனவே கல்வி கற்று சித்தியடையாத மாணவர்களுக்கு எமது நிறுவனத்தினூடாக கற்பிக்கப்படும். கட்டணம் சித்தியடைந்த பின்பு அறவிடப்படும்.

YAAL TECH, கண்டி வீதி, சாவகச்சேரி. 077 9707322 GERMAN LANGUAGE ACADEMY, கண்டி வீதி, சாவகச்சேரி.

---

**கார் விற்பனைக்கு**

டாக்டர் ஒருவரின் பாவனையிலுள்ள HONDA BRAND NEW MODEL கார் விற்பனைக்குண்டு 301-xxxx

தொடர்பு:077 077 1981 (44934)(3.6.4)

---

**UK Student visa with work Permission**

உயர்தர கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் தன்னகத்தே கொண்ட **London** நகரில் நீங்களும் கல்விகற்க ஓர் அரிய சந்தர்ப்பம்

**May / June** இற்கான அனுமதிகள் தற்போது ஏற்று கொள்ளப்படுகின்றன

நீங்கள் ஏன் **Exponet** இனை தெரிவுசெய்ய வேண்டும்

- கடந்த 14 வருட காலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் UK உயர் கல்வி கனவை நனவாக்கி வெற்றி நடை போடுகின்ற ஸ்தாபனம்
- எமது நிறுவனம் ஐம்பதிற்கு மேற்பட்ட முன்னிலை வகிக்கின்ற கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிற்கு மிகத் தெளிவான ஆலோசனைகளையும், பகுதி நேர வேலை வாய்ப்புக்களுடன் கூடிய விசாக்களையும் பெற்றுக்கொடுக்கின்றது
- நீங்கள் தெரிவு செய்வது கல்லூரியாயின் 2-3 வருட காலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
- எம்மிடம் Student Visa அனுமதிக்காக இணைவோருக்கு IELTS வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
- சகல ஆவணங்களும் மிகத் திருத்தமாக சமர்ப்பிக்கப்படின் இரு மாதகாலங்களில் உங்கள் UK பயணத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்
- **Student Visa** தொடர்பான வழிகாட்டலில் யாழ் மாணவர்களின் அதிஉயர் நம்பிக்கையை பெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்

**Colleges**
- Yearly Payment £ 3500
- IELTS Overall : 4.5

**Universities**
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5 Each Band >5.0

வார நாட்களில் 9-5 மணிவரையும் வார இறுதியில் 9-2 வரையும் எமது யாழ்கிளையினூடாக முற்றிலும் இலவசமான UK Student Visa தொடர்பான ஆலோசனைகளை பெற்றுகொள்ள முடியும்

EXPONET Overseas Consultants

#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk

#197, Arasady Road, Jaffna. 021 7538395 | 021 2227230 Web: www.expogroup.lk

---

**இதோ வீட்டில் இருந்தே இணையத்தில் வருமானம் ஈட்ட அரிய வாய்ப்பு**

**(Capital Markets Trading)**

குறைந்தது ஒரு நாளைக்கு 20$ முதல் 30$ வரை வருமானம். எந்த முன் அனுபவமும் தேவையில்லை.

இலவச கருத்தரங்கிற்கு முன்பதிவு செய்ய முந்துங்கள்

(ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.)

தொடர்பு:077 552 7397/077 226 5154 (43184)(3.6.4)

---

**German Institute**

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Germany யிலிருந்து வந்த ஆசிரியரால் நடைபெறுகிறது.

அடுத்த பிரிவு 26.02.2014 ஆரம்பம்

தொடர்பு:077 160 4823

Mrs.Kajenthini (44986)(3.6.4)

---

**விற்பனைக்கு**

ஒரு மாதம் நிரம்பிய German Shepherd இன நான்கு நாய்க்குட்டிகள் (கறுப்பு நிறம்) உடன் விற்பனைக்குண்டு. ஒரு நாய்க்குட்டியின் விலை 25000/=

தொடர்பு:077 387 6842

நேரம்: 11.00 மணிக்கு பின் (29768)(3.6.4)

---

# பதவி வெற்றிடங்கள்

**சங்கென் ஸ்தாபனத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**



1. முன் அனுபவமுள்ள கட்டட பொறியியலாளர்கள் (Experienced Civil Engineers)
2. முன் அனுபவமுள்ள கட்டட பொருளியலாளர்கள் (Experienced Q.S With N.C.T or BSc and Prefered who are having Mep Experience also)
3. முன் அனுபவமுள்ள தரப்பராமரிப்பு தொழில்நுட்ப வியலாளர்கள் (Qa/Qc Technician in concrete/Buildings)
4. முன் அனுபவமுள்ள தொழில்நுட்ப உத்தி யோகத்தர்கள் (Experienced Technical Officers (Building))
5. முன் அனுபவமுள்ள நிர்வாக உதவியாளர்கள் (Experienced Admin Assistants in Civil contract field)
6. முன் அனுபவமுள்ள பட வரைஞர்கள் ((Experienced Draft Persons) prefered who are having the Mep knowledge also)
7. அனுபவமுள்ள, சிறந்த வாடிக்கையாளர்களைப் பராமரிக்கக் கூடிய பராமரிப்பு உத்தியோகத்தர். (Experienced in Bbuilding maintenance and Customers relation maintenance office)



விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஈமெயில் மூலம்: adminjaffna@sanken.lk

தபால் மூலம்:

நிர்வாக உத்தியோகத்தர், சங்கென் கென்ஸ்ரக்சன் (பிறைவேற்)லிமிற்ரெட், 31, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி12533)(12.3.6)

---

WANTED AGENT **முகவர்கள் தேவை** WANTED AGENT

60 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் 20000 இளைஞர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டிய இலங்கையின் ஒரே முன்னோடி தொழில் பயிற்சி நிறுவனமான

உடனடி தேவை **"ஜயலத்"** மாதம் ரூ. 100000 மேல் வருமானம்

தற்போது சிங்கப்பூர் அரசு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அங்கீகாரத்துடன்

**சிங்கப்பூரில் 18 வருடங்கள் 100% வேலை வாய்ப்பு**

உறுதி செய்யும் பயிற்சி நெறியை அறிமுகம் செய்கிறது

தகுதி:- வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள், காப்புறுதி முகவர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விற்பனை தரகர்கள், பிரதிநிதிகள், மற்றும் இல்லத்தரசிகள்

உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனை.....

**ஜயலத்** SLFEB L.L. NO: 2883

இல 69. ஜயலத் நட்டம் புதிய களனிபாலம் வீதி, ஒருகொடவத்த. கொழும்பு 14. (களனிதிஸ்ஸ பவர்அவுஸ் முன்பாக)

info@jceti.com www.jceti.com

011 5924886

---

**MBA**

**MASTER OF BUSINESS ADMINISTRATION**

General / Marketing / Finance / HR / IT

Duration : 1 year

TRUTH 1965 ALDERSGATE



**New Batch Starts on 02/03/2014 at 10.00 am.**

**Admission Requirements**

- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

**Accredited and UGC approved**

IIS CITY CAMPUS

200,Sivan Pannai Road,Jaffna.
Tel: 021 222 8080
Web: www.iis.edu.lk

மேலதிக விபரங்களுக்கு :

021 4 900 900

077 999 2484

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.